www.padippakam.com


Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
17-23.ஒக்.1993
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 21

## புலிகள் வடக்கில் வகுத்துவரும் நிர்வாக முறைகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



அன்று போனது கடுகதி யாழ்தேவி
இன்று போய்வந்தது ஒப்பரேசன் யாழ்தேவி

அரசியல் அலசல்



அரபாத்துக்கு ஆபத்தா?

உலக ரவுண்டப்

நகர ரவுண்டப்

ஒற்றன்

ஒரே உடலில் இரு தலைகள்



தகவல் பெட்டி

அதிசயம் ஆனால் உண்மை

தலையில் கொம்போடு வாழும் மனிதர்

■ ஆதாரத்தோடு அதிசயச் செய்தி! ■

இருந்தபடி கர்ப்பம் தரித்த பெண்

— மருத்துவ சாதனை —

குஷ்பூவின் குமுறல் — சினிசிப்ஸ்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
முரசின் வாசக நெஞ்சங்களை
ஏமாற்றிட நினைக்கும்
இலக்கியத் திருடர்கள்
ஆதார பூர்வமாக அகப்பட்டுக்கொள்கிறார்கள்.

'ஏமாற்றம்' என்ற தலைப்பில்
மீராவோடை ஸஜ்ஜாத் என்பவர்
அனுப்பிய கதை
தமிழக விகடனில் இருந்து
அன்னார் திருடி எழுதி அனுப்பியது.

இதில் இன்னொரு வேடிக்கை
முரசில் வருவதற்கு முன்னர்
நம்மூர் பத்திரிகை ஒன்றில்
வேறு ஒருவரும்
அக் கதையை திருடி எழுதியதும்
இப்போது அம்பலமாகிவிட்டது.

அதையும் முரசின் வாசக நெஞ்சங்கள்
ஆதாரத்தோடு சுட்டிக்காட்டியுள்ளனர்.

பெயர் எடுப்பதற்காக மட்டுமே
பெயர்த்தெடுத்து
இடைக்கிடையே சிறு மாற்றம் செய்து
எழுத்தாளர்களாகத் தம்மை
உயர்த்திக் காட்ட நினைப்பவர்கள்
முரசின் வாசக நெஞ்சங்களால்,
முகமூடிகள் கிழிக்கப்படுகிறார்கள்.

சிந்திக்கவும், சினப்படவும்
சுற்றிலும் நடக்கும்
அநியாயங்கள் இங்கு அதிகம்.
அவற்றை கதைகளாக்கி
களம்காணவைத்து
இலக்கிய தாகம் தீர்த்துக் கொள்ளலாம்.
வாசக நெஞ்சங்களும்
வரவேற்பார்கள்.

■

வடக்கை நோக்கி முன்னேறி
மீண்டும்
முகாம் திரும்பியிருக்கிறது இராணுவம்.

புயல்வீசி ஓய்ந்த பகுதிபோல
போர் நடந்த பகுதிகள்
யுத்த அரக்கனின் கரங்களால்
புரட்டிப் போடப்பட்டிருக்கின்றன.

மீண்டும் எப்போது
மறுபடி பாரிய மோதல்
நடைபெறும் என்பது தெரியவில்லை.
ஒரு குறிப்பிட்ட பகுதிவரை சென்று
மீண்டும் திரும்புவது
இராணுவத் தந்திரமாக இருக்கலாம்.
ஆனால்-அதனால் ஏற்படும்

மக்களது அந்தரிப்புக்கள்
சொத்தழிவுகள்-உயிரழிவுகள்
என்பவை பற்றி சிந்திக்க வேண்டாமா?

மக்களை மீட்கவே இராணுவ நடவடிக்கை
என்று படைத்தலைமையினர் சொல்கிறார்கள்.
ஆனால்-படையினர் முன்னேறும் பகுதிகளில்
மக்கள் அகதிகளாகி வெளியேறுகிறார்கள்.

புலிகளைப் பலவீனப்படுத்துவது
என்று நினைத்துக்கொண்டு
மக்களின் வாழ்க்கையே
பலவீனப்படுத்தப்படுகிறது.

வெறுமனே பலப்பரீட்சை
என்ற அளவில்
இராணுவத் தந்திரங்கள் வகுக்கப்பட்டால்
அடிக்கடி மக்கள்
அகதிகளாகிக் கொண்டிருப்பார்கள்.
உயிரிழப்புக்கள் தவிர
புலிகளுக்கு பெரிய பாதிப்பு
எதுவும் ஏற்படப் போவதில்லை.

ஆக மொத்தத்தில்
அரசியல் தீர்வு முயற்சிகள்
தெளிவான இலக்கின்றி
தடுமாறிக் கொண்டிருப்பது போலவே
இராணுவத் திட்டங்களும்
குறியற்றுப் போகும் என்றால்
பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதும்
பாதிக்கப்படப் போவதும்-
பரிதாபத்திற்குரிய மக்கள்தான்.

விமானக் குண்டு வீச்சுக்கள்
விடயத்தில்
ஏற்பட்டு வரும் பொதுமக்களின்
வெறுப்புக்களை
படைத்தலைமையும்-அரசும்
கவனத்தில் கொள்ளத் தவறினால்
தமிழ் மக்களின்
நம்பிக்கைகளை எப்போதுமே
பெறமுடியாமல் போகும்.

யுத்தத்தில் வெற்றியீட்ட
ஆயுதங்களும்-குண்டுகளும்
மட்டுமே போதும் என்று
எந்தத் தரப்புக் கருதினாலும்
அது அழிவுகளை உருவாக்கலாம்.
ஆதரவையோ-
அந்தத் தரப்புக்கு அநுசரணையான
மனப்போக்குகளையோ
உருவாக்காது.

■

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும் வரை

அன்புடன்
ஆசிரியர்.

## தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-18

### வெற்றிமுகம் கண்டதும் வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

இலக்கற்ற போரில்
இழப்பதற்கு
எதுவும் இல்லாமல் போனது
நான் மட்டுமல்ல.
சா. லிங்கேஸ்வரன்
புத்தளம்.

**பாராட்டுப்பெறும் கவிதைகள்**

என் பிள்ளைகள்
அடிபட்டுக் கொள்வதால்
என்னைப் போலவே
வாழ்க்கையும் இங்கே.
எம்.ஏ. பர்ஷான்
குருநாகல்.

**விதி**

கலவரம் மகனைக்,
கவர்ந்து விட்டதால்...!
வறுமை உடலை,
வதைக்கிறது.
அ. முஹம்மது ஆதில்
தலைமன்னார் பியர்.



**இயலாமை**

தெருவுக்கு
வருவதற்கு
தேசமே
காரணம்.
அஷ்ரபா- நூர்மன்
பாலையூற்று.

**நாயகி**

புத்தரின் போதனையை
இத்தரை உணர்வதற்கு,
நான்தான் தேவையென்றோ
நாயகியாய்- ஆக்கியது.
தர்ச்சிக்கா கனகசிங்கம்
மட்டக்களப்பு.

**உறங்காயோ?**

அக்கரையில் உள்ள மகள்
இக்கரையில் சேரும் வரை
கிளாலிக் கடலே நீ
சில நிமிடம் உறங்காயோ?
ஆர். யோகநாதன்
வவுனியா.

**மரணித்துவிட்டது**

மனிதம்,
மரணித்துவிட்டது,
தாய்மை தடுமாறுகிறது!
எஸ். செல்வமலர்
வவுனியா.

**"கொடிது"**

உன் பெருமூச்சு- வெப்பத்தில்
என் இதயமும்
உருகுது தாயே!
வறுமையின் இதயம்
இரும்பிலும் கொடிது!
மரிக்கார்
புத்தளம்.

**"பிச்சை"**

நாடே பிச்சை வாங்க,
நமக்கென்ன வெட்கம் என்று
நடுத் தெருவை நாடினாயோ?
கே. கார்மேகம்
பொகவந்தலாவ.

**புது யுகம்**

இந்த யுகத்தில்
இந்த வயதிலும்
எஞ்சியிருக்கும்,
பாக்கியம்.
பி. பவளராணி
வவுனியா.

**வெல்லும்**

இளமையை முதுமை
வெல்லும்
இயலாமையை முயற்சி
வெல்லும்
பிறேமலதா-நாவலப்பிட்டி.

**அ(வ)கதிகளாம்**

பாசங்களை பறிகொடுத்து
பாதையிலே பட்டினியாய்
பரிதவிக்கும் நாங்கள்
அ(வ)கதிகளாம்!!
செ. சுகுமார்-மாங்கேணி.

**எச்சங்கள்**

யுத்த அரக்கன்
சப்பித் துப்பிய
சக்கை.
வறுமையும்
வயோதிபமும்
வாட்டிடும்
யாக்கை.
செல்வன் ஐ. பர்ஸான்
சீகிரியா.

**உதறிய ஊனம்**

வாலிபம்
உதறித்
தள்ளியதால்
ஊனமாய்
கிடக்கிறது
உயிர் ஒன்று!
பாத்திமா ஷானா
ஆலம்குளம்.

**பழைய கிளி**

இருண்ட
போர்க்களத்தில்
இன்னும்
இரையைத்தேடும்
இலவுகாத்த
பழைய கிளி
கந்தையா காந்தரூபன்
பூண்டுலோயா.

**கொடுமை**

கொடிது
கொடிது
வயோதிபத்தில்
வறுமை கொடிது.
பா. தர்சன்
பேராதனை.

**அகராதி**

வறுமைக்கு
அகராதியில்
பொருள் தேடாதீர்கள்.
நானிருக்கும் வரை
எம். றியாஸ்
உலப்பனை.

## கவிதைப் போட்டி இல-21



*மேலே உள்ள படம் கண்டதும் உங்கள் உள்ளத்தில் உருக்கொள்ளும் உணர்வுகளை மடலில் பதிவு செய்யுங்கள். எமக்கு அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு முதல் பரிசு ரூபா 100/=. தபாலட்டையில் பதிவு செய்து எமக்கு அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.10.1993.*

-முகவரி-
கவிதைப் போட்டி இல:21
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

## அட... கமரா உலா! நீங்கள் ரெடியா?

*உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில்படும் வியப்பான - வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட.... கமரா உலா' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன. முகவரி-*

அட...கமரா உலா!
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -5.

# வாசக(ர்)சாலை

ஏமாற்றி விட்டார் இலக்கியத் திருடர்!

தவறாது தினமுரசு படிக்கும் தீவிர வாசகர்களுள் நானும் ஒருத்தி. எதைப் படிப்பது எதை விடுவது என்று திணற வைக்குமளவுக்கு செய்திகளை சுவாரசியமாக வழங்கும் திறமை வியக்க வைக்கிறது. அத்துடன் உடனுக்குடன் விரைவாக செய்திகளைத் தரும் தினமுரசை பாராட்டியே ஆக வேண்டும். இலக்கியத் தாகம் உள்ள என்னைப் போன்றவர்களுக்கு "இலக்கிய நயம்", தேன் கிண்ணம்" போன்ற பகுதிகள் தீனி போடுகின்றன. அரசியல், அலசல் விறுவிறுப் பாகவும், நியாயமான கருத்துக்களை முன்வைக்கத் தயங்காமலும் அரங்கேறுகிறது.

30.09.93 அன்று தினமுரசு கைக்கு கிடைத்தது. தினமுரசில் எதையும் விடாமல் படித்து விடுவேன். "ஏமாற்றம்" என்ற கதையை வாசித்தபோது எங்கேயோ வாசித்தது போல இருக்கிறதே என்று பொறி தட்டியது. வீட்டில் இருந்த இந்திய சஞ்சிகைகள் அத்தனையையும் பக்கம் பக்கமாகப் புரட்டினேன். அதன் விளைவுதான் இந்தக்கடிதம். இத்துடன் அந்த கதையையும் அனுப்பியுள்ளேன். (21.2.93) விகடன் நீங்களே ஒப்பிட்டுப் பாருங்கள். பெயர் மட்டுமே வித்தியாசம். ஆசிரியர் அவர்களே! வளர்ந்து வரும் தரமான பத்திரிகையான தினமுரசில் இப்படி ஒரு தவறு ஏற்படலாமா? "ஏமாற்றம்" என்ற கதை மூலம் எங்கள் எல்லாரையும் ஏமாற்றப் பார்த்தாரா மீராவோடை எல்.டி.ஏ.ஸஜ்ஜாத்?

**அன்பு வாசகி- ஆர்.கே.கௌரி**
**கொழும்பு-6.**

•

அன்பின் தினமுரசே, நீ சுமந்துவரும் ஒவ்வொரு அம்சங்களும் தேனிலும் சுவையானது. வாரம் தோறும் உன்னைச் சுவைக்காவிட்டால் என் உறக்கம் தொலைந்துவிடும். முரசே! வாழவேண்டும் உன் பட்டம். வளர வேண்டும் உன் சேவை.

**செல்வி. நிஸ்வானா ஏ.ஹமீட்-அக்குறனை.**

•

கண்ணுக்கும், கருத்துக்கும், சிந்தைக்கும் விருந்தளிக்கும் என் அபிமான முரசே!

வாழ்க்கைக்கு வழிகாட்டும் வண்ண முரசே! உன் புதுப் பொலிவைக் கண்டு பூரிப்படையும், உள்ளங்களுக்கு நீ ஒரு புது (பொது) அரசே! என்றும் என் தினமுரசே!

**ம.மு.ரஞ்சன் துரைசிங்கம்-நோட்டன்.**

•

தித்திக்கும் தேனமுதாய், சிந்தைக்கு நல்விருந்தாய் வாரம் தோறும் எங்கள் வாசல் வந்து மகிழ்விக்கும் உன்னை வாஞ்சையோடு வரவேற்கிறோம்.

**கே.கருணாகரன்-திருகோணமலை.**

•

என் இதயத்தில் பதிவுகொண்ட தினமுரசே! வாரம் தோறும் உன் ஆக்கங்கள் கூட வேண்டும்.

எம்.விஜேந்திரன்-பதுளை, கே.வி. சத்தியமூர்த்தி-தலவாக்கொல்லை, கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய, திருமதி- என். விஜயகுமார்- மட்டக்களப்பு, ரிஸ்னி அஹமத்-வேயன்கொடை, எம்.எப்.எம். இஹ்ஸான்-பேருவளை, மனோஜ்திவாகர் மூர்த்தி- நமுனுகல, என். டயஸ் பெர்னான்டோ-பெரியநீலாவணை, சோ. செல்வ மலர்-வவுனியா, எம்.ஏ.எம். லாபீர்-கிண்ணியா, செல்வி. கரீமா ஹஸன்-உக்குவெல, இ. திலகராஜ்-தம்பிலுவில்-02, எம்.எஸ்.எப்.அறபா-பேருவளை, எம்.மலர்-கொழும்பு-07, எஸ்.சிவயோகம்-அக்கரப்பத்தனை, செல்வி. றிஸ்னா நிசார்-தெலியாகொன்ன, செல்வி.எம். மாரியம்மா-தெபுவன, ஏ.ஆர். றியாஸ், றியாத், றிஸ்வான், றிஸ்வி-நிலாவெளி-01, எஸ். கருணாகரன்-அப்பர்கலஹா, பி.ராஜேஸ்வரி-களுத்துறை, கலாதேவி-கம்பளை, எஸ். கிசாந்தி-மத்துகம, ஏ.என்.எம். ஜவாத்-புத்தளம், முஹம்மது நாஸிர்-கண்டி, த. மதிவதனி-கலஹா, எஸ்.சிவகுமார்- புப்புரஸ்ஸ, கருப்பையா சகாதேவன்-வெதமுல்ல, ஹஸ்மத் பர்ஸானா- மூறுத்தகஹமுள, எம். அமிர்தராஜா, எம்.யோகா, எம். யோகேஸ், எம்.ஏ.ராஜா-மஸ்கெலியா, ஏ. ஸ்டீபன்-ஹட்டன், எம். இராஜேஸ்வரி-தெபுவன, ஏ. மகிழைசீலன்-மட்டக்களப்பு, இனிகலை முஜீப்-கண்டி, கி. மோகனராஜா-வாழைச்சேனை, பர்ஸான் இஸ்மா, டபீல், இப்திகார்- உடதலவின்ன, எஸ். சாமிலா- மூதூர்-05, செல்வி. பத்மா செல்லமுத்து-கொழும்பு-10, எம்.எஸ்.எப். ஜனுதீன்-வாழைச்சேனை, செல்வி. நல்லமுத்து சரஸ்வதி-நோர்வூட்.

உன் வளர்ச்சி எல்லை இல்லாமல் வளர்ச்சியடைய வேண்டும் இன்ப முரசே.

செ.ரவிச்சந்திரன்-மத்துகம.

•

என் தாகங்களைப் போக்கி விட்ட தினமுரசே!

என் இதயத்தை அல்லவா திருடி விட்டாய். உன் வரவில் தித்திக்கும் தீங்கரும்பாய் இனித்து நிற்கிறதே அத்தனையும்.

**எம்.எல்.வஹாப்டீன்**
**அக்கரைப்பற்று.**

•

வாரந்தோறும் வந்தெம்மை
வாரியணைக்கச் செய்யும் வாரமலரே, நீ வாசனையுடன் வாரி வழங்கும் ஆக்கமனைத்தும் சுவையிலும் சுவை. இன்னும் உன் தேன் சுவை பெருக என் வாழ்த்துக்கள் பற்பல!

**திருமதி. செ.ரெபேக்கா-நுவரெலியா.**

•

'நீசத்தனத்தின் நிதர்சனங்களை
நிகழ்கால நிகழ்வுகளை
மானுடத்தின் பிரதிபலிப்புகளை
கலையம்ச தத்துவங்களை
பிழையாமல், பிசகாமல்
கலையாமல், குலையாமல்
தரும் தினமுரசே நீ வாழ்க!'

**றிஜானா ஏ.மஜீத்**
**இக்கிரிகொல்லாவை.**

•

என் இனிய இதய (தின) முரசே, எப்போ வியாழனின் விடியல் என எமை ஏங்க வைத்து விடுகிறாய். நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் மிக மிக அருமை. இதுவரை நாம் அறிந்திராத பல விந்தைச் செய்திகளை அள்ளித் தருகிறாய். மற்றும் லேடீஸ் ஸ்பெசல், தேன் கிண்ணம் ஆன்மீகக் கருத்துக்கள் அப்பப்பா மொத்தத்தில் காலங்காலமாக பாதுகாக்கப் படவேண்டிய அரிய பொக்கிஷம் நீ.

**செல்வி.எல்.ஜெயந்தி-கிளிநொச்சி.**

•

அன்பின் தினமுரசே
எல்லோருக்கும் உண்ட பின் தான் பசி போகும். ஆனால் எனக்கோ உன்னை கண்டபின் தான் பசிபோகும். வாரம் ஒரு முறை பசி தீர்க்க வரும் உனக்கு என் பாராட்டுக்கள் பல.

**ஏ.எம். பைசல்-கம்பளை.**

•

யோவ்! ஏதோ தினமுரசை பத்திரப்படுத்த முனைந்தால் முடியாது போலிருக்கிறதே! அதை நீரே வெட்டி குறுக்கெழுத்துப் போட்டியை ஒட்டி அனுப்பச் சொல்லியிருக்கிறீரே! ஏன் போட்டியை பத்திரிகையின் ஒரு மூலையில் வெட்டுவதற்கு தோதாக அதன் நேர்மறு பக்கத்தில் கவிதைப் போட்டியை போட்டால் குறைந்தா போய்விடுவீர்? ஓ...அய்யேம் சொறி!

**வி.சாமி-டயகம.**

•

குறுகிய காலத்தில் பல்லாயிரம் நெஞ்சங்களில் இடம் பிடித்து விட்ட தினமுரசே, நீ சுமந்து வரும் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் அருமை யானவை. அதிலும், அதிரவில்லை அசைய வில்லை, வீடு எரிந்த போதிலும் என்ற அம்சம் எம்மை திகைப்பூட்ட வைத்தது. அரசியல் கட்டுரைகள் அபாரம். அரிய பல தகவல்களை அள்ளி வழங்கும் தினமுரசே வாழ்க முரசு! வளர்க உன் பணி.

**செல்வி.பாத்திமா றஹீம்-உக்குவெல.**

•

தினமுரசு வெளிவர ஆரம்பித்ததில் இருந்து நாம் நல்ல ஆசானை பெற்றுவிட்ட திருப்தி. புதுமை, தரம் குன்றுவதே இல்லை. சிறுவர் முதல் வயோதிபர் வரை உனது பெயரை உச்சரிக்க வைத்து விட்டாய். இது உனது தனிச்சிறப்பு. வளர்க உனது பணி.


**சி.பிரதீபன்-கொழும்பு-06.**

•

வாரம் ஒருமுறை வலம் வரும் முரசே. நீ வாரி வழங்கும் அத்தனையும் நல்முத்து. தேன்கிண்ணம் தெவிட்டாமல் இனிக்கிறது. வாலிபர் முதல் வயோதிபர் வரை உன் வரவுக்காக காத்திருப்பதுதான் என்ன மர்மமோ?

**எஸ்.கலாதாசன்-நானுஓயா.**

•



கண்ணுக்கு மையழகு
கவிதைக்கு பொய்யழகு
நாளுக்கு ஞாயிரழகு
எங்களுக்கு தினமுரசழகு.

**ரமீஷ். ஹக்மான்,சிப்ரி-நுரைச்சோலை.**

•

"சினிமாவின் சித்திரமும் சிங்காரத் தொடர் கதையும் கனிவோடு குறளமுதும், கலந்து வைத்த கவியரங்கும்
துணிவோடு அரசியலும் துலங்கவரும் தினமுரசே பிணியகல சில வழிகள் பெருமையுடன் தருவாயா."

**சீனித்தம்பி-செல்வநாயகம்**
**கொழும்பு-15.**

# போருக்குத் தயாராகுமாறு புலிகள் அழைப்பு! இன்னொரு தாக்குதலுக்கு அரசு ஆயத்தமாம்!!

(யாழ் நிருபர் வர்மா)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை அடுத்து இன்னுமொரு பாரிய தாக்குதலுக்கு அரசு ஆயத்தம் செய்து வருவதாக புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

புலிகளின் அரசியல் பிரிவு அறிக்கை ஒன்றை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ளது.

இன அழிவுப் போர் தொடங்கி விட்டது. பொதுமக்களை இலக்காகக் கொண்ட பெரும் போர் ஒன்றினை படைகள் ஆரம்பித்து விட்டன.

இன்னொரு முறையால் படையெடுப்பை நடத்தப் படைகள் ஆயத்தம் செய்கின்றன. அதற்காக இருபதினாயிரம் படைகள் ஆயத்த நிலையில் வைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு புலிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யாழ் குடாநாட்டில் போர்க்காலக் கருத்தரங்குகளும் மீண்டும் நடைபெறத் தொடங்கியுள்ளன.

"படிப்பது, வேலை பார்ப்பது எவ்வளவு முக்கியமோ, அவற்றை விட போராடுவது முக்கியம்." இவ்வாறு போர்க்காலக் கருத்தரங்கொன்றில் உரையாற்றிய புலிகள் இயக்கப் பிரமுகர் வாஞ்சிநாதன் என்பவர் கூறியுள்ளார்.

போருக்கான தயாரிப்புக்களில் புலிகள் அமைப்பினர் தீவிரம் கொண்டுள்ளதையும், அதற்கான பொதுமக்கள் ஆதரவை திரட்டுவதில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சுச் சம்பவங்கள் புலிகளின் பிரச்சாரங்களுக்கு நன்கு பயன்பட்டு வருகின்றன.

இதே வேளையில் யாழ் குடாநாட்டில் ஹெலிகளும், விமானங்களும் தொடர்ந்தும் கண்காணிப்பில் ஈடுபட்டுவருகின்றன. தாக்குதல்களும் இடைக்கிடையே நடைபெறுகின்றன.

போரைத் தொடர அரசு முடிவு செய்துள்ளதாகவும், அதிகளவான நிதி ஒதுக்கப்படுவதாகவும் புலிகள் அமைப்பினர் கூறியுள்ளனர்.

கிளாலிவரை முன்னேறிச் சென்றதன் மூலம் படையினர் தமது பலத்தை நிரூபித்து விட்டனர். பொதுமக்களையோ, பொதுமக்கள் பயன்படுத்தும் பாதைகளையோ, பயன்படுத்தித்தான் நாம் முன்னேற வேண்டும் என்று அவசியமில்லை. இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

கிளாலியில் இருந்து படைகள் திரும்பிச் சென்றது தமது தாக்குதலுக்கு அஞ்சியே என்று புலிகள் கூறியுள்ளனர்.

## "இந்தியப்படை- புலிகள் மோதலில் 973 புலிகள் பலி."

இந்தியப் படைக்கு எதிராக தாம் நடத்திய யுத்தத்தில் தமது தரப்பில் 973பேர் பலியானதாகப் புலிகள் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

யுத்தம் தொடங்கிய 6வது ஆண்டைக் குறிக்கும் முகமாக இம்மாதம் 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் அந்த விபரம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்தியப்படையினர் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை கொலை செய்ததாகவும் புலிகளின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தியப் படை அமைதிப்படை என்ற பெயரில் இலங்கை அரசுக்கு உதவி செய்தது. வடக்கு-கிழக்கில் 600 முகாம்களை அமைத்திருந்தது. இந்த யுத்தத்தின் மூலம் இந்திய அரசின் முகம் உலகுக்கு இனம் காட்டப்பட்டது என்றும் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அட்டகாச யானை கொட்டமடிக்கிறது உயிர்கள் பலி! பயிர்கள் நாசம்!!

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை- அம்பாறை பிரதான வீதியில் வளத்தாப்பிட்டிப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக இப்பகுதியால் பிரயாணம் செய்யும் பயணிகள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

சமீபத்தில் அம்பாறையிலிருந்து கல்முனை நோக்கி வந்த பயணிகள் வான் ஒன்று மேற்படி வளத்தாப்பிட்டிப் பகுதியில் யானை ஒன்றினால் தாக்கப்பட்ட போது அந்த வானில் பயணம் செய்த இருவர் மரணமடைந்ததுடன், பத்தொன்பது பேர் படுகாயங்களுடன் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் தமிழ், முஸ்லிம் மக்களின் நெற்பயிர்கள், தெங்குத் தோட்டங்கள் நாசமாகி வருவது போதாதென்று இப்பொழுது பிரயாணிகளையும் 'பதம்' பார்க்கத் தொடங்கி விட்டன.

யானைகளால் ஏற்படும் அழிவுகளுக்கு நஷ்டஈடுகள் ஏதாவது வழங்கப்படுவதாகவும் இல்லை!! பாவம், பரிதாபத்துக்குரிய மக்கள்.



யானை மோதிப் பார்த்ததாலே வானுக்கு நேர்ந்த சேதம்.

## லங்கா பே! இங்கேயும் வா!!

(கல்முனை நிருபர்)

கல்முனை, மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து அதிகமானோர் கொழும்பு செட்டியார் தெருவுக்கு நகை வியாபாரம் ச்ம்பந்தமாக வருவதுண்டு. இவர்கள் தொலைபேசித் தேவைக்காகப் பெறுமதியான உடமைகளுடன் ரெலிபோன் பூத்தைத் தேடி அலைய வேண்டி இருக்கின்றது. பீப்பிள்ஸ் பார்க், மெயின் வீதி, அல்லது கொச்சிக் கடைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது என்று குறைப்பட்டுக் கொள்கின்றார்கள்.

நாட்டின் முக்கிய வியாபார நிலையங்கள் உள்ள பகுதிகளில் ஒன்றான செட்டியார் தெருவில் ரெலிபோன் பூத் அமைக்க வேண்டிய அவசியத்தை லங்கா பே போன் கவனத்தில் எடுக்காதது ஏனோ என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்புடன், அவசிய தேவையை நிறைவு செய்யக்கூடியவாறு செட்டியார் தெருவில் ஒன்றோ இரண்டோ 'பூத்'களை லங்கா பே போன் நிறுவித்தர வேண்டும் என நகை வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

லங்கா பே போன் இதைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம்.

## தொட்டதால் பட்ட காயம்!

யாழ்ப்பாணம் கச்சாய்க் கடலில் மிதந்து வந்த பொருள் ஒன்றைக் கண்ட நான்குபேர் அதனைப் பரீட்சித்துப் பார்த்தனர். அப்பொருள் வெடித்ததினால் நால்வரும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தருவது தமிழகச் செய்திகள் ஏழுமலை

# அனுதாபம் தேட கலைஞர் முயற்சியா? கடும்பாதுகாப்பு! கூட்டங்களும் இரத்து! கொலைச் சதிச் செய்தியால் பரபரப்பு!!

தமிழ் நாட்டில் இலவச சேலைத் திட்டம் மாநில அரசால் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

சமீபத்தில் பழநித் தொகுதியில் இலவச சேலை வாங்கச் சென்ற 12 பெண்கள் கூட்ட நெரிசலில் மிதிபட்டு இறந்தார்கள்.

கூட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிசார் தவறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

■

தமிழக முதல்வர் ஜெயலலிதா அரசியலில் காலடி எடுத்து வைத்தபோது அவரைக் கடுமையாக எதிர்த்தவர் எஸ்.டி.சோமசுந்தரம்.

எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவை வளர்த்து விடுகிறார் என்று கட்சிக்குள் பிரச்சனை கிளப்பியவர்.

இப்போது ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அமைச்சராக இருந்து வருகிறார்.

காங்கிரஸ் கட்சி மீது கடும் தாக்குதல் நடத்தி எஸ்.டி. சோமசுந்தரம் பெயரில் அறிக்கைகள் வருகின்றன.

அண்மையில் காங்கிரஸ் கட்சியைக் கிழித்து ஒரு அறிக்கை அவரது பெயரில் பத்திரிகைகளுக்கு கொடுக்கப்பட்டது. அதில் வேடிக்கை என்னவென்றால் அந்த அறிக்கை வெளியான போது அவர் சென்னையில் இருக்கவில்லை.


■

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக அறிவித்ததை யாருமே சீரியசாக எடுத்துக்கொள்ளவில்லை.


தொண்டர்கள் திரள்வார்கள். ஒதுங்க வேண்டாம் என்பார்கள். தொண்டர்களுக்காக தொடர்ந்து இயங்குவேன் என்று கலைஞர் அறிக்கை விடுவார் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அப்படியேதான் நடந்தது. முடிவை மு.க.மாற்றிக் கொண்டார்.

முன்னரும் கலைஞர் கருணாநிதி இவ்வாறு அறிவித்திருக்கிறார். பின்



மு. கருணாநிதி



வாழப்பாடி

தொண்டர்கள் விருப்பம் என்று முடிவை மாற்றியும் இருக்கிறார்.

புலிகளால் கலைஞர் கருணாநிதிக்கு ஆபத்து என்று இந்திய மத்திய அரசின் உளவுப் பிரிவு தமிழக அரசுக்கு அறிவித்திருக்கிறது.

இப்போது அவருக்குக் கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

வை.கோபாலசாமிக்கு ஆதரவாகவே புலிகள் கலைஞரைக் கொல்ல சதி செய்வதாகச் செய்திகள் வந்தன.

வை.கோபாலசாமி செய்தியில் உண்மையில்லை அதுசதி என்கிறார்.

கலைஞரால் வளர்க்கப்பட்டவன் நான். அவர் மீது தூசு விழுந்தாலும் தாங்க மாட்டேன் என்று வை.கோபாலசாமி கூறியிருக்கிறார்.

ஆனால் கலைஞரோ வை.கோபாலசாமி மீது கோபம் கொண்டவராகவே இருக்கிறார்.

வை.கோபாலசாமி மீது அனுதாபம் ஏற்படாமல் தடுக்கவே அரசியலில் இருந்து ஒதுங்கப்போவதாக கலைஞர் அறிவித்தார். அதன் மூலம் தொண்டர்கள் கவனத்தை தன் மீது திருப்பிவிட்டிருக்கிறார் என்று வை.கோ வட்டாரம் கூறுகிறது.

கலைஞரைக் கொல்லுவதற்குப் புலிகள் திட்டமிட்டுள்ளது மூலம் அவர்களது நன்றி கெட்டதனத்தை இப்போதாவது கலைஞர் உணர்ந்துக் கொள்வார் என்று நம்புகிறேன் என்று தமிழக காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு.வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

கலைஞருக்கு முழுப்பாதுகாப்பு கொடுக்க வேண்டும். புலிகளது நடமாட்டத்தை தமிழ் நாட்டில் கட்டுப்படுத்த வேண்டும் என்று தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

புலிகள் சதி என்பது மத்திய அரசின் கட்டுக்கதை என்று வை.கோபாலசாமி வட்டாரம் கூறியுள்ள போதும் கலைஞர் அவ்வாறு கருதவில்லை.

தமிழக அரசின் பாதுகாப்பு ஏற்பாடுகளை எற்றுக் கொள்வதாகக் கலைஞர் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஒரு சில பொதுக்கூட்டங்களையும் இரத்துச் செய்தும் இருக்கிறார்.

இதே வேளை இந்திய மத்திய அரசின் உளவுத்துறை அதிகாரிகள் தமிழகத்தில் முகாமிட்டு புலிகளின் நடமாட்டங்கள் பற்றி விசாரித்து வருகிறார்கள்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமது கருணாநிதியைப் பாதுகாப்பதில் அவரது கட்சியினர் விழிப்போடு செயல்பட வேண்டும் என்று அறிக்கை விடுத்துள்ளார்.

திரு. ப. நெடுமாறன் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ் ஆகியோர் புலிகளின் சதி என்பது கட்டுக்கதை என்று கூறியுள்ளனர். ■

இயற்கையின் சீற்றத்தால் தம் இனியவர்களைப் பறிகொடுத்தும், இருப்பிடங்களை இழந்தும், உடமைகளைத் தொலைத்தும் தவிக்கின்ற இரத்தினபுரி வாழ் மக்களின் சோகத்தை தினமுரசும் பகிர்ந்துகொள்கிறது. ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறது.

## "எவராயிருந்தா எனக்கென்ன? ஜனாதிபதிக்கும் இதுதான்!"

(கண்டி நிருபர்)

"எனது அடையாள அட்டையைக் காண்பித்தும் என்னை அவமானப்படுத்தும் வகையில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நடந்து கொண்டார். "உம்மை மட்டுமல்ல ஜனாதிபதியையும் கூட நான் சோதனை செய்வேன்," என்றும் அந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் கூறினார். அங்கு பல பேர் முன்னிலையில் அவர் இவ்வாறு நடந்து கொண்டதால் அந்தச் சம்பவம் என்னைப் பெரிதும் அவமானத்திற்கு உள்ளாக்கி விட்டது. முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வருகிறேன்."

இப்படி மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் பேசிய உறுப்பினர் திரு.ஆர். தங்கவேல் மேற்கண்டவாறு கூறினார்.

பயங்கரவாதிகள் என்ற போர்வையில் இவ்வாறெல்லாம் எமக்கு இப்படியான சோதனையென்றால் சாதாரண மக்களின் நிலை என்னவாகும் என திரு தங்கவேல் சபையில் முதலமைச்சர் முன்னிலையில் கூறியபொழுது ஏனைய உறுப்பினர்களும் தங்களுக்கு அடிக்கடி ஏற்படும் தொல்லைகள் குறித்தும் அதிருப்தியைத் தெரிவித்தனர். இது இனிமேல் தொடரக் கூடாதெனக் கூறிய முதலமைச்சர், உடனடியாக மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபருக்கு விடயத்தை எட்ட வைப்பதாகக் கூறிய உறுதிமொழியை சபை ஏற்றுக் கொண்டது.

## புலிகளுக்கு உதவி என்று சந்தேகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு, கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டு வருவதாக அறியப்படுகிறது.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் சில இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் புலிகள் அமைப்பினருக்கு உதவி வருவதாக சந்தேகிக்கப்படுகிறது. அதனையடுத்தே சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமது சுதந்திரமான செயல்பாடுகளுக்கு தடை விதிக்கப்படுவதாக தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் சிலர் தெரிவிக்கின்றனர்.

இதே வேளையில் மட்டக்களப்பில் உள்ள தமிழ் அதிகாரிகள் நான்கு பேர் மட்டக்களப்பை விட்டு வெளியேறக்கூடாது எனத் தடுக்கப் பட்டுள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விடுதிப் பிரச்சனையால் வேறு இடம் தேடும் வைத்தியர்கள்!

(திருகோணமலை நிருபர்)

வட-கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தின் கீழுள்ள, ஆதார வைத்திய சாலைகள் பலவும் உடனடியாக மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

அம்பாறை, கல்முனை, வவுனியா, திருகோணமலை ஆகிய ஆதார வைத்தியசாலைகளுடன் கந்தளாய் மாவட்ட வைத்தியசாலையும் மத்திய அரசின் நேரடி நிருவாகத்தின் கீழ் வருகின்றது.

இச் செய்கை வட-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரங்களைக் குறைக்கும் நோக்கத்துடனானது என்று, மாகாண சபை வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கும் திருகோணமலை வைத்திய சாலை அண்மையில் மாறுதல் பெற்று வந்தவர்களைத் திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டள்ளதா எனக் கேட்கப்படுகிறது.

வைத்திய நிபுணர் சிவசுமித்திரன் தனக்குரிய அரசாங்க விடுதி வழங்கப் படாமையினால், வவுனியாவுக்கு இட மாற்றம் கோரிப் பெற்றுள்ளார். வைத்திய நிபுணர்களுக்கான விடுதியில் நிர்வாகத் துறையினர் குடியிருந்து வருவதாலேயே இச் சிக்கல் எழுந்துள்ளது.

இவ் வைத்திய நிபுணர் கடந்த மாதம் தான் திருகோணமலைக்கு மாற்றம் பெற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடுதிப் பிரச்சனை மேலும் பல வைத்திய நிபுணர்களை இடமாற்றம் கோரத் தூண்டியுள்ளதாகவும் அறியப் படுகின்றது.

(சிறு விளம்பரப் பகுதி)



## மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex, NUWARA ELIYA.**
**Dial: 052-2508 & 3093**
**Celltel. 072-26088, 078-61933**

**COLOMBO BRANCH:**
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. FAX: 0094-523093

## தேவை

*ஐந்து பேர் (பெரியவர்கள்) கொண்ட குடும்பம் ஒன்றிற்கு, இரு அறைகளுடன் கூடிய ரூபா 3000இற்கு மேற்படாத வாடகையில் வீடு தேவை. புரோக்கர்கள் வேண்டாம்.*

தொடர்புகளுக்கு: No.3, 1st Chappel Lane,
Wellawatta,
Colombo-6.

## SARIKA TEX

Ladies Tailoring
*24 மணிநேரத்தில்*
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
*Hewa Shopping Complex*
*No. 69/5-1/1, 1st Floor,*
*Galle Road,*
*Dehiwela South.*

## கண் ஒளி பெற காத்திருக்கிறார்கள்



கண்டியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கண்பார்வை நிலையத்தில் சிகிச்சை பெற்று கண்பார்வை பெறக்காத்துள்ளவர்கள்.
படமும் - செய்தியும் கண்டி நிருபர்.

## காதுகொடுத்துக் கேட்காத கோரிக்கை! குருநாகல் முஸ்லிம்களின் பிரச்சனை!!

(குருநாகல் நிருபர்)

குருநாகல் நகரத்தில் முஸ்லிம்களுக்குத் தனியான கலாசார நிலையம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு கடந்த பல ஆண்டுகளாக காலமாகக் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

இன்னும் அதற்கான இடத்தைப் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

குருநாகல் நகரத்தில் 80சத வீதமானோர் முஸ்லிம்களாக இருந்தும் அவர்களின் கோரிக்கை மறுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நகரத்தில் ஏனைய சமூகங்களுக்குத் தனித்தனியான கலாசார நிலையங்கள் இருந்து வருகின்றன.

குருநாகல் குளத்துக்கு அருகில் இதற்காக ஒதுக்கப்பட்ட 40 பேர்ச்சஸ் காணித் துண்டு தரிசு நிலமாக இருந்து வருகின்றது.

இது பற்றி குருநாகல் மாநகர சபைக் கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர் அல்ஹாஜ் எஸ்.ஏ.எஸ். தஸ்லிம் ஜே.பி. அவர்களினால் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டது. இன்னும் செயற்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

குருநாகல் மாவட்டத்தில் பரவலாக வாழ் முஸ்லிம்கள் குருநாகல் நகருக்கு வந்து செல்லும் போதும் விழாக்கள், கூட்டங்களை நடாத்த பெரிதும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

## திருமலையில் ஒரு சிறப்பான கண்காட்சி!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் விஞ்ஞானப்பகுதி கல்விப்பணிப்பாளர் செல்வி கு. சதாசிவம் அவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சி அக்டோபர் முதலாந் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

அண்மைக்காலக் கல்வி வரலாற்றில் இதுவே மிகப் பெரிய கண்காட்சியாகும். திருகோணமலை மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் தங்கள் விஞ்ஞான கணிதத் திறமைகளை இக் கண்காட்சியில் வெளிப்படுத்தியிருந்தன.

மாணவர்களது விஞ்ஞான ஆற்றலைப் புலப்படுத்து முகமாகவும் பொதுமக்களிடம் விஞ்ஞான அறிவைப் பரப்பு முகமாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட அக்கண்காட்சியை கிழக்கு மாகாண பணிப்பாளர் திரு.கே.தியாகராசா திறந்து வைத்தார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-20

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| | 3 | | 4 | | ■ | |
| | ■ | 5 | | | | 6 |
| | ■ | 7 | | | | ■ |
| ■ | 8 | | | ■ | 9 | ■ |
| | 10 | | ■ | 11 | | |
| ■ | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

1. தொடர்புகளுக்கு ஒரு நல்ல துணை.
2. மனிதனுக்கு மிக அவசியம்.
3. இங்கே இதற்கு விலை கூடும் குறையும்.
5. சுவைகளில் ஒன்று.
7. முரசின் தகவல் பெட்டியில் இருப்பவரை இவ்வாறு சொல்லலாம்.
8. காந்தியை இப்படியும் அழைப்பார்கள்.
10. பல வர்ணங்களில் இது உண்டு. (வலமிருந்து இடமாக உள்ளது)
11. இதற்குக் காளான்கள் எதிரி.
12. சூரியனைக் கண்டால் இதற்குச் சந்தோசம்.

### மேலிருந்து கீழ்

1. குழந்தைகளுக்கு இதுதான் பஞ்சணை.
4. திருடர்களுக்குப் பிடிக்காதவன்.
5. உதவியின் மறுபெயர்.
6. பாலைவனங்களில் அதிகம் இருக்கிறது.
8. நடுங்க வைக்கும் பாம்பு இதைக் கண்டால் ஆடும்.
9. இது இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது என்று ஒரு பழமொழி உண்டு.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 23.10.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். (அஞ்சலட்டைகளை மாத்திரம் உபயோகிக்கவும்)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-20**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-18க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ந | ட் | ச | த் | 2 தி | ர | ம் |
| ங் | ■ | ■ | 3 க | சை | ய | டி |
| கூ | 4 பா | த | ணி | ■ | 5 ப | ■ |
| ர | த | ■ | த | ■ | ளி | 6 ப |
| ம் | ர | 7 வீ | ம் | 8 ம | ங் | கை |
| ■ | 9 ச | தி | ■ | ர | கு | வ |
| 10 ச | ம் | ப | ள | ம் | ■ | ர் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.18இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ய. நிரூஷா
   திருகோணமலை.
2. எஸ். ராமராஜ்
   நீர்கொழும்பு.
3. என். அஸ்வர்கான்
   புத்தளம்.
4. ஏ. தர்சிகா
   கண்டி.
5. பி. ரகுதேவன்
   கொழும்பு-5:
6. ச. சிகாமணி
   நுவரெலியா.
7. திருமதி. வி. நல்லதம்பி
   காத்தான்குடி.
8. எஸ்.ஏ.எம். பலீல்
   அம்பகஸ்தோவ.
9. எம். றசீதியா
   மட்/ அறபா வித்தியாலயம், ஏறாவூர்-6.
10. செல்வி நஸ்ரின் முகமட் யூசுப்
    கிண்ணியா-03.

**இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா50/= வழங்கப்படும்.**

## புகார் பெட்டி

## கொழும்பில் முடிச்சுமாறிகள் கைவரிசை

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் தற்போது முடிச்சுமாறிகள் தங்கள் கைவரிசையை அப்பாவி மக்களிடையே பரவலாகக் காட்டி வருகிறார்கள்.

சமீபத்தில் புறக்கோட்டை பஸ் நிலையத்துக்கருகில் தூரப் பிரயாணிகள் சிலரிடம் தங்கள் கைவரிசையைக் காட்டி விட்டு சாமர்த்தியமாக நழுவிவிட்டனர். இப் "பிக் பொக்கெட்" பேர்வழிகளினால் பிரயாணிகள் பயணத்தைத் தொடர முடியாமல் அவதிப்பட்டதைக் காணக்கூடியதாய் இருந்தது.

கடமையிலிருந்த பொலிசாரிடம் முறையிட்டும் பலன்கிடைக்காது "அம்போ" வென்று குழந்தைகளுடன் தத்தளித்த பிரயாணிகளின் நிலை கவலைக்குரியதாய் இருந்தது.

"என்ன புதினம்" என்று, புலம்பியவர்களை எட்டிப் பார்த்தவர்களின் பொக்கெட்டும் காலியானது வேடிக்கையிலும் வேடிக்கை.

எம்.சிவசங்கரன்
சாமிமலை.

## மஸ்கெலியாவில் கும்பாபிஷேகம்

மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாத சுவாமி ஆலயத்தின் ஜீரனோத்தாரண மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

மஸ்கெலியா பழைய நகரம், மவுசாக்கொல்லை நீர்த்தேக்கத்தில் 1968ம் ஆண்டு மூழ்கியதைத் தொடர்ந்து, புதிய நகரில் எழுந்தருளியுள்ள மேற்படி ஆலயத்தின் இரண்டாவது கும்பாபிஷேகம் இதுவாகும்.

முதலாவது கும்பாபிஷேகம் 1977ல் இடம் பெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மஸ்கெலியா இந்து இளைஞர் பேரவையின் சார்பில் விசேட மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இவ்வாலயத்தின் புனருத்தாரண பணிகளுக்கு மஸ்கெலியா மற்றும் வெளியூர் வர்த்தகப் பிரமுகர்கள் பலரும் மனமுவந்து உதவியுள்ளார்கள்.

கும்பாபிஷேக விழாவில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## பேருந்து திரும்ப வருமா?

புத்தளத்திலிருந்து சமீரகம ஊடாக உடப்பு வரை சென்ற பஸ் வண்டி தற்போது வெகுகாலமாக சேவையில் ஈடுபடவில்லை.

இதனால் இப்பகுதி வாழ் மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள்.

இதனால் எத்தனையோ நோயாளிகள் கூட ஆஸ்பத்திரிக்குச் சென்று நோயை குணப்படுத்த போக்குவரத்து தடையாக உள்ளது. ஆகவே பஸ் சேவையில் ஈடுபட இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சி எடுப்பார்களா?

என்.எம்.அப்துல் மனாப்
சமீரகம.

## வெள்ளிக்கிழமை விடுமுறை தேவை!

தெல்தொட்டை நகரில் கடைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் சேவை புரியும் தொழிலாளர்களுக்கு பிரதி வெள்ளிக்கிழமை நாட்களிலும், போயா தினங்களிலும் விடுமுறைத் தினமாக பிரகடனம் செய்து லீவு பெற்றுக் கொடுக்குமாறு தொழிலாளர் முன்னேற்ற காங்கிரஸ் தலைவர் ஐ.எஸ்.எம். அயீம் கண்டி உதவி தொழில் ஆணையாளரைக் கடித மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தடைப்படும் மின்சாரம்

அனுராதபுரம் நுவரகம்பலாத்த தேர்தல் தொகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகின்றது. குறிப்பாக வெள்ளி நாட்களில் நீண்ட மின் தடை நிலவுகின்றமையால் பள்ளிவாயல்களில் தீனுடைய நிகழ்ச்சிகளை நடாத்துவதில் பெரிதும் சிரமமேற்படுகின்றது. இதனை அறியப்படுத்துவதற்காக நீண்ட தூரம் சென்று அனுராதபுர மின்சார சபைக்கு தொலை பேசி அழைப்புக் கொடுத்தாலும் திருத்த வேலையோ உடன் நடைபெறுவதில்லை.

எனவே இதனை சீர்செய்ய கம்பிரிகெஸ்வெவ பிரதேசத்துக்கு ஓர் மின்சார சபை கிளையொன்று தேவையென இப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எ.எம்.மிஸுருள்லாபி
கம்பிரிகெஸ்வெவ.

## தீரவேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நாவலடிக்கிராமத்தில் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. இது வெறும் பேயருக்கே வழங்கப்பட்டுள்ளது. காரணம், கிராமம் பூராகவும் இணைப்புக் கொடுக்கப்படாது 1/2 பகுதிக்கு மாத்திரமே இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இக்குறை தீர பெரும் செலவாகும். அவை நீடித்தாலும் இவை இரண்டும் நீடிக்கக்கூடாது. அவையாவன, மின்கம்பத்திலுள்ள மின்விளக்குகள் சரி வர ஒளிர்வதில்லை. இவை தீர வேண்டும். அடுத்தது மாலை 5.30-9.00 மணி வரை வீட்டு மின் சுற்றுக்கு போதிய மின் கிடைப்பதில்லை. இதனால் மின் மூலம் பாவிக்கும் பொருட்களைப் பாவிப்பது கடினமாக இருக்கின்றது. எனவே இக்குறை தீர வேண்டுமென்று மின் பாவனையாளர்கள் சார்பில் உரிய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றேன்.

உருத்திரமூர்த்தி-யுவநாதன்
நாவலடி.

## தோப்பூர்மக்களின் குறை நீங்குமா?

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தொகுதியில் தோப்பூர் கிராமம் அமைந்துள்ளது. மூதூரிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ளது. எமது மக்கள் அத்தியாவசிய தேவையை மூதூருக்குச் சென்று நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். எட்டு மைல் கடப்பதென்றால் பிரயாணத்திற்காக இ.போ.ச வாகனம் ஒன்றே ஒன்றுதான் தற்பொழுது சேவையில் ஈடுபடுகின்றது. இவ்வாகனத்தின் உள் ஆசனம் நிரம்பிய நிலையிலும் மிதி பலகையில் தொங்கிய வண்ணம் மக்கள் பிரயாணம் செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. சில வேளை இ.போ.ச வாகனத்திற்கு பழுது ஏற்பட்டால் மக்கள் நடையிலும், துவிச்சக்கர வண்டியிலும் நடமாடுவதை காணலாம். ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தோப்பூர் மக்களின், போக்குவரத்து கஷ்டத்தை மனதில் கொண்டு, இன்னும் ஒரு இ.போ.ச பஸ் சேவையிலீடுபட ஆவணை செய்ய, சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கே.எம். றவ்பீக்-தோப்பூர்-4.

## மாலையான பின் சேவை இல்லையா?

கந்தப்பளை நகரம் இயற்கையழகும் பசுமைப் பொலிவும் கொண்ட நுவரெலியா நகரிலிருந்து 6 மைலுக்கு அப்பால் அமைத்து இருக்கும் ஒரு அழகுமிகு நகரம். இங்கு இருந்து மக்கள் நுவரெலியாவிற்கும், ராகலைக்கும் தினந்தோறும் பயணம் செய்கின்றார்கள். காலையில் இருந்து தனிவாகனங்கள் இ.போ.ச பஸ்கள் போட்டி போட்டுக் கொண்டு சேவையில் ஈடுபடுகின்றன. மாலை 6 மணிக்குப் பிறகு ஒரு வாகனமும் சேவையில் ஈடுபடுவதில்லை. மக்கள் தனி வாகனம் வாடகைக்கு எடுத்துச் செல்லவேண்டிய நிலையில் இருக்கின்றனர். இ.போ.ச பஸ் சில நேரங்களில் இரவு 8.00 மணிவரை உடபுசல்லாவை பஸ் சேவையில் இருக்கும். வேறு சில நேரத்தில் இருப்பதில்லை. அத்துடன் நுவரெலியா பொது பஸ் தரிப்பு நிலையம் 6 மணிக்குப் பிறகு இருள் சூழ்ந்து இருக்கும். இதனால் பயணிகள் பயப்படுகிறார்கள். அதுதவிர பிச்சைக்காரர்களின் தொல்லைகள். இதனை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் அமைச்சர்கள் மாநகர உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சுஜிகுமார்
கந்தப்பளை.

www.padippakam.com


நன்றி - நூலகத்திட்டம்

# வடக்கே புலிகள் வகுத்துவரும் நிர்வாக முறைகள்:

# தீர்வுகள் பற்றிப் பேசுவதோடு சரி! அதிகாரத்தை நிறுவுவதே குறி!!

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

-நாரதர்-



இப்போதெல்லாம் நாட்டு நிலவரங்களை எழுதி முடிப்பதற்குள் நிலைமையே தலைகீழாக மாறிவிடுகிறது.

கடந்த வாரம் எக்ஸ்ரே ரிப்போர்ட் எழுதிக் கொடுத்தபோது இராணுவத்தினர் கிளாலியில் நின்று கொண்டிருந்தனர்.

எழுதியது அச்சில் ஏறி மை காய்வதற்கு முன்னரே இராணுவத்தினர் படுவேகமாக முகாம் திரும்பியிருந்தனர்.

அத்தனை வேகம் ஏன் என்பதற்கு இராணுவத் தரப்புக் கூறும் நியாயங்கள் நம்பக் கூடிய வகையில் அமையவில்லை.

அரசால் நடத்தப்படும் பத்திரிகையின் செய்தியின் படி படையினர்-பொதுமக்கள் உட்பட நானூறுபேர் வரை யாழ்தேவி சென்றுவர தம் உடல்களை தண்டவாளங்களாகக் கொடுத்துள்ளனர்.

அரச பத்திரிகையின் செய்தியின் படி பார்க்கும்போது படையினர் தரப்பில் 200 பேருக்கு மேல் பலியாகியிருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

அப்படிப் பார்த்தால் புலிகளை விட படையினர் தரப்பில் இழப்புக்கள் அதிகம்.

பரந்தவெளியில் மோதல் நடந்தமையால் இழப்புக்கள் அதிகம் ஏற்பட்டன என்று படையினர் வட்டாரங்கள் கூறுகின்றன.

மோதலில் கலந்து திரும்பிவந்த ஒருஅதிகாரி தன் நண்பர் ஒருவருக்கு மோதல் அனுபவத்தைச் சொன்னாராம்.

சுற்றிலும் ஒரே கும்மிருட்டு. முன்னோக்கிச் செல்ல படையினர் முயலும் போதெல்லாம் புலிகள் சுட்டுக்கொண்டே இருந்தார்கள்.

எங்கிருந்து சுடுகிறார்கள் என்பதை கண்டறிய முடியவில்லை. அதனால் இரவில் கூட சுலபமாக முன்னேற முடியவில்லை என்று சொன்னாராம்.

கிளாலியைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் நோக்கம்.

அதன் மூலம் தரை-கடல் வழியாக புலிகளை முற்றுகையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கலாம்.

புலிகளின் எதிர்ப்பும், படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்பும் 300 படகுகளை எரித்து விட்டு, அத்தோடு போதும் என்று திரும்பிவர வைத்திருக்கிறது.

யாழ்தேவி திரும்பியபோதும் வான்வெளி மூலமான தாக்குதல்கள் தொடரவே செய்கின்றன.

படையினருக்கு இரு சங்கடங்கள் இருக்கின்றன.

பரந்த வெளியில் ஏற்கனவே அங்கு பதுங்கு நிலைகளை அமைத்துள்ள புலிகளை எதிர்த்து முன்னேறுவது கஷ்டம்.

அதனால் விமானத்தாக்குதல் மீதே கூடிய கவனம் செலுத்துகிறார்கள்.

மறுபுறம் குடியிருப்புக்கள் மத்தியில் புலிகளது முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதால் விமானங்கள் இலக்கறிந்து தாக்குவது சுலபமான காரியமல்ல.

படையினரைப் பொறுத்தவரை இது ஒரு சிக்கலான யுத்தம்.

■

யாழ்ப்பாணத்தில் புலிகள் பாரிய யுத்தத்தை எதிர்கொள்ளத் தயாராகுமாறு அழைப்பு விடுத்துள்ளார்கள்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட பொதுமக்களின் இழப்பை முன்வைத்து விரிவான அறிக்கை ஒன்றையும் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

யாழ்குடாநாட்டுக்குள் படையினர் வந்தால் பாரிய அழிவுகள் ஏற்படும் என்பதையே புலிகள் தமது பிரதான பிரச்சாரக் கருத்தாக முன்வைத்துள்ளனர்.

விமானத் தாக்குதல்கள், முகாம்களில் இருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்கள் புலிகளின் பிரச்சாரங்கள் எல்லாம் சேர்ந்து மக்களை கிலிகொள்ள வைத்திருக்கின்றன.

■

இராணுவ நடவடிக்கைகள், புலிகளைத் தோற்கடிப்பதற்கான காலவரையறைகள் என்பவை ஒருபுறம் இருக்கத் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி களில் புலிகள் தமது நிர்வாக முறைகளை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஏற்கனவே காவல்துறை என்னும் அமைப்பை புலிகள் நிறுவிக்கொண்டார்கள்.

'தமிழீழ காவல்துறை' என்று அதற்கு பெயரும் வைத்துள்ளார்கள்.

இலங்கையின் பொலிஸ் சேவையில் முன்னர் இருந்த பா. நடேசன் என்பவர் காவல்துறைக்குப் பொறுப்பாக இருக்கிறார்.

அவர் பொறுப்பாக இருந்த போதிலும் புலிகளின் தலைவர் திரு.வே. பிரபாகரனின் நேரடியான கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலுமே காவல்துறை செயற்படுவதாகக் கூறப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் 9 அலுவலகங்களும், வன்னிப்பகுதியில் மூன்று அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

பெண்களும் புலிகளின் காவல்துறையில்




சேர்க்கப்பட்டுள்ளனர்.

காவல்துறையில் இருப்பவர்கள் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களல்ல.

மாதாந்த ஊதியத்தின் அடிப்படையில் அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் புலிகளின் காவல் துறையில் உள்ளவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு.

நீலநிறச் சீருடைகளோடு புலிகளின் காவல்துறையினர் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் காவல் துறைக்கு ஒரு விசேஷ முகாம் இருக்கிறது. அங்கு கொண்டு செல்லப்படுகிறவர்கள் பலமாகக் கவனிக்கப்படுவார்கள். விசாரணைகளுக்கு செல்லாமல் தட்டிக்கழித்துக் கொண்டிருந்தால் பழைய பூங்கா தான் என்று பேசப்படுவதுண்டு.

முறைப்பாடு செய்யச் செல்பவர்களை "வாருங்கள் ஐயா" என்று இனிய தமிழில் வணக்கம் சொல்லி வரவேற்கிறார்கள்.

புலிகளின் உறுப்பினர்களது குடும்பங்களுக்கும் சாதாரண குடும்பங்களுக்கும் இடையே பிரச்சனைகள் ஏற்பட்டால் காவல்துறையில் உள்ளவர்கள் கையைப் பிசைவதாகவும், பக்கச் சார்பு காட்டப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட சிலர் கூறுகிறார்கள்.

என்றாலும் பெரியளவில் இதுவரை குறைவுகள் தெரிவிக்கப்படவில்லை.

ஒரு தனி அரசாங்கம் செயல்படுவது போன்ற பிரமையை காவல்துறையும் ஏற்படுத்துகிறது.

சிற்றூரவைகள் மூலம், மக்கள் மத்தியிலான பிரச்சனைகளை முதலில் அணுகிய புலிகள் அமைப்பினர் பின்னர் காவல்துறையை உருவாக்கி சிற்றூரவைகளைக் கலைத்து விட்டனர்.

புலிகளே நேரடியாகப் பிரச்சனைகளைத் தீர்க்கும் போது பிரச் சனைப்படும் இரு தரப்புக்களில் ஒரு தரப்பின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ள நேரும்.

வழங்கப்படும் தீர்ப்புக்கள் பற்றிக் குறைகள் கூறப்படும் போது, அது இயக்கம் மீதான நல்லெண்ணங்களைப் பாதிக்கும்.

காவல்துறை என்ற அமைப்பு மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பது சட்டரீதியான செயல்பாடு போன்று கருதப்படும்.

மிகவும் முன்யோசனையோடுதான் புலிகள் காவல்துறையை உருவாக்கியுள்ளார்கள்.

காவல்துறையை அடுத்து தற்போது புலிகளால் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு வருபவை 'தமிழீழ நீதிமன்றங்கள்.'

புதிய சட்டக் கோவை ஒன்றையும் புலிகள் வெளியிட்டுள்ளார்கள்.

பிரபாகரனே அந்தச் சட்டக்கோவையை வடிவமைத்ததாகப் புலிகள் அறிவித்தனர். ஆயினும் சட்ட அனுபவமுள்ள சிலரே அதனைத் தயாரித்து பிரபாகரனின் ஒப்புதலுக்காக கையளித்திருக்கின்றனர்.

புலிகளின் நீதிமன்றங்களில் ஒருவர் சட்டத்தரணியாகச் செயல்படுவதற்குப் பழைய சட்டங்கள் தெரிந்தால் போதாது. அவை உபயோகமும் ஆகாது.

புலிகள் வெளியிட்டுள்ள சட்டக்கோவையின் படிதான் சட்டத்தரணிகள் வழக்கு நடத்த முடியும்.

நீதிபதிகள் புலிகளால் நடத்தப்படும் சட்டக்கல்லூரியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதில் ஒரு முக்கிய விதி, நீதிபதிகள் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களாகவே இருப்பர்.

தீர்ப்பு வழங்கும் உரிமையை இயக்கம் கைவிடத் தயாரில்லை. இயக்கத்தின் விருப்பை மீறிய தீர்ப்புக்கள் வழங்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவே, உறுப்பினர்கள் மட்டுமே நீதிபதிகள் என்ற விதி வகுக்கப்பட்டிருக்கிறது.

நீதிபதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பிரபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்து கொண்டார்கள்.

நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் புலிகள் அமைப்பினருக்கும், புலிகளின் தலைவருக்கும் விசுவாசமாக இருப்போம் என்று சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும்.

சட்டத்தரணிகளுக்கு நீதிபதிகளைப் போலவே சிக்கலான வேலை ஒன்று இருக்கிறது.

தாம் யார் தரப்பில் ஆஜராகிறார்களோ, அவர்கள் குற்றமற்றவர்கள்தானா? என்று முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு குற்றவாளியும் தான் குற்றம் செய்ததை ஒத்துக் கொள்வதில்லை.

அப்படியிருக்கும் போது குற்றவாளிகள் யார்? என்று கண்டுபிடிப்பது சுலபமான வேலையல்ல.

அதுதான் சட்டத்தரணிகளுக்கு வேலை என்றால் பின்னர் நீதிபதிகள் எதற்காக இருக்க வேண்டும்?

முரண்பாடான இந்த விதி தமது இயக்கத்திற்குத் தூய்மையான ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தவே உருவாக்கப்பட்டிருக்கிறது என்றே கருதலாம்.

சட்டத்தரணிகளுக்கு இன்னுமொரு பிரச்சனை. தனக்காக வாதிடச் சட்டத்தரணி ஒருவரை அமர்த்திக் கொள்ளும் ஒருவர் அந்தச் சட்டத்தரணிக்கு நீதிமன்ற நிர்வாகம் மூலமே பணத்தைச் செலுத்த முடியும். எவ்வளவு பணம் செலுத்த வேண்டும் என்பதை நிர்வாகமே முடிவு செய்யும்.

இவ்வாறான விதிகளை மீறும் சட்டத்தரணிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் புலிகளின் சட்ட விதியில் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

கடூழியச் சிறைத்தண்டனை பெற்றவர்கள் பிரபாகரனுக்கு கருணைமனுப் போடலாம்.

புலிகளது மாவீரர் தினங்களில் பிரபாகரனது உத்தரவின் பேரில் பொது மன்னிப்புகள், தண்டனைக்காலக் குறைப்புக்கள் வழங்கப்படும்.

ஒரு அரசு போலவும், பிரபாகரனே அரசுத் தலைவர் போலவுமே நிர்வாக முறைகளும், விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன.

அதே சமயம் இலங்கை அரசின் நிர்வாகப் பிரிவுகளும் வடக்கே இயங்கி வருகின்றன.

இலவச சேவைகளை புலிகள் விருப்பப்படி நடத்துவதற்கே அவை அனுமதிக்கப்படுகின்றன.

அவற்றை இயங்கவிடாமல் செய்தால் தமக்கும் நஷ்டம் என்பதை புலிகள் அறிவார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச செயலகத்தை மூடிவிட்டால் நிவாரணப் பொருட்கள் போவதும் நின்றுவிடும்.

பாடசாலைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை புலிகள் தமது சொந்தச் செலவில் நடத்த முடியாது.

அதனால் தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் அவற்றைப் புலிகள் இயங்க அனுமதித்துள்ளனர்.

வடக்கே-சகல தளங்களிலும் தமது கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்வதில் புலிகள் தீவிரமாகவே உள்ளனர்.

புலிகள் உருவாக்கி வரும் நிர்வாக முறைகளும், பிரபாகரனைப் பற்றி ஏற்படுத்தி வரும் தேசியத் தலைவர் என்னும் தோற்றப்பாடும், மீண்டும் இலங்கை அரசுக் கட்டுப்பாட்டில் புலிகள் எப்படி செயல்பட முடியும் என்கின்ற கேள்விகளை எழுப்புகின்றன.

ஆணையிடும் வேலையைச் செய்யும் திரு. பிரபாகரன் இன்னொரு ஆணையிடும் அரசுத் தலைவரின் உத்தரவுப்படி எப்படி நடக்கமுடியும்?

புலிகள் உருவாக்கிவரும் புதிய சட்ட விதிகளும், அமைப்பு வடிவங்களும் இலங்கை அரசால் எக்காலத்திலும் ஏற்கப்படக் கூடியவையல்ல.

எனவே, தீர்வுகள் பற்றி அரசும்-புலிகளும் பேசி வரும்போதும், இரு தரப்பும் ஒருவரை ஒருவர் வென்று தமது அதிகாரத்தை நிறுவிக் கொள்வதில்தான் குறியாக இருக்கிறார்கள் என்றே கருத இடமுண்டு.

அதே சமயம் புலிகளின் நிர்வாக முறைகளில் உழுத்துப் போன பழைய சட்ட முறைகள் சில உடைந்து போயுள்ளதையும் வரவேற்கவே வேண்டும்.

■

## அதிரடி அய்யாத்துரை



மூளைக் கோளாறு கட்டு மீறியதால் மாடியில் இருந்து குதித்த பிரதிநிதியின் கதை உங்களுக்குத் தெரியும். அவர் குதிச்சு ஆஸ்பத்திரியிலை அட்மிட் ஆன உடனே தம்பிக்காரன் லண்டனுக்கு போன் எடுத்திருக்கிறார். பாரியார் விசயம் என்னவென்று கேட்க, அண்ணருக்கு முன்பை விட இப்போது கூடிப்போச்சு எண்டு சொல்லியிருக்கிறார். பாரியார் கோபத்தில் துள்ளினாராம். அவருக்கு எதிரான பிரச்சாரத்தில் நீயும் இறங்கிவிட்டாய் எண்டு அண்ணி துள்ள, தம்பி போனை வைச்சுப் போட்டுது. அவர் ஒரு பெரிய பிரதிநிதி மாதிரியும் அவருக்கு எதிராக எல்லோரும் திரண்டு பிரச்சாரம் செய்துதான் விழுத்த வேணும் எண்ட மாதிரியும் பாரியார் கற்பனை பண்ணினார் பாருங்கோ. சிரிக்கவோ அழவோ. கண்றாவி.

தொலைக்காட்சிப் பிரியர்களுக்கு ஒரு நல்ல சங்கதி. உள்ள அலைவரிசை எல்லாம் புதிய காட்சிகள் தொடங்கப் போகினமாம். இஞ்சை இருக்கிற சில தனியார் நிறுவனங்கள் சிலவும் தொலைக்காட்சிச் சேவை நடத்தப் போகினமாம். 24 மணி நேரமும் இப்ப செய்தி போகுது. பட்டனை அமுக்க உலகம் வந்து முன்னுக்கு நிக்குது. ஒரு குறை. சிறீலங்கா எண்டு ஒரு சொல்லு வந்தாப் போதும் ஒரே வெட்டு. நல்லாச் சொன்னா என்ன, கெட்டதாச் சொன்னா என்ன. ஏன் வில்லங்கம். வெட்டு. அதுதான் பொலிசி போலக்கிடக்கு. அரசாங்கமும் சரி. புலிகளும் சரி உலக நிலவரம் அறிய விடுவினம். உள்ளூர் நிலவரங்களை மட்டும் தாங்கள் சொல்லுற மாதிரித்தான் நாங்கள் விளங்கவேணும் எண்டு நினைக்கினம். எந்த இடத்திலை ஒற்றுமை வருகுது பார்த்தியளோ?

கொழும்பில் இருந்து வவுனியா போகும் ரயில் ஒரு நாளைக்கு ஒரு இடத்திலை வந்து நிக்குது. அது பயணிகளுக்கு பெரிய சிரமமாய் இருக்குது. கவனிக்க வேண்டியவை வவுனியா போற ரயில்தானே எண்டு அலட்சியமாய் இருக்கினமோ எண்டு சனம் கதைக்குது. அதுமட்டுமில்லை இடையில் இஞ்சின் கோளாறு எண்டாலும் ஆறுதலாகத்தான் வேலை நடக்குதாம். பயணிகள் காயத்தான் வேணும்.

கொழும்பில் அங்கங்கே காவலுக்கு நிற்பவர்கள் பொம்பிளைப் பிள்ளைகளோடு வலு அன்பாய் நடக்கினமாம். செக் பண்ணாமல் விட்டுப்போட்டு திரும்பி வரேக்க சொக்கலேட் கேட்டு அன்பை வெளிப்படுத்துற மாதிரியும் ஒரு கதை காதில் விழுகுது.

நல்லை ஆசிரமத்துக்குப் பக்கத்தில் இரண்டெழுத்து இயக்கம் வாகனத்தை விட்டுப்போட்டு ஓட, ஹெலி வந்து சாத்தியிருக்குது. ஆசிரமமும் டமால்....டுமால்....இந்த விசயத்தை ஆசிரம முதல்வர் வாய்தவறிச் சொல்ல, அது ரேடியோவிலையும் வந்துட்டுதாம். முதல்வர் கலங்கிப் போனாராம். இரண்டெழுத்துக்காரர், ஊருக்கு தான் போக உள்ளுக்குப் பிடிச்சுப்போட்டா என்ன செய்யிறது எண்ட பயம்தான். வேறை என்ன,

மீன்பாடும் நாட்டில் பொறுப்பான சாமி தன்னை பச்சை வர்ண ஆள் மாதிரிக் காட்டிக் கொள்ளுகிறாராம்.

தமிழ் அமைப்புக்கள் ஏற்கனவே அதிகம் இருக்குது. போதாது எண்டு இப்ப ஒரே பெயரிலை இரண்டு இயக்கம் இருக்கிற சீசன் தலைகாட்டுது. எங்கை போய் முடியுதோ?

ஜின்சினுக்கா சிக்கா. டமுக்கு டிக்கா டக்கா எண்டமாதிரியெல்லாம் புதுத்தமிழில் பாட்டுக்கள் வருகுது. வானொலியிலும் அதுதான் கேட்குது. முந்தி ஒரு காலத்திலை காதில் தேன்வந்து பாயுறமாதிரி வானொலியை திறந்தா ஒரு சந்தோசம். இப்ப ரயில் வந்து காதுக்குள்ள ஓடுற மாதிரி சிக்கு புக்கு இசை. இந்த நேரத்திலை பாரதிதாசன் கவிதை ஒண்டு நினைவுக்கு வருகுது. இந்தாங்கோ.

"வானொலி எல்லாம் தேனொலி ஆக்கும்
செந்தமிழ் பாட்டைக் கேட்டு கேட்டு.
நானும் மகிழ்வேன் நாடும் மகிழும்
நானிலம் எல்லாம் நன்றாய் மகிழும்.

எப்ப மகிழுறது. எப்ப நல்ல பாட்டைக் கேட்கிறது. இதிலை பாருங்கோ இன்னொரு வேடிக்கை, எழுதுறவைக்கும் அர்த்தம் தெரியிறதில்லை. உப்பிடித்தான் இஞ்சி இடுப்பழகி எண்டு வாலி எழுதினவர். கடிச்சுப் பார்த்துப் போட்டோ எழுதினவர் எண்டமாதிரிக் கேள்வியள் வந்து, பிறகு அகில இந்திய அளவிலை ஆராய்ச்சியே நடந்து முடிஞ்சுது. வாலி இன்னும் ஒழுங்கான அர்த்தம் சொல்லேல்லை. அர்த்தப்படி பார்த்தா ஆண்கள் பலபேர் இஞ்சி தின்ட குரங்குகள் மாதிரியல்லோ கதை போகும். தப்பான அர்த்தங்கள். தவறான சத்தங்கள். நல்ல காலம் பாரதிதாசன் அப்பவே போனது.

●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# யாசிர் அரபாத்தை நோக்கிவரும் ஆபத்து

## அந்நியக்கரங்களால் முடியாமல் போனதை சொந்தக்கரங்கள் செய்து முடிக்குமா?

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசிர் அரபாத் மீது பல தடவைகள் குறி வைக்கப்பட்டது.

இஸ்ரேல் ஆட்சி பீடத்தின் உயர் மட்டத்தில் அரபாத்தை அழித்துவிட பல தடவைகள் விவாதிக்கப்பட்டது.

நான்கு தடவைகள் தன்னைக் கொல்வது பற்றி விவாதிக்கப்பட்டது. திட்டங்களும் தீட்டப்பட்டன. பின்னர் அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டன. தான் இப்போதும் உயிரோடு இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம் என்கிறார் யாசிர் அரபாத்.

1967ம் ஆண்டு பலஸ்தீன விடுதலை இயக்கத்தை யாசீர் அரபாத் தோற்றுவிக்க முயன்றார். அப்போதே அந்த முயற்சியை முளையிலே கிள்ளி எறிய இஸ்ரேல் முயன்றது.

அரபாத்தை உயிருடன் பிடிக்கவும், முடியாது போனால் கொல்லவும் திட்டம் வகுக்கப்பட்டது.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைப் பிரதேசத்துக்குள், அரபாத் ஆட்கள் திரட்ட வந்திருக்கிறார் என்று இஸ்ரேலுக்குத் தகவல்கள் கிடைத்தன.

அரபாத் தங்கியிருப்பதாக கருதப்பட்ட வீட்டை இஸ்ரேலிய உளவுப் பிரிவினர் சுற்றி வளைத்தனர்.

உளவுப் படையினர் தான் தங்கியிருப்பதை மோப்பம் பிடித்து வருவதை அறிந்து கொண்ட அரபாத் வெளியே நின்ற மோட்டார் வண்டியின் கீழே புகுந்து கொண்டார்.

பின்னர் ஒரு குழந்தையைத் தோளில் தூக்கிக்கொண்டு பெண் போல வேடம் புனைந்து தப்பிச் சென்றுவிட்டார்.

இஸ்ரேல் பிரதமராக இருந்த கோல்டா மெயிர் அரபாத்தை ஒரு பயங்கரமான மனிதன் என்று கருதினார்.

அவரை ஒழித்துக்கட்ட ஒரு அந்தரங்கமான குழுவையும் அமைத்தார்.

பலஸ்தீன தலைவர்களில் 16 பேரை தீர்த்துக்கட்டும் வேலை அந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

1972ல் ஒலிம்பிக் போட்டிகளில் 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் கொல்லப் பட்டதற்கும் அரபாத்துக்கும் தொடர்பில்லை என்று கருதியதால் அரபாத்தை 16 பேர் பட்டியலில் பின்னர் சேர்க்காமல் விட்டனர்.

அந்தக் குழுவின் பட்டியலில் இருந்த 16 பேரும் கொல்லப்பட்டுவிட்டனர்.

1982ல் பெய்ரூட் சுற்றி வளைக்கப்பட்ட போது அரபாத்தைக் கொன்றுவிடுமாறு இஸ்ரேல் தலைமை உத்தரவு பிறப்பித்தது.

அரபாத் ஒளித்திருந்த பங்கரை இஸ்ரேலியத் துருப்புக்கள் அடையாளம் கண்டு கொண்டன.

பங்கரில் இருந்து அரபாத் வெளியே வந்த போது இஸ்ரேலிய வீரன் ஒருவன் அவரை அடையாளம் கண்டு விட்டான்.

எனினும் அந்த ஆபத்தில் இருந்தும் அரபாத் எப்படியோ தப்பிக்கொண்டார்.

சரியாகக் குறிபார்த்து சுடும் இஸ்ரேலிய போர்வீரன் ஒருவன் 200 மீட்டர் தொலைவில் இருந்து ஒருதடவை அரபாத்தைக் குறிபார்த்தான்.

லெபனானை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த பலஸ்தீன விடுதலைப் படையினரோடு அரபாத் சென்று கொண்டிருந்தார்.

குறிபார்த்துக் கொண்டிருந்த அந்த வீரன் "அரபாத்தை தன்னால் கொல்லமுடியும்" என்று உத்தரவு கேட்டான்.



அப்போது இஸ்ரேல் பிரதமராக இருந்த பெகின் அரபாத் கொல்லப்படுவதை விரும்பவில்லை. எனவே உத்தரவு கிடைக்கவில்லை. அரபாத் தப்பிக் கொண்டார்.

அரபாத்தை ஒழித்துக் கட்டிவிட்டால் அவருக்கு அடுத்து தலைவராக வருபவர் மேலும் தீவிரமானவராக இருக்கக்கூடும் என்று இஸ்ரேல் தலைமைப்பீடம் நினைத்தது.

அந்த நினைப்புத் தான் அரபாத்தைப் பல தடவைகள் காத்தது.

1985 செப்டெம்பரில் பலஸ்தீன விடுதலை அமைப்பின் மூன்று வீரர்கள் சைப்பிரசிலுள்ள லாறனோ என்னும் இடத்தில் இஸ்ரேலிய படகொன்றைத் தாக்கினார்கள்.

மூன்று இஸ்ரேலிய அதிகாரிகள் கொல்லப் பட்டனர்.

தாக்குதலை நடத்திய மூவரும் அரபாத்தின் தனிப் பாதுகாப்புப் பிரிவான "ஃபோர்ஸ் 17" குழுவைச் சேர்ந்தவர்கள்.

தகவல் அறிந்த இஸ்ரேலிய தலைமைப் பீடம் கொதித்தது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தளபதிகள் அரபாத்தை சந்திக்கப் போவதாக உளவுப் பிரிவு அறிந்து சொன்னது.

ரியூனிசில் உள்ள தலைமை அலுவலகத்தில் சந்திப்பு நடக்கப் போவதாகவும் இஸ்ரேலிய உளவுப்பிரிவு அறிந்து கொண்டது.

அரபாத்தையும் அவருடைய இராணுவ அதிகாரிகளையும் ஒரே நேரத்தில் ஒழித்துக் கட்ட இஸ்ரேல் திட்டமிட்டது.

"கூட்டம் நடைபெறும் இடத்தை குண்டுவீசி தகர்த்து விடுங்கள்." என்று உத்தரவிட்டார். அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் ஷைமன் பெரஸ்.

உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

ஆறு ஃஎப் 15 ரக ஜெட் விமானங்கள் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகம் மீது குண்டுமாரி பொழிந்தன.

கட்டடங்கள் பல தகர்ந்தன. 73 பேர் மடிந்தனர்.

அரபாத்தும் தளபதிகளும் கூடிப் பேச இருந்த மண்டபம் மீதும் குண்டுகள் விழுந்தன.

ஆனால் அரபாத் அப்போது அங்கிருக்கவில்லை. தாக்குதல் நடைபெற்ற இடத்தில் இருந்து 20 கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தமையால் அரபாத் தப்பிக் கொண்டார்.

இஸ்ரேல் அரபாத்தைக் கொல்வதற்கு மேற்கொண்ட பாரிய முதலும் கடைசியுமான முயற்சிதான் தலைமையகம் மீதான தாக்குதல்.

இப்போது இஸ்ரேலுடன் அரபாத் கைகுலுக்கியிருக்கிறார்.

இப்போது ஆபத்து உள்ளே இருக்கிறது.

அரபாத் ஒழிக்கப்படவேண்டும். இஸ்ரேல் அழிக்கப்படவேண்டும். என்று கூறும் தீவிரவாதிகளின் துப்பாக்கிகள் எந்த நேரமும் முழங்கக்கூடும்.

சொந்தக் கரங்களே அவர் உயிருக்கு உலைவைக்கும் அபாயம் உருவாகியிருக்கிறது என்று அவதானிகள் கூறுகின்றனர்.

# ஒடுக்கப்பட்டது கிளர்ச்சி! அடுத்தது என்ன? அடக்குவதுதானா?



ஆட்டம் கண்ட சிம்மாசனத்தை ரஷ்ய அதிபர் காப்பாற்றிக் கொண்டார்.

ரஷ்ய அதிபர் யெல்ட்சினைக் காப்பாற்றுவதில் அமெரிக்கா ஒற்றைக் காலில் நின்றது.

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் தொலைக்காட்சியில் நேரடியாகத் தோன்றினார்.

ரஷ்ய அதிபர் யெல்ட்சினுக்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்தார்.

யெல்ட்சினை விட யெல்ட்சினின் நலனில் அமெரிக்காவுக்குத்தான் அக்கறை அதிகம்.

ரஷ்யாவில் கிளர்ச்சியில் ஈடுபட்டது கம்யூனிசத் தீவிரவாதிகள் என்பதால் அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் அவர்களை அடக்க வேண்டும் என்பதில் விருப்பம் கொண்டன.

மீண்டும் ரஷ்யாவில் கம்யூனிச கருத்துக்கள் தலைகாட்டுவதும், கம்யூனிசக் கொடிகள் உயர்வதும் மேற்கு நாடுகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளன.

எப்படியோ நெருக்கடியில் இருந்து யெல்ட்சின் தன்னைக் காத்துக் கொண்டுள்ளார்.

கம்யூனிச கருத்துடையவர்களை களையெடுப்பதற்கு இனி ரஷ்ய அதிபர் ஒரு தீவிரப் போக்கை கடைப்பிடிப்பார் என்றே நம்பப்படுகிறது.

இராணுவ பலத்தின் மூலம் கிளர்ச்சியாளர்கள் ஒடுக்கப்பட்டபோதும் மீண்டும் அங்கங்கே யெல்ட்சினுக்கு எதிரான கிளர்ச்சிகள் தோன்றக் கூடும்.

கம்யூனிசத்தை ஒடுக்குவது என்ற போர்வைக்குள் தனது அரசியல் எதிரிகளை யெல்ட்சின் இரும்புக் கரம் கொண்டு அடக்க முற்படலாம்.

அது ஒரு வேளை யெல்ட்சினுக்கு எதிரான எதிர்ப்பலைகளை உருவாக்குவதில் சென்று முடியலாம்.

அடுத்த ஆண்டு ஜுனில் ரஷ்ய தேர்தல் நடைபெறவுள்ளது.

அதற்கு முன்பாக தனது நிலையை பலமாக்குவதற்கு யெல்ட்சின் முயலுவார். அதற்கு மேற்கு நாடுகளும் உதவும்.

ரஷ்யாவில் யெல்ட்சினை விட ஒரு நம்பகமான கூட்டாளியை மேற்கு நாடுகள் பெற முடியாது.

# உலக ரவுண்டப்

## காதலியோடு இப்படியொரு கார்ஓட்டம்! வாயடைத்துப் போனார் நீதிபதி!!

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர் ரிச்சர்ட் பிளாண்ட். அவருக்கு 29 வயது. வேடிக்கைக் குணம் கொண்டவர்.

தென் ஆபிரிக்க தலைநகரான ஜோகன்ஸ்பர்க் நகர வீதியில், ரிச்சட் தனது காரை வேகமாக ஓட்டிச் சென்றார். பக்கத்தில் அவரது காதலி.

காரின் வேகத்தைப் பார்த்துவிட்டு அதை மறித்த போக்குவரத்து பொலிஸ்காரர் விசாரிப்பதற்காக காரின் உள்ளே தலையை நீட்டினார். அவ்வளவுதான், அலறியபடி தலையை வெளியே இழுத்துக் கொண்டார்.

ரிச்சர்ட் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டார்.

காரணம் சுவாரசியமானது. காரைச் செலுத்தி வந்த ரிச்சர்ட், மேலே சட்டை மட்டும் தான் போட்டிருந்தார்.

பொது இடத்தில் ஆபாசமாக வலம் வந்ததாக வழக்குத் தொடரப்பட்டது.

நீதிபதியைப் பார்த்து ரிச்சர்ட் பொறுமையோடு தனது வாதத்தை முன் வைத்தார்.

"சட்டை மட்டும் போட்டுக்கொண்டு நான் கார் செலுத்தியது உண்மைதான். ஆனால் அது எப்படி ஆபாசமாகும்? வெளியே தெரியக் கூடியதாக நடமாடினால்தானே அது ஆபாசமாகும். நான்தான் என் காதலியை மடியில் வைத்திருந்தேனே. பிறகு என்ன தெரியும்." இதுதான் அவரது வாதம்.

ரிச்சர்டின் வாதத்தைக் கேட்டுப் புல்லரித்துப் போன நீதிபதி மறுபேச்சே இல்லாமல் அவரை விடுதலை செய்துவிட்டார்.

22.10.93 அன்று இந்த சுவாரசியமான சம்பவம் நடைபெற்றது.

# நகர ரவுண்டப்


-ஒற்றன்-

## உடல் பிடித்துவிடும் நிலையங்களும் உள்ளே கண்ட காட்சிகளும்!

(சென்றவாரத்தின் மறுபகுதி)

அத்தனை பெண்களும் இளமையாக இருந்தார்கள்.

ஒரு மாதிரிச் சிரித்தார்கள். சிரிப்பிலே அழைப்பும் இருந்தது.



இருவர் மட்டும் சேலை கட்டியிருந்தார்கள். தமிழ் என்று முகத்தில் தெரிந்தது.

நமது பத்திரிகையாளர் மூளை வேலை செய்தது. தமிழ் தெரிந்திருக்கும் பெண்மூலம் தகவல் திரட்டும் ஐடியா எட்டிப்பார்த்தது.

தகவல் வங்கியாளர் விரலால் கையில் சுரண்டினார்.

"அட்மிஷன் பீஸ் கொடுக்க வேணும் ஐசே, ஆளுக்கு 150 மொத்தம் 300."

கொஞ்சம் குறைத்துக் கேட்டுப்பாருங்கள் என்று சொல்ல நினைத்தோம். மரியாதை இல்லை. எல்லோரும் எம்மையே பார்க்கிறார்கள். அதனால் பொக்கற்றில் இருந்த ஐநூறில், முன்னூறை அவர் கையில் திணித்தோம்.

ஸ்ரைலாக நடந்து போய், கறப்பதற்கு இருந்த பெண்ணிடம் பணம் கொடுத்தார்.

பணம் வாங்கிக் கொண்ட சந்தோசத்தில் திருப்தியாக பல்லைக்காட்டி "யார் வேணும்" என்று கேட்டாள்.

சந்தையில் மாடு விற்பது போல, பெண்களை வைத்து வியாபாரம் செய்கிறார்கள்.

தகவல் வங்கியாளர் நம்மைப் பார்த்தார். புருவம் உயர்த்தி, யார் வேணும் என்று விழிகளால் விசாரித்தார்.

"சேலை கட்டிய பெண்ணைக் காட்டினோம்."

தயாராய் எழுந்து புன்னகை தந்து 'வாருங்கள்' என்று சொல்லி முன்னே நடந்தாள். தொடர்ந்தோம்.

தகவல் வங்கியாளர் நாகரிகமாய் உடையணிந்து கால் அழகுகாட்ட, காலுக்கு மேல் கால் போட்டிருந்த பெண்ணோடு பேசிக்கொண்டிருந்தார்.

முன்னால் சென்ற சேலை ஒரு அறைக்குள் நுழைந்தது.

ஒரு மண்டபத்தைப் பிரித்துப் பல அறைகளாக மாற்றியிருந்தார்கள்.

சிறிய அறையாக இருந்தது. உள்ளே ஒரு கட்டில். சின்னதாக ஒரு மேசை. மேசையின் மேலே மசாஜ் செய்யும் போது பயன்படுத்த ஒலிவ் எண்ணெய். மற்றும் பவுடர்.

ஒலிவ் எண்ணெய் போத்தலில் நிரம்பியிருந்தது. எப்போதும் பயன்படுத்தப்படவில்லை என்று விளங்கிக்கொண்டோம்.

இங்கு வருபவர்கள் ஒலிவ் எண்ணெயைப் பயன்படுத்த வருவதில்லை. மசாஜ் செய்ய வந்து தாங்களே மசாஜ் செய்துவிடத் துடிப்பவர்களுக்கு ஒலிவ் எண்ணெய் எதற்கு?

"தமிழோ என்று கேட்டோம்."

தயங்கினாள். பின் "ஆம்" என்று சொல்லி "எண்ணெயா பவுடரா" என்று ஒரு சம்பிரதாயத்துக்கு கேட்பது போலக் கேட்டாள்.

"எதுவும் வேண்டாம்." என்று சொன்னோம். எதுவும் என்றதை அழுத்திச் சொன்னதால் புரியாது பார்த்தாள்.

நட்போடு ஒரு புன்னகையை வீசியபடி பொக்கற்றுக்குள் மீதியாக இருந்த இரு நூறை எடுத்து கையில் கொடுத்தோம்.

"பத்திரிகை அடையாள அட்டையை எடுத்துக் காட்டினோம்."

"மிரண்டாள்.

"பயப்படவேண்டாம் என்று கூறினோம். பெயர் வராது. தகவல்கள் சில தேவை. அவ்வளவுதான்." என்றோம்.

யோசித்தாள். அப்போது தான் கவனித்தோம். அறைக் கதவில் ஒரு துளை போட்டு வைத்திருக்கிறார்கள்.

உள்ளே ஏதாவது கசமுசா என்றால் வெளியில் இருந்து பார்க்க வசதி.

"பெயர் என்ன,"

"சந்திரா" என்றாள்.

சத்தியமா பொய். நமக்கென்ன பெயரா முக்கியம்?

"இங்கு எத்தனை பேர் வேலை செய்கிறீர்கள்?" பக்குவமாகக் கேட்டோம்.

அப்படியே பேச்சுத் தொடர்ந்தது. ஆரம்பத் தயக்கம் மறைந்து, மெல்லிய குரலில் பேசத் தொடங்கிவிட்டாள்.

சந்திராவின் கதை சோகமானது. காதலன் தேவையானவரை பயன்படுத்திவிட்டு கைவிரிக்க, வீடு துரத்தியது. விதியை நினைத்து அழுதவளை "வீதியில் பிச்சைஎடுப்பதைவிட இது மேல்" என்று சொன்ன உறவுக்காரப் பெண் ஒருத்தி இங்கு சேர்த்துவிட்டாள்.

மசாஜ் நிலையங்கள் சில கௌரவமாக மசாஜ் செய்வதோடு மட்டுமே நிறுத்திக் கொள்கின்றன. ஆனால் மசாஜ் என்ற பெயரில் உடல் வியாபாரம் செய்யும் நிலையகளுக்குத்தான் வருமானம் அதிகம்.

இங்க 24 பெண்கள் வேலை செய்கிறார்கள். வாரத்தில் ஒருநாள் விடுமுறை கிடைக்கிறது.

மாதம் ஒன்றுக்கு பத்தாயிரத்திற்குக் குறையாமல் ஒவ்வொரு பெண்ணுக்கும் வருமானம் கிடைக்கிறது.

வாடிக்கையாளர் ஒருவர் உள்ளே 45 நிமிடங்கள் மட்டுமே இருக்க அனுமதி உண்டு.

வருமானத்தில் ஒரு பகுதியை மசாஜ் விடுதி உரிமையாளருக்குக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தாலும் கூட மாதம் பத்தாயிரம் கையில் கிடைக்கிறது.

இன்னொரு கொடுமையான கதையையும் சந்திரா சொன்னாள்.

"குடிபோதையில் வந்து வக்கிரமாய் நடக்கும் வாடிக்கையாளர்களோடு அனுசரித்துப் போகாவிட்டால் நிர்வாகம் கடுமையாக நடந்து கொள்ளும்."

"மசாஜ் விடுதிகள்" என்று நடத்தப்படுவதால் பொலிஸ் உள்ளே வருவதும் கஷ்டம். ஏதாவது புகார்கள் பிரச்சனைகள் என்றால் மட்டுமே வரமுடியும்.

வெளியே அறைக்கதவு தட்டப்பட சந்திரா அவசரப்பட்டாள்.

நாமும் "நன்றி" சொல்லி விடை பெற்றோம்.

வெளியே வர தகவல் வங்கியாளர் உற்சாகமாகச் சிரித்துக் கண்ணடித்தார்.

பொருளாதார நெருக்கடியும், ஏமாற்றப்படும் பெண்களை சமூகம் தள்ளிவிடுவதும் எவ்வாறான சாக்கடைகளில் கொண்டுவந்து அவர்களைச் சேர்த்துவிடுகின்றன என்று நினைத்தபடி வெளியேறினோம்.

உள்ளே போகும் போது முறைத்த தடி ஆசாமி இப்போது கொஞ்சம் சிரித்தது போல் இருந்தது.

## அலசுவது—இராஜதந்திரி




'ஒப்பரேஷன் யாழ்தேவி', ஒரு சிறு பூகம்பம் போல முழங்கியடித்து ஓய்வடைந்துள்ளது.

இந்தியாவில் மத்திய பிரதேஷ் மாநிலத்தின் கிலாரி என்ற இடத்தில் முற்றிலும் எதிர்பார்த்திராத வகையில் பூகம்பமொன்று ஏற்பட்டு முப்பதாயிரத்துக்கும் அதிகமான உயிர்களை கடந்த வாரங்களில் பலியெடுத்திருந்தது.

இந்தியாவில் பூகம்பம் வெடித்திருந்த வேளையிலேயே இலங்கையின் வட புலத்திலும் கிளாலியில் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' மும்முரமடைந்திருந்தது.

இந்தியாவில் பூகம்ப அழிவு ஏற்பட்ட அதே காலப்பகுதியில், தென் ஆசியாவில், இடம் பெற்ற மற்றுமொரு அழிவாகவே இலங்கையில் ஒப்பரேஷன் யாழ்தேவியின் இழப்புக்களும் விளங்கியிருந்தன.

வடக்கே இருந்து கிடைக்கும் தகவல்கள் மற்றும் தெற்கிலிருந்து வெளியாகும் தகவல்களை மையமாக வைத்து நோக்கும் போது படையினர், புலிகள், மற்றும் பொது மக்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களை ஒப்பரேஷன் யாழ்தேவி பலியெடுத்துள்ளதையே தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

உயிரிழந்தவர்கள் தவிர மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் பாரதூரமான முறையில் காயமடைந்துள்ளனர். இவர்களில் அநேகரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், பலர் அங்கவீனர்களாகியுமுள்ளனர் என்றும் வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'ஒப்பரேஷன் யாழ்தேவி' என்ற பெயர் இன்று இராணுவ நடவடிக்கையைக் குறிப்பதாகவே இருக்கின்றது. ஆனால் வடபகுதியின் இறுதி நிலப்பிரதேசமான காங்கேசன்துறை வரை கொழும்பிலிருந்து 'யாழ்தேவி' என்ற கடுகதிப் புகையிரதம் விரைந்த நாட்கள் மனதை விட்டகலாதவையாகும்.

தினந்தோறும் ஆயிரக்கணக்கானவர்களை ஏற்றிக்கொண்டு வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையே ஒரு பெரும் பிணைப்பை ஏற்படுத்தும் சேவையையே கடுகதி 'யாழ்தேவி' வழங்கியிருந்தது.

ஆனால் இன்று இந்த உன்னதமான ரயில் சேவையின் பெயரில் இராணுவ நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பது, வடக்கிற்கும், தெற்கிற்குமிடையிலான பிளவுகள் மேலும் விரிசலடைவதையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்தேவி கம்பீரமாக நெளிந்து, வளைந்து வடக்கு நோக்கிப் புறப்படும் காட்சியே அழகானதாகும்.

கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லும் ரயில் பாதைகளின் பிணைப்புகளிலிருந்தும் விலகி, வடக்கு நோக்கிய நேரான பாதையில் தனக்கேயுரிய மிடுக்குடன் 'யாழ்தேவி' பவ்வியமாக இறங்கிவிடும்.

தொடர்ந்து மூங்கில்மரச் சோலைகளை ஊடறுத்துப் பாயும் களனி கங்கையின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலத்தின் ஊடாக தனது வேகத்திற்கேற்ற ஒலியையும் எழும்பியவாறு யாழ்தேவி தனது பயணத்தை முழு மூச்சுடன் ஆரம்பிக்கும்.

இதனையடுத்து யாழ்தேவி செல்லும் பாதையில் தென்படும் அனைத்துமே மனோரம்மியமானவையாகவே இருக்கும்.

குளங்கள், வயல்வெளிகள், தாமரை பூத்த தடாகங்கள் அத்தடாகங்களை மொய்த்திருக்கும் புல்லினங்கள், இவையனைத்துக்குமப்பால் நீண்ட நீல மலைத்தொடர்கள், குன்றுகள், அவற்றினிடையே தென்படும் பௌத்த விகாரைகள் அடர்ந்த காடுகள் என வைத்த கண் வாங்காது லயித்திருக்கச் செய்யும் காட்சிகளே இந்த ரயில் பயணத்தின்போது தோன்றி மறையும்.

இவ்வாறு காடு, களனிகளைக் கடந்து சென்று நீண்ட பயணத்தின் பின்னர் 'யாழ்தேவி' ரயில் வண்டி யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் பிரவேசிக்கும் நுழைவாயிலே ஆனையிறவுப் பிரதேசமாகும்.

இப்பிரதேசத்திலிருந்தும் காங்கேசன்துறை வரையிலான பயணம் யாழ் குடாநாட்டின் அழகை அணு, அணுவாக அனுபவிக்கச் செய்வதாகவே இருக்கும்.

யாழ் குடாவின் கடலேரி ஊடாகச் செல்லும் போதே நெடிதுயர்ந்த பனை மரங்கள் அடர்த்தியாகத் தென்பட ஆரம்பிக்கும். தொடர்ந்து வயல் வெளிகள், மணல் திட்டுக்கள், பூவரச மரங்கள் மற்றும் அகன்று விரிந்த வெளிகளின் இடையே காணப்படும் கோயில்கள், குளங்கள் என குடா நாட்டின் அழகே தனியொரு அழகாக இருக்கும்.

இவ்வாறு தென்னிலங்கையிலிருந்து யாழ்குடா நாட்டுக்கு அற்புதமான பயண அனுபவங்களை வாரிவழங்கிய யாழ்தேவி, இன்று ஓர் இராணுவ நடவடிக்கையின் நாமமாக மாறி நூற்றுக்கணக்கானவர்களைப் பலி யெடுத்த நிலையில் காணப்படுகின்றது.

1990ம் ஆண்டு அரச படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே, இந்தியப்படையின் வாபஸையடுத்து இரண்டாவது தடவையாகப் போர் மூண்டது.


இதனையடுத்தே வவுனியாவுக்கப்பால், காங்கேசன்துறை வரையிலான ரயில்பாதையின் தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் ஆகியனவற்றைப் புலிகள் தமது பாவனைக்கென அப்புறப்படுத்தியிருந்தனர்.

இன்று இந்த ரயில் தண்டவாளங்களும், சிலிப்பர் கட்டைகளும் யாழ்குடாநாட்டில் காப்பரண்களாகவும், பதுங்கு குழிகளின் கூரைகளாகவும் மாறியுள்ள நிலையிலேயே அரச படையினர் 'ஒப்பரேஷன் யாழ்தேவி'யை ஆனையிறவிலிருந்தும் ஆரம்பித்திருந்தனர்.

ஆனையிறவை அண்டிய கிளாலியைக் கைப்பற்றுவதும், வடக்கே சாவகச்சேரிவரை முன்னேறுவதுமே அரசபடையினரின் பிரதான நோக்கங்களாக இருந்தன.

ஆனையிறவுப் பகுதியில் இரு வருடங்களுக்கு முன்னரும் பலத்த மோதல் ஒன்று இடம் பெற்றிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் ஆனையிறவு இராணுவ முகாமை சுற்றிவளைத்துப் பெருந்தாக்குதல் ஒன்றைத் தொடுத்திருந்தனர்.

ஆனையிறவு இராணுவ முகாம், இச் சுற்றிவளைப்பையடுத்து புலிகளின் வசமாகும் ஆபத்தை எதிர்நோக்கியிருந்தது. இதனையடுத்து புலிகளை எதிர்கொண்டு ஆனையிறவு இராணுவ



முகாம் மீதான முற்றுகையை முறியடிக்க ஆயிரக்கணக்கான துருப்புகள் வெற்றிலைக் கேணி என்ற பிரதேசத்தில் குவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து இத்துருப்பினருக்கும் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். மேலும் அநேகர் படுகாயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

'ஒப்பரேஷன் பல வேகய' என்று அந்த இராணுவ நடவடிக்கைக்கு அரச படையினர் பெயரிட்டிருந்தனர். மறைந்த வடபகுதித் தளபதியான மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, அவரது துணை அதிகாரியான பிரிகேடியர் விஜய விமலரத்ன ஆகியோர் முன்னின்று இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இறுதியில் பலத்த இழப்புக்களுக்கு மத்தியிலேயே அரச படையினர் புலிகளிடமிருந்து ஆனையிறவு முகாமைக் காப்பாற்றியிருந்தனர்.

எனவே 1991ம் ஆண்டில் இடம் பெற்ற இந்த இராணுவ நடவடிக்கையையடுத்து ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் தாக்குதலாகவே ஒப்பரேஷன் யாழ்தேவி விளங்கியிருந்தது.

ஆனையிறவுக்கப்பால் வடக்கே புலிகளின் நடமாட்டம் காணப்பட்டிருந்தது. இது தவிர கிளாலிப் பகுதியைப் புலிகள் தமது பிடியில் வைத்திருந்தனர்.

'ஒப்பரேஷன் யாழ்தேவி'யின் போது கிளாலியைக் கைப்பற்றி, சாவகச்சேரிப் பகுதிவரை முன்னேறுவதற்கு இராணுவத்தினர் திட்டமிட்டிருந்தனர்.

இம்முன்னேற்றத்தை இலகுவாக மேற் கொள்ளமுடியும் என்றே படையினர் எதிர்பார்த்திருந்தனர்.

அத்துடன் புலிகளையும் கஷ்டமின்றிச் சமாளித்து விடமுடியும் என்று எண்ணியிருந்தனர்.

ஆனால் புலிகளின் பலம் குறித்து அவர்கள் தப்புக் கணக்குப் போட்டிருந்ததையே, நடந்து முடிந்த போரின் இழப்புக்கள் தெளிவுப்படுத்தியுள்ளன.

உயிரிழப்புகள் மட்டுமல்லாது கோடிக்கணக்கான ரூபாய்கள் குண்டுகளாகவும், துப்பாக்கி வேட்டுக்களாகவும் இந்த யுத்தத்தின் போது விரயமாக்கப் பட்டுள்ளன.

வடக்கேயிருந்து கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் குறிப்பிடத்தக்களவு உயிர்ச் சேதத்தை அடைந்துள்ளனர் என்பதை அறிந்துக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இது தவிர விமானக் குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள் என்பவற்றினால் கோயில்கள், கட்டிடங்கள் மட்டுமல்லாது, நிலத்தினடியில் போடப்பட்டிருந்த பதுங்கு குழிகளும் தாக்கியழிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பகுதியை அண்டிய சங்கத்தானை என்ற இடத்தில் விமானக் குண்டு வீச்சினால் பதுங்கு குழியொன்று சரிந்ததில் அதனுள்ளிருந்த சுமார் முப்பது அப்பாவிப் பொதுமக்கள் மூச்சுத்திணறி மரணமாகியுள்ளார்கள்.

இந்நிலையில் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' வெற்றிகளை விட இழப்புக்களையே பெரிதும் சம்பாதித்துக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

வடமராட்சி இராணுவ நடவடிக்கை முதற்கொண்டு 'ஒப்பரேஷன் யாழ்தேவி' வரை பல இராணுவ நடவடிக்கைகள் வடக்கே மேற்கொள்ளப்பட்டிருந்தன. புலிகளின் பலத்தை ஒடுக்குவதும், அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை மீட்ப துமே இந்த இராணுவ நடவடிக்கைகளின் பிரதான இலக்குகளாக இருந்தன.

ஆனால் இராணுவத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டபோதெல்லாம் உயிர்களுக்கும், உடமைகளுக்குமே சேதங்கள் பாரியளவில் ஏற்பட்டனவே. தவிர ஆரோக்கியமான வெற்றிகள் எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை.

'ஒப்பரேஷன் யாழ்தேவி' முடிவடைந்த தறுவாயில் இலங்கையின் பிரபல ஆங்கிலத்தினசரியும், அரசின் செல்வாக்கிற்குட்பட்ட பத்திரிகையுமான டெயிலி நியூஸ் (Daily News) யுத்த நிலவரம் குறித்து ஆசிரியத்தலையங்கம் ஒன்றை எழுதியிருந்தது.

யுத்தமொன்று இடம் பெறும் பட்சத்தில் வெற்றி, தோல்விகளைவிட இழப்புக்களே பெரிதாக இருக்கின்றன. எனவே இந்த யுத்தம் வெற்றியையோ, தோல்வியையோ அடையாத நிலையில் உயிரிழப்புக்களையே கொண்டதாக இருக்கின்றது. இந்நாட்டின் இன்றைய இளஞ்சந்ததியினர் இருதரப்பிலும் பெருமளவில் இறந்திருப்பது நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்குவதாகவே விளங்குகின்றது, என அந்த ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் வடக்கு-கிழக்கு நிலவரத்தை சமாதானமாகத் தீர்த்து வைக்க அரசியல் ரீதியான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அந்த டெயிலி நியூஸ் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்கே 'ஒப்பரேஷன் யாழ்தேவி' மும்முரமடைந்திருந்த வேளையிலேயே இலங்கையின் வெளி விவகார அமைச்சர் திரு. எ.ஸி.எஸ்.ஹமீத் இலங்கையின் அரசியல் நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் கடந்த வாரம் உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

இலங்கையின் கடந்த பத்து வருட கால அரசியலை நோக்கும் போது, அமைச்சர் ஹமீத்தின் பங்களிப்பும் கவனத்திலெடுக்கப்படவேண்டிய தொன்றாகவே காணப்படுகின்றது.

திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் வெளி விவகார அமைச்சராக திரு.ஹமீத் நியமிக்கப்பட்டிருந்தார். இன்றைய இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் ஆட்சியில் இந்திய வெளியுறவு அமைச்சராக இருந்த காலத்தில் திரு. ஹமீத் இலங்கையின் வெளி விவகார அமைச்சராக இருந்தார்.

1983ம் ஆண்டு கொழும்பில் இனக்கலவரம் வெடித்திருந்த போது நிலைமையை நேரில் அறிந்து வர அன்று இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி, திரு.நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பியிருந்தார்.

திரு.ராவை அன்று கொழும்பில் எதிர்கொண்டழைத்ததுடன், அன்றைய நிலவரம் பற்றி அவருக்கு அமைச்சர் ஹமீதே முதலில் விளக்கமளித்திருந்தார்.

இதனையடுத்து 1983ம் ஆண்டிலிருந்து இந்திய அரசுடன் வெளிநாட்டமைச்சர் என்ற ரீதியில் திரு. ஹமீத் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக பேச்சுக்களை நடத்தியதுடன், அப்பிரச்னை சார்ந்த பல்வேறு அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் திரு.ஹமீத் நீதி, உயர் கல்வி அமைச்சராக இருந்தார். அப்போது இனப்பிரச்னை குறித்து அனைத்துக்கட்சி மகாநாடுகள் நடந்த போதெல்லாம் அவற்றுக்கு அவர் தலைமை தாங்கியிருந்தார்.

இது தவிர திரு. பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோது, திரு.ஹமீத் புலிகள் தரப்பினருடன் பல சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்ததுடன், யாழ்ப்பாணத்துக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு.வே.பிரபாகரனையும், சந்தித்திருந்தார்.

எனவே இன்று ஆளுங்கட்சியிலுள்ள அரசியல் வாதிகளில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னையுடன் நன்கு பரிச்சயமுள்ள ஒருவராகவே திரு. ஹமீத் விளங்குகின்றார்.

திரு.ஹமீத் இலங்கை இனப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போதிலும், அவரால் எந்த வகையிலும் பிரச்னைக்கான தீர்வினை எட்ட முடியாதிருந்தது.

ஆயினும், இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசியல் ரீதியிலான முயற்சிகளே சிறந்த வழி என்ற முடிவில் அவர் நம்பிக்கை கொண்டிருப்பதையே அவரது ஐ.நா.ஸ்தாபன உரை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

திரு.ஹமீத் இலங்கையின் இனப்பிரச்னை நீடிப்பதை ஏற்றுக் கொண்டிருப்பதுடன், அரசியல் ரீதியிலான நடவடிக்கை மூலமே ஒரு தீர்வைக்கான முடியும் எனவும் தமது ஐ.நா. உரையில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர் இலங்கையின் இனப் பிரச்னையை இலங்கையினாலேயே தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இலங்கையில் அரசியல் தீர்வுக்கான அறிகுறிகள் எதுவும் தென்படுவதாக இல்லை.

இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டு, பெருமளவில் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ள நிலையே நாட்டில் காணப்படுகின்றது.

அரசியல் ரீதியிலான முயற்சிகள் மூலமே ஒரு தீர்வைக்காண முடியுமென்று இலங்கையில் அனைத்துத் தரப்பினரும் நன்குணர்ந்துள்ளனர்.


ஆனால் அரசியல் முயற்சிகளை உரிய விசுவாசத்துடன் முன் னெடுப்பதில் அக்கறையற்றவர்களாகவே ஆட்சியாளர்களும், ஏனையோரும் காணப்படுகின்றனர்.

ஆட்சியிலிருப்போர் இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு, பிரச்னையைத் தீர்க்க முழு அளவில் அரசியல் ரீதியாக இயங்க வேண்டுமென்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் மறுபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வளவு தூரம் அரசியல் ரீதியான செயற்பாடுகளில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பது தெளிவற்றதாகவே இருக்கின்றது.

அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் அடிக்கடி கூறிவருகின்றனர். ஆயினும் அவர்கள் தகுந்த அணுகுமுறைகள் மூலம் அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் தமக்கிருக்கும் நம்பிக்கையை வெளியிடத் தவறியவர்களாகவே இருக்கின்றனர்.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்



புலிகளும் பேச்சுவார்த்தைகளுக்கு வர வேண்டியது இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமானது என்பதனையே நடந்து முடிந்த ஒப்பரேஷன் யாழ்தேவி உணர்த்துவதாக இருக்கின்றது.

-இலங்கையில் பிரிட்டிஷ்காரர் ரயில் வண்டிகளை ஓடவிட்டிருந்த காலம்.

மலையகத்தில் தேயிலை மற்றும் பெருந்தோட்ட உற்பத்திகளின் போக்குவரத்துக்கென்றே ரயில் பாதைகள் ஆரம்பத்தில் போடப்பட்டன. பின்னர் படிப்படியாக இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் ரயில் பயணங்கள் விஸ்தரிக்கபபடலாயின.

சேர்.பொன் இராமநாதனே வடபகுதிக்கு ரயில் பாதை போடப்பட வேண்டுமென்ற யோசனையை பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் முதலில் தெரிவித்திருந்தார்.

அப்போது சிலர் இந்த யோசனையைக் கிண்டல் செய்தனர். "வடக்கிற்கு ரயில் பாதை அமைப்பது ஒரு கடினமான பணி. யாழ்ப்பாணத்துக்கு ரயில்பாதை போடுவது, சந்திரனுக்குச் செல்ல பாதையிடுவதைப் போன்ற நடவடிக்கையாகும்" என்று அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே பாதைப் பிணைப்பு மட்டுமல்ல, அரசியல் பிணைப்பொன்றை உருவாக்கி, இரு தரப்பினருக்குமிடையே ஒரு சமரசத்தை உண்டுபண்ணுவதுகூட சந்திரனுக்குப் பாதையிடுவதை யொத்த பணியாகவே இருக்கிறது. ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எந்தப் பெண் முகத்திலும் இல்லாத ஒன்று! பால் வண்ண முகத்தில் இடம்மாறும் மச்சம்!



எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று அவரிடம் இருக்கிறது.

அதுவும் முகத்தில் இருக்கிறது. அது அவருக்கு அழகும் கொடுக்கிறது.

அந்த அழகியின் பெயர் அன்னா நிக்கோஸ். விளம்பரப் படங்களுக்கு தோற்றம் கொடுக்கும் மொடல் அழகி அன்னா.

அவரது பளீர் வெண்மையான முகத்தில் ஒரு மச்சம்.

பால் வண்ண முகத்தில் சிறு புள்ளியாய் இருக்கும் அந்த மச்சமே அவரது அழகுப் புள்ளி என்று அவர் படங்களை ரசிப்பவர்களால் கூறப்படுகிறது.

முகத்தில் மச்சமிருப்பது என்ன அதிசயம் என்று நீங்கள் கேட்கக்கூடும்.

அங்கேதான் இருக்கிறது விசயம். அந்த அழகுப் புள்ளி அடிக்கடி இடம் மாறுகிறது.

நட்சத்திரம் நகர்வதுபோல அந்த விளம்பர நட்சத்திரத்தின் முகத்தில் உள்ள மச்சமும் படத்திற்கு படம் வெவ்வேறு இடத்தில் காணப்படுகிறது.

அன்னாவிடம் கேட்டால் பதில் சொல்லாமல் நழுவுகிறார்.

"அவரது முகத்தில் உள்ள மச்சம் இயற்கையானது. ஆனால் அது எங்கே இருக்கிறது என்பதைக் கூறமாட்டேன்." என்கிறார் அன்னாவின் ஒப்பனையாளர்.

உலகப் பிரசித்தி பெற்ற சஞ்சிகைகளின் முன் அட்டைகளை அலங்கரிக்கும் அழகுத் தேவதையின் மச்சத்திலுள்ள மர்மம் அறிய இரசிகர்கள் ஆவல் படுகிறார்கள்.

விரைவில் அன்னா ஒரு திரைப்படத்தில் தோன்றுகிறார்.

அப்போது அழகுக் குறியும் கமரா வெளிச்சத்தில் தெரியும். மர்மம் துலங்கும்.

## சேலை கட்டும் பெண்ணுக்கொரு வாசம் உண்டு....

விலை உயர்ந்த புடவைகளோ, நிறைய புடவைகளோ வைத்திருப்பதில் ஒன்றும் பெருமை இல்லை. அந்தப் புடவையை நீங்கள் எப்படி அணிகிறீர்கள் என்பதில் தான் அழகும், பெருமையும் அடங்கி இருக்கிறது.

இதோ சில ரிப்ஸ்:

- திருமணங்களுக்குச் செல்கையிலும், தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்ளும் போதும் பட்டுப்புடவைகளை அணியுங்கள். மிகவும் அகலமான சரிகைக் கரையைவிட, உடல் பூராவும் வேலைப்பாடுகள் செய்த புடவைகளே கவர்ச்சியான தோற்றத்தைத் தருகிறது.
- சாதாரணமாக புடவைகள் கனத்த நிறமாயின் பிளவுஸ் வெளிர் நிறமாகவும், புடவைகள் வெளிர் நிறமாயின் கனத்த நிற பிளவுசும் ஏற்றதாக இருக்கும்.
  நீங்கள் அணியும் கழுத்து அணிகளை எடுத்துக் காட்டும் வகையில் ஜாக்கெட் இருக்க வேண்டும். அல்லது ஜாக்கெட்டுக்கு பொருத்தமாக கழுத்து நகை அணிய வேண்டும். இரண்டும் பொருந்தாத வகையில் இருக்கக்கூடாது.
- கடைகளுக்கோ, வேறு இடங்களுக்கோ போவதாயின் நைலக்ஸ் சேலைகளை அணியுங்கள்.
- கடற்கரை, பூங்கா, சிநேகிதி வீடு என்று எங்காவது 'ஹாயாக' போவதென்றால் கைத்தறிப் புடவைகளை அணியுங்கள்.
- தேநீர் போன்ற விருந்துகளாயின் அழகு வேலைப்பாடுகள் செய்த உடைகளே ஏற்றவை.
- புடவையில் நெடுங்கோடு இருந்தால் உயரமான தோற்றத்தையும், குறுக்குக் கோடுகளாக இருந்தால் குட்டையாக இருப்பது போலவும் ஒரு அபிப்பிராயம் வரும். இதை கவனத்தில் கொண்டு டிசைனை தேர்ந்தெடுங்கள்.
- பொதுவாக உடல் பூராவும் கொடி போல் வேலைப்பாடுள்ள புடவை மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும்.
- சற்று உயரமாக இருப்பவர்கள் அகலமான போர்டர் உள்ள புடவைகளைக் கட்டலாம். உயரம் தெரியாது. மற்றவர்கள் மெல்லிய போர்டர்களைத் தேர்ந்தெடுப்பதே நல்லது.
- புடவைகளின் உடல், வேலைப்பாடுகள் நிறைந்ததாகவோ, அல்லது கோடுகள்



கொண்டதாகவோ இருக்குமாயின் வேலைப்பாடுகள் எதுவும் இல்லாத வெறும் துணியே ஜாக்கெட்டுக்குப் பொருந்தும். கையில் அகலக் கரையும் கழுத்துப் பகுதி அகலக் குறைவாகவும் உள்ள ஜாக்கெட் துனி அழகைத் தரும்.

- வெறும் கரை மட்டும் போட்ட பிளைன் கலர் புடவை என்றால் கோடுகள், புள்ளிகள் போட்ட பிளவுஸ் அணியலாம்.
- பெரிய விழாக்களில் மாலை நேரத்தில் பங்கெடுத்துக் கொள்வது என்றால், விளக்கொளியில் மின்னும் உடைகளையே உபயோகிக்க வேண்டும். அதுதான் அழகை அதிகரிப்பதோடு ஒரு கவர்ச்சியான பொலிவையும் தரும்.
- புடவைகளைப் போலவே பிளவுஸ்களிலும் கோடுகளைக் கவனித்துத் தைக்க வேண்டும். கோடுகள் நீள வாட்டத்தில் இருந்தால் கைகள் நீளமானதாகவும் உடல் ஒல்லியாகவும் தோன்றும். குறுக்குக் கோடுகளாக இருந்தால் கைகளும் உடலும் சிறிது பருமனாகத் தோன்றும்.
- பூ வேலைகளிலும் உயரமான வகை, கையை நீண்டு இருப்பது போல தோன்றச் செய்யும்.
- ஜாக்கெட் மெல்லிய துணியினால் அமைந்திருந்தால், உள்ளே அணியும் பிரா பூ வேலைப்பாடுகள் செய்ததாக அணிந்து கொள்ள வேண்டும்.
- மேற்சொன்ன விதங்களில் புடவை அணிந்து பாருங்கள். மற்ற பெண்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்பட ஆர்ம்பித்து விடுவார்கள். உங்களுக்குப் பிரியமானவரும் அசந்து போவார்.

## லேடீஸ் ஸ்பெசல்

### பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**முதற்பரிசு - பட்டுச்சேலை**
**ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள் ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.**

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## சமைப்போம் சுவைப்போம்

சுவையோடு தருவது சுகந்தினி

### கார பிஸ்கட்

**தேவையானவை:**

கோதுமை மா- 1/2 கிலோ
பேக்கிங் பவுடர்-1 தே.கரண்டி
வெண்ணை-1/4 கிலோ
நறுவல் நறுவலாக இடித்த மிளகு கொஞ்சம்
உப்பு-சிறிதளவு.

**செய்முறை:**

கோதுமை மாவையும் பேக்கிங் பவுடரையும் சேர்த்து ஒன்றாக இரு தடவைகள் சலித்தெடுக்கவும். மாவை ஒரு பாத்திரத்தில் இட்டு அதனுள் அளவாக உப்பு, மிளகுதூள் ஆகிய மூன்றையும் சேர்த்து குழைத்து சிறிது நேரம் மூடி வைக்கவும். பின்பு அதனுள் சிறிது சிறிதாக நீர் விட்டு ரொட்டிக்குக் குழைப்பது போல் குழைக்கவும்.

அதைச் சிறு சிறு உருண்டைகளாக்கி ஒரு நீள்சதுர பலகையில் அல்லது சுத்தமான தகட்டில் வைத்து உருட்டி விரும்பிய வடிவில் வெட்டி பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். இப்போது கார பிஸ்கட் ரெடி.

### கரம் மசாலா

நமது சமையற் பாக முறைகளில் கரம் மசாலா என்றொரு பதார்த்தத்தைக் குறிப்பிடுகிறோம். இது என்ன பொருள் என்று கேட்டு பல சகோதரிகள் எழுதுகின்றனர். பொதுவாக இந்தியச் சமையல்களுக்கு-குறிப்பாக இறைச்சிக்கறிகளுக்கு இந்தக் கூட்டுப் பொருளைப் பயன்படுத்துவார்கள். இது மிகச் சாதாரணமான கூட்டுத் தயாரிப்பே. மொத்தமாகச் செய்து பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டால் அடிக்கடி பயன்படுத்திக் கொள்ளலாம்.

**தேவையானவை**

கொத்தமல்லி- 2 மேசைக்கரண்டி
ஜாதிக்காய்- 1
கராம்பு- 1 தேக்கரண்டி
ஏலக்காய்- 2 தேக்கரண்டி
சீரகம்- 2 தேக்கரண்டி
மிளகு- 1 மே.கரண்டி
கறுவாப்பட்டை- 3 அங்குலத்துண்டு.

**செய்முறை:**

ஜாதிக்காயை உடைத்து உள்ளிருக்கும் பகுதியை சிறு துணுக்குகளாக்கிக் கொள்ளவும். பட்டையையும் சிறு சிறு துண்டுகளாக கையால் உடைத்துக் கொள்ளலாம். ஒரு பாத்திரத்தை அளவான சூடுள்ள அடுப்பில் வைத்து மேற் கூறப்பட்ட சகலவற்றையும் தீய்ந்து போகாமல் வறுத்து, ஆறியபின் இடித்துத் தூளாக்கி, நீர்ப்பிடிப்பில்லாத பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். தேவையான போது பதார்த்தங்கள் தயாரிக்கும் அளவுக்கேற்ப பயன்படுத்தலாம்.

# கொம்பியூட்டர் யுகத்தில் குழந்தை வளர்ப்பு!

பிரகலாதன் கதை பலருக்குத் தெரியும் கருவிலிருக்கும் போதே நாரதர் பிரகலாதனின் தாய்க்கு கதை சொல்லிக் கொண்டிருக்கும் வேளையில் அந்தத் தாய் தூங்கி விட்டாள். ஆனால் கருவில் வளர்ந்த குழந்தை "உம்...உம்..." என்று கதை முழுவதையும் கேட்டதாகக் கதை தொடர்கிறது.

இது புராணக்கதை தான். ஆனால் இதில் உண்மையும் புதைந்து கிடக்கிறது.

ஒரு குழந்தை தாயின் வயிற்றில் வளரும் போதே அதற்கு பல புறத்தாக்கங்கள் ஏற்படுகின்றன. அத்தகைய தாக்கங்களே அந்தக் குழந்தையின் குண நலன்களை வடிவமைக்கின்றன.

இதனால்தான் கருவுற்ற தாய்க்கு எத்தகைய மனக்கிலேசமோ சங்கடமான நிலைமைகளோ ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுகின்றனர்.

பிறக்கும் போதே சில குழந்தைகள் சிறந்த மேதைகளுக்குரிய இலட்சணங்களைக் கொண்டு விளங்குவதாக அறிகிறோம். பெரும் பாலும் கருவிலிருக்கும் போதே அதன் தாயாருக்கு ஏற்படுகின்ற அநுபவங்கள் குழந்தைக்கு கருவிலேயே தொட்டு விடுகின்றன. கருவுற்ற தாயார் இசைப்பயிற்சி செய்து கொண்டிருந்தாலோ அல்லது நல் இசையினை தொடர்ந்து செவி மடுத்து வந்தாலோ பிறக்கும் குழந்தைக்கும் இசையில் நாட்டம் ஏற்படவே செய்யும். பிறவிக் கலைஞர்கள் இவ்வாறு தான் உருவாகிறார்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பாரம்பரிய உயிரணு-விந்து ஆகிய அம்சங்களும்கூட பிறவித் திறமைசாலிகளை உருவாக்கும் காரணிகளாக அமைவதும் உண்டு.

இன்று பிறக்கும் குழந்தைகளின் அறிவுக் கூர்மை இற்றைக்கு 50 வருடங்களுககு முன் பிறந்த குழந்தைகளிடம் இருக்கவில்லை. ஒரு குழந்தை வளர்ந்து அறிவாற்றல் மிக்கவனாகவோ, வீரனாகவோ அல்லது முட்டாளாகவோ போக்கிரியாகவோ மாறுவது பிறப்பினாலோ பாரம்பரிய வழிமுறைகளினாலோ ஏற்படுவதை விட அது இளமையில் வளரும் சூழ்நிலையைப் பொறுத்தே அமைகிறது.

நீதி வழுவாதவர் என்று பெயரெடுத்த ஒரு நீதிபதி ஒரு நிரபராதியை-சாட்சியங்களை அடிப்படையாக வைத்து குற்றவாளியாகக் கண்டு, அந்த நபருக்கு பல வருடங்கள் சிறைத் தண்டனை விதித்தார்.

தண்டனையை அனுபவித்து விட்டு சிறை மீண்ட அந்த நபர் பழிக்குப் பழி வாங்கும் நோக்குடன் அந்த நீதியரசருடைய மகன் ஒருவனை கடத்திச் சென்று ஒரு பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரனாக மாற்றி விடுகிறான். வட இந்தியாவில் உண்மையாக நடைபெற்றதாகக் கூறப்படும் இக்கதை இந்தித் திரைப்படமாகவும் வந்துள்ளது.

தங்கள் குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாப் பெற்றோருக்கும் இருக்கவே செய்யும். ஆனால் அதற்கான சிறந்த சூழ்நிலைகளை தக்கபடி ஆரம்பத்திலேயே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற உண்மையினை மறந்து விடுகிறார்கள்.

கொம்பியூட்டர் யுகம் என்பதனால் குழந்தை கருவிலேறும்போதே அதனுடைய மூளையின் வளர்ச்சியும் அதே வேகத்துக்கு ஈடாகவே இருக்கிறது. குழந்தை பிறந்ததும் கால நிலைக்கேற்ப அதனை வளர்க்கும் முறைகளையும் பெற்றார் கடைப்பிடித்தாக வேண்டும்.

குழந்தை பிறந்து ஆறாவது மாதத்திலேயே அதற்கு எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் பயிற்சிகளை ஆரம்பித்தால் அக்குழந்தை மிக விரைவிலேயே படிக்கும் ஆற்றலைப் பெற்று விடும் என்று இஸ்ரேலின் தலை நகரான ரெல் அவிலில் ஆசிரியராகக் கடமைபார்க்கும் ஆறன் ஸ்ரேண்பேக் கூறுகிறார்.

இவருக்கு 1958 ஆகஸ்ட் 16ல் ஒரு பெண் குழந்தை பிறந்தது. தான் கண்ட புதிய கற்பித்தல் முறையின் மூலம் ருத் என்ற தன் குழந்தைக்கு பயிற்சி அளித்தார். ஆறாவது வயதில் அக்குழந்தை பள்ளிக்கு அனுப்பப்பட்ட போது, அக்குழந்தை வீட்டில் அன்றாடச் செய்தித் தாள்களைப் படிப்பதுடன் வேறு இரண்டு புத்தகங்களையும் முழுமையாகப் படித்து கருத்தினையும் அறிந்து கொள்ளும் ஆற்றலையும் பெற்றுவிட்டதாம்.

15வது வயதில் ரெல் அவில் பல்கலைக் கழகத்தில் கணிதம் போதிக்கும் அளவு ஆற்றலையும் ருத் பெற்றிருந்தாள்.

குழந்தை பிறந்து மருத்துவமனையிலிருந்து வீடு வந்த நாளிலிருந்து அந்தக்குழந்தை -ருத்- வளர்ந்த அறையினுள் சாஸ்திரிய சங்கீதம் மட்டுமே ஒலிக்கத் தக்கவகையில் வானொலி இயக்கப் பட்டது. "இது குழந்தையின் ஆத்மாவைப் புனிதப்படுத்தும்" என்று தனது மனைவியிடம் ஸ்ரேண்பேக் கூறினார்.

குழந்தைக்கு விளையாடுவதற்கு பொம்மைகளும் அவை போன்ற சாதனங்களும் கொடுக்கப்பட்ட போதும் சந்தர்ப்பம் அறிந்து அதன் கவனத்தை அறிவு புகட்டும் திசையில் திருப்பியிருக்கிறார்.

எழுத்துக்களை தனித்தனியாக அட்டைகளில் அழகாக எழுதி அவற்றை மெல்ல மெல்ல அக்குழந்தைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். குழந்தை தூங்கும் சமயத்தை தவிர்த்து ஏனைய நேரங்களில்- வீண் பொழுதைக் கழிக்காமல் அக்குழந்தை கண்ணும் கருத்துமாகக் கண்காணிக்கப்பட்டு வந்தது.

இதன் பயனாக இக்குழந்தை ருத் 11 மாதக் குழந்தையாக இருக்கும் போதே உன்னுடைய வயதென்ன" என்று தகப்பன் கேட்டுள்ளார்.

குழந்தை தன்முன் கிடந்த எண்ணும் எழுத்துமுள்ள அட்டைகளை உருட்டிப்புரட்டி 10 என்று பொறிக்கப்பட்ட அட்டையினை எடுத்துக்காட்டியதாம். பின்னர் அந்த அட்டைகளுள் எதையோ தேடியிருக்கிறது. தேடிய பொருள் கிடைக்கவில்லை, உடனே தனது ஒரு விரலைக் காட்டியிருக்கிறது.

இளமையில் பழக்கப்பட்ட காரணத்தினால் எப்போதும் புதுமையான சம்பவங்களை அறிய வேண்டும் என்ற துடிப்பு ருத்திடம் அதிகமாகவே இருந்துள்ளது. ஏனைய குழந்தைகளுக்கு ஏற்படும் முரட்டுப் பிடிவாதங்களும் ருத்திடம் இல்லாமற் போகவில்லை என்று கூறும் ஸ்ரேண்பேக் இன்று சிறந்த அறிவாளியின் தந்தை என்று கூறுவதில் பெருமைப்படுகிறார்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று பழமொழி உண்டு. ஆகவே குழந்தைகளாக இருக்கும்போதே குழந்தைகளின் வருங்காலத்தை கருத்தில் கொண்டு நல்ல பழக்க வழக்கங்களை குழந்தைப் பருவத்திலேயே பழக்க வேண்டும். ஒரு தந்தையை விட தாய் தான் குழந்தையுடன் மிக-அதிகமன நேரத்தைச் செலவிடுவதனால் அக்குழந்தையைப் பழக்கும் பொறுப்பு தாயையே சார்ந்து நிற்கிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு உடலில் இரு தலைகள்!




அழகிய குழந்தை ஒன்றுக்குத் தாயாகப் போவதை எண்ணி மகிழ்ந்தாள் அந்தத்தாய்.

ஆனால் அவளுக்குப் பிறந்த குழந்தையைக் கண்டதும் அதிர்ந்து போனாள்.

ஓர் உடலும் இரு தலைகளும் கொண்ட பெண் குழந்தை ஒன்றே பிறந்திருந்தது.

ரஷ்யாவில்தான் இந்த ஆச்சரியமான குழந்தை(கள்) பிறந்திருக்கிறது.

இந்தப் பிராந்தியத்தில் பிறப்பு வீதம் 30 வீதம் குறைந்திருக்கிறது. இருப்பினும் கடந்த 12 மாதங்களில் 1500 குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறந்துள்ளன.

"ரஷ்யாவில் பெண்கள் கருத் தரிப்பதை சில காலம் வரை ஒத்தி வைக்காவிட்டால் செர்னோபில் தாக்கத்தின் விளைவாக இத்தகைய குறைபாடுகளுள்ள குழந்தைகள் பிறப்பதைத் தடுக்க முடியாது என்று டாக்டர் கஸாரெயின் கூறுகிறார்.

இரு தலைகளுடன் பிறந்துள்ள

## ரஷ்யாவில் பிறந்திருக்கும் அதிசயக் குழந்தை!!

இந்தக் குழந்தை உயிருடன்தான் இருக்கிறது. ஆனால் எவ்வளவு காலம் உயிருடன் இருக்கும் என்று மருத்துவர்களால் கூறமுடியவில்லை.

இரு தலைகளிலும் கறுத்த முடி வளர்ந்திருக்கிறது. சாதாரண குழந்தைகளைப் போன்று இதற்கு இரு கைகளும் இரு கால்களும் உள்ள போதிலும், உடலுக்குள் இரு இருதயங்களும், இரு முள்ளந்தண்டுகளும் நான்கு சுவாசப் பைகளும் உள்ளன.

இத்தகைய பிறவிகள், 1986ம் ஆண்டு சோவியத் யூனியனில், உக்கிரேன் குடியரசில் அமைக்கப்பட்டிருந்த அணு உலை விபத்தின் பின்னர் சகஜமாக ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டதே.

இந்த விபத்தின் பின்னர் பிறந்த பல குழந்தைகளுக்கு ஏதோ ஒரு வகையான குறைபாடு இருந்த போதிலும் இரு தலைகளுடன் குழந்தைகள் பிறக்கவில்லை என்று ரஷ்ய நிபுணர் யூறி கஸாறெய்ன் கூறுகிறார்.


இக்குழந்தையின் உடலுக்குள் இரு தனித்தனிக் குழந்தைகளுக்கான உள்ளுறுப்புகள் இருக்கின்றன. ஆனால் வெளியே ஒரே குழந்தைக்குரிய இரு கைகளும் இரு கால்களுமே உள்ளன.

இதனால், ஏனைய சையமீஸ் இரட்டையர்களைப் போன்று இக் குழந்தை(களை)யை வெட்டிப் பிரிக்க முடியாதென வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இக்குழந்தை இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் வாழும் என்று சொல்வதற்கும் அவர்களால் முடியாதிருக்கிறது.

"எனது 20 ஆண்டு மருத்துவ அனுபவத்தில் இத்தகைய அமைப்புக் கொண்ட ஒரு குழந்தையை நான் கண்டதில்லை" என்று மருத்துவ நிபுணர் டாக்டர் பெற்று ஸ்ட்ரட்டுரலாட் தெரிவிக்கிறார்.

## வல்லவன் பல்லும் பளுதூக்கும்




பளுதூக்கும் வீரர்கள் பற்றி அறிந்திருப்பீர்கள்.
பல்லால் பளுதூக்கும் வீரர்கள் பற்றி அறிந்திருக்க மாட்டீர்கள்.
61 கிலோ எடைகொண்ட பளுவைச் சுலபமாகத் தூக்கிவிடுகிறார் டோனி.

51வயதான டோனி முன்னாள் குத்துச்சண்டை வீரர்.

61 கிலோ எடையைத்தூக்கி முடித்துவிட்டு இன்னும் கொஞ்சம் அதிகம் தூக்கும் ஆசை வந்தது.

165 கிலோ எடையைப் பல்லால் தூக்கியிருக்கிறார்.

தாடை எலும்புகள் டமால்..டமால்.

இனிமேல் 65 கிலோவுக்கு மேல் தூக்குவதில்லை என்கிறார்.

## கொம்போடு வாழும் மனிதர்கள்! ஆச்சரியம் ஆனால் உண்மை!!



மனிதருக்கும் கொம்பு முளைக்கலாம். மருத்துவ சஞ்சிகை கூறுகிறது. "காலத்துக்குக் காலம் மனிதர்களுக்கும் கொம்பு முளைக்கும் சம்பவங்கள் நடைபெறுவது உண்மை தான்" என்று உளவியல் நிபுணரான டாக்டர் ஜோஜ் பிரவுண் கூறுகிறார்.

அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் திரட்டப் பட்டுள்ளன.

- நியூயோர்க் புரூக்ளினைச் சேர்ந்த ஒருவருக்கு தலையின் வலது புறத்தில் செம்மறி ஆட்டின் கொம்பு போன்ற வளைவான வளர்ச்சி காணப்பட்டது. 34 வயதான இவர் இதனை, தொப்பியை அணிந்து 6 வருடங்கள்-பிறருக்குத் தெரியாமல் மறைத்து வந்தார்.

  ஒருநாள் திறந்த வெளியில் பணியிலீடுபட்டிருந்த போது, பலமாக வீசிய காற்று இவருடைய தொப்பியைப் பறித்து விட்டது. இதனைக் கண்டு, உடன் பணி புரிந்தவர்கள் பயந்து இருவருடனான தொடர்புகளை முறித்துக் கொண்டனர். அன்றுடன் தனது தொழிலையும் அவர் இழந்தார்.



கன்னத்தில் கொம்பு முளைத்த பெண்

- தென் ஆபிரிக்காவில் 17 வயதான ஒரு பெண்ணுக்கு கால் கைகளிலெல்லாம் மொத்தம் 45 கொம்புகள் முளைத் துள்ளன.
- மெக்சிக்கோவில் பாரம் சுமக்கும் தொழிலாளி ஒருவரின் தலையில் கொம்பு முளைத்தது. இதற்கு மூன்று கிளைகளும் முளைத்தன. கொம்பின் அடிப்பாகம் 14 அங்குல சுற்றளவில் காணப்பட்டது.
- 88 வயதான ஒரு முதியவருக்கு 6 அங்குள நீளமான வளைந்த கொம்பு ஒன்று வலது கையில் முளைத்தது.



"புராண -இதிகாசக் கதைகளில்தான் மனிதர்கள் கொம்புடன் காணப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கிறது." இவ்வாறு கூறினார் டாக்டர் பிரவுண்.



தலையில் கொம்பு முளைத்த புறாக்ளின் வாசி

இந்த 88 வயதானவருக்கு டாக்டர் பிரவுண் சிகிச்சை அளித்தார்.

"அனோமலீஸ் அன்ட் கியூறியோசிட்மீஸ் ஒஃப் மேடிசின்" (மருத்துவத் துறையில் வழமைக்கு மாறான மற்றும் வியப்பூட்டும் விந்தைகள்) என்ற நூலில் மனிதர்களுக்கு கொம்பு முளைப்பது பற்றிய விபரங்கள் பல தரப்பட்டுள்ளன.

இதில் ஒரு பெண்ணுக்கு மொத்தம் 185 கொம்புகள் முளைத்திருந்ததாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கொம்பு முளைப்பதற்கான மருத்துவரீதியான சரியான காரணமெதுவும் கண்டுபிடிக்கப் படவில்லை.

(புரூக்ளினைச் சேர்ந்த நபருக்கு கொம்பு முளைக்க ஒரு காரணம் இருந்தது.

அவருடைய தலையில், வேறொருவருடனான சண்டையின் போது, அடிவிழுந்துள்ளது. அடிவிழுந்த இடத்தில் ஒரு சிறிய கட்டி தோன்றியது. மருத்துவரிடம் காண்பித்தபோது அதனை சத்திர சிகிச்சை மூலம் வெளியே எடுத்து விட்டார்.

ஒரு மாதத்தின் பின்னர் அதே இடத்தில் மற்றுமொரு கட்டி வளரத் துவங்கியது. மறுமுறையும் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பின்னர் ஆறுமாதங்களில் மீண்டுட் கட்டி ஏற்பட்டு மிக வேகமாக வளர ஆரம்பித்தது.

மென்மேலும் அறுவை மருத்துவம் செய்ய விரும்பாத அந்நபர் கொம்பை மறைக்க தொப்பி அணியத் துவங்கினார். அவருடைய குழந்தைகள் கூட அவரை தொப்பியின்றிக் காணவில்லை. உடன் பணி புரிவோரும் அவ்வாறே, பலமாக வீசிய காற்றுத்தான் குட்டை வெளிப் படுத்தியது.

www.padippakam.com நன்றி

# மினி சினி

★ அமரன் படத்தில் ஆதித்தியன் இசையில், சொந்தக் குரலில் இரு பாடல்களைப் பாடியிருந்தார் கார்த்திக். இப்பாடல்கள் ரசிகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றன. கார்த்திக் தற்போது நடித்து வரும் சின்னஜமீன் படத்தில் இளையராஜாவின் இசையில் வாணிஜெயராமோடு இணைந்து ஒரு பாடலைப்பாடியுள்ளார்.

★ பாரதிராஜாவால் கண்டெடுக்கப்பட்டு, பின்னர் ரஜினியின் வள்ளியில் கதாநாயகியாக நடித்தவர் பிரியாராமன். தற்போது ஆனந்தி பிலிம்ஸ் தயாரிக்க, பாரதிராஜா இயக்கும் படத்தில் பிரியாராமன் கதாநாயகியாக நடிக்கிறார். கதாநாயகனாக நடிக்க இருப்பவர் பிரபு.

★ நடிகர் ரகுமான் அண்மையில், சென்னையைச் சேர்ந்த மெஹ்ருன்னிசா டியாவை திருமணம் செய்து கொண்டார். அவரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் ஏராளமான திரையுலகப் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

★ கல்நாயக் பெரு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மாதுரி டிக்ஸிட் தன் சம்பளத்தை 45 லட்சமாக உயர்த்தி விட்டார். 1984ல் தனது முதல் படத்திற்காக அவர் பெற்ற சம்பளம் 25 ஆயிரம் ரூபா.

★ வில்லன்கள் எல்லாரும் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், கதாநாயகனாக நடித்து வரும் அர்விந்த் ஸ்வாமி ஒரு படத்திலாவது வில்லனாக நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

★ சேவகன், பிரதாப் போன்ற படங்களை அர்ஜுன் தயாரித்து இயக்கினார். அடுத்து இவர் கதாநாயகனாக நடித்து தயாரித்து இயக்கும் படத்திற்கு ஜெய்ஹிந்த் என்று பெயரிட்டுள்ளார்.

★ மதுரைமீனாட்சி படத்திற்குப் பின் கலைஞர் கருணாநிதியின் கதை-வசனத்தில் தேசக்கரம் என்னும் புதிய படமொன்று உருவாக இருக்கின்றது.

★ மணிரத்தினத்தின் சொந்தப்படமான தசரதனை இயக்கியவர் கிட்டி என்னும் ராஜாகிருஷ்ணமூர்த்தி. இவர் அடுத்ததாக "அன்பே" என்னும் படத்தை இயக்கவுள்ளார். தெலுங்கு நடிகர் சக்கரவர்த்தி கதாநாயகனாக நடிக்கிறார்.

★ அன்னக்கிளி படத்திலிருந்து இளையராஜாவுடன் சேர்ந்து பணியாற்றியவர் நரசிம்மன். இடையில் அச்சமில்லை, அச்சமில்லை, கல்யாண அகதிகள் போன்ற படங்களுக்கு இசையமைத்தார். தற்போது சுரேஷ் மேனனின் பாசமலர்கள் படத்திற்கு இசையமைக்கிறார்.

★ போர்க்கொடி என்னும் படத்தை இயக்கியவர் ராஜசிற்பி. இந்தப்படம் பலகாலமாக விற்பனையாகாமல் முடங்கிக் கிடக்கிறது. இருப்பினும் இவர் நெப்போலியன் கஸ்தூரியை ஜோடியாக வைத்துத் தாமரை என்னும் படத்தை இயக்கி வருகிறார்.

# வசதியான ஆட்டம்!

தமிழில் வாய்ப்பில்லாமல் பிற மொழிப்படங்களில் தோன்றியவர்களின் பட்டியலில் ரம்யா கிருஷ்ணனின் பெயரும் இருக்கிறது. கவர்ச்சியான உடல் கைகொடுத்ததால் இந்தியிலும் வாய்ப்புக் கிடைத்தது.

இப்போது இந்தியில் சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கும் "கல்நாயக்" படத்தில் ரம்யா கிருஷ்ணன் ஒரு நடனம் ஆடியிருக்கிறார். ஆட்டமோ-பாட்டமோ வருமானம் வருகிறது. புகழும் சேருகிறது. அது போதும்.



காளைகளுக்கு சவால்விடும் கம்பீர அழகுகாட்டும் கோதை இவள்

ரம்யா கிருஷ்ணன்

வெடி பு



# ரஜனியின் வீரா

ரஜனிகாந்த் இப்போது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில் இருக்கிறார். இமயமலை, ரிஷிகேஷ், அலெக்ஸாண்ட்ரியா போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் போய் இருக்கிறார். அவர் திரும்பி வந்ததும் பஞ்சு அருணாசலம் தயாரித்து அண்ணாமலை புகழ் சுரேஷ்கிருஷ்ணா இயக்கவுள்ள படம் ஒன்றில் நடிக்கப்போகிறார். வள்ளிப்படத்தில் வீரய்யன் பாத்திரம் பெரிதாகப் பேசப் பட்டதால் புதிய படத்திற்கு 'வீரா' என்று பெயரிட நினைத்துள்ளார்கள். ரஜனி மீண்டும் வீரப்பன் என்ற பாத்திரத்தில் தோன்றுவார். என்றாலும் சில வேளைகளில் படத்தின் பெயர் மாற்றப்படவும் கூடும்.

# சினிமாவில் பிரியம்

ஓட்டப் போட்டியில் வீராங்கனையாக இருந்தவர் இப்போது விளையாட்டுக்கு ஒட்டுமொத்தமாகக் கும்பிடு போட்டுவிட்டார்.

அஸ்வினியில் ஆரம்பித்து, இப்போது இன்ஸ்பெக்டர் அஸ்வினி வரை அடி தடிப் படங்களில் நடித்து முடித்து விட்டார்.

விளையாட்டுத் துறையை விட சினிமா உலகில் புகழ் அதிகம். ஆனால் இன்னும் எத்தனை காலம் நிலைத்திருப்பார் என்பதுதான் சந்தேகம்.



# காதலன் முந்துவானா? வெற்றி முத்தம் சிந்துவானா?

நடனம் ஆடி நட்சத்திர அந்தஸ்து பெற்றுவிட்டவர் பிரபுதேவா.

ஜென்டில்மேன் படத்தை தயாரித்த குஞ்சுமோன் தற்போது கோடி ரூபாய்களை அள்ளிக் கொட்டி மகா பிரமாண்டமாய் தயாரித்து வரும் படம்தான் காதலன். காதலன் படத்தின் கதாநாயகன் பிரபுதேவா.

இந்து படத்திலும் பிரபு தேவாதான் நாயகன்.

இந்து படம் வருவதற்கு முன்னர் காதலன் திரைக்கு வரவேண்டும் என்று குஞ்சுமோன் துடித்துக் கொண்டிருக்கிறார்.

"இந்து" பட இயக்குநர் பவித்ரன் கண்ணில், பிரபு தேவா பட்டுவிடாமல் இருக்க தனது படப்பிடிப்பில் அவரைத் தீவிரமாக இறக்கியுள்ளார். அதற்காக பிரபுதேவா குழுவினர் கேட்கும் தொகையை வழங்கவும் தயாராக உள்ளார்.

பிரபு தேவாவை வைத்து நடனங்கள்-சாகசங்கள், படுபயங்கரமான சண்டைக்காட்சிகள் என்று திரையுலகையே கலக்கிவிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

காதலன் படத்திலும் ஜென்டில்மேன் படக்குழுதான் வேலை செய்கிறது.

வைரமுத்து பாடல் எழுத ஏ.ஆர் ரகுமான் இசையமைக்கிறார். இயக்குவது ஜென்டில்மேன் இயக்குநர் சங்கர். சங்கருக்கு ஒரு மாருதிக்காரும் வாங்கிக் கொடுத்திருக்கிறார் குஞ்சுமோன்.

இப்போது தயாரிப்பாளர்கள் மத்தியில் குஞ்சுமோன்தான் பெரிய புள்ளி.

ரஜனிகாந் குஞ்சுமோன் படம் ஒன்றில் நடிக்க ஒப்புதல் கொடுத்துள்ளார். அதுதவிர சிந்து நதிப்பூ என்றொரு படமும் தயாரிப்பில் இருக்கிறது.

மூன்று படங்களின் வினியோக உரிமைக்கும் இப்போதே போட்டி ஆரம்பம். பேரம் பேசி வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார் குஞ்சுமோன்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளத் தெரிந்த தயாரிப்பாளர்.






ஆடிக்கொண்டிருந்தது போதும் என்று அதிரடியில் இறங்கிவிட்ட பிரபுதேவா.
படம்- காதலன்



# அப்பா போல் நடிக்க ஆசை!

நடிகர் பிரசாந்துக்கு 'திருடா திருடா' படம் ஒரு பெரிய 'பிரேக்' தரப் போவது உறுதியாகி விட்டது! என்றாலும் அப்பா நடித்த மனிதன் மாறவில்லை மாதிரி ஒரு படத்தில் நடிக்கத்தான் மனதுக்குப் பேராசையாக இருக்கிறது!

www.padippakam.com



## காதோடு சொல்லுகிறோம்

★ சகல்ய நடிகை மூன்றடுக்கு மாளிகையில் குடியிருக்கிறார். உயரமான இடத்தில் தூங்குவதுதான் அவருக்குப் பிடிக்குமாம். அவர் குழந்தைபோல ஒய்வெடுப்பதால் அவரது அம்மாவே போவதென்றாலும் கதவைத் தட்டிக் காத்திருந்துதான் போகவேண்டுமாம்.

★ கன்னியின் பெயர் கொண்ட படத்தில் நடிக்கும் பம்பாய் நடிகையைச் சந்திப்பதென்றால் பத்திரிகை நிருபர்கள் வெட்கப்படுகிறார்களாம். குளித்துவிட்டு ஒரு துவாலையைச் சுற்றிக் கொண்டுவந்து அவர் ஒருநாள் பேட்டி கொடுக்க, நிருபர்கள் வெட்கத்தில் நெளிந்தார்களாம்.

★ இந்தியில் நம்பர்வன் தேவியைப்போல் தானும் பெயர் எடுத்துக்காட்டுவேன் என்று சபதம் போட்டுள்ளார் பிரிய நடிகை. அதற்காகவே இப்போது இரவு பகலாக நட்சத்திர ஹோட்டல்களில் பிரியமான சிலரைச் சந்தித்து வருகிறார். மிகவும் அன்னியோன்யமான சந்திப்பு.

★ பேத்தி போதைக்கு அடிமையாகி விட்டதாகப் பாட்டி முக்கு பேட்டி கொடுத்திருக்கிறார். எரிச்சலில் சிக்கிய பேத்தி இப்படியே பாட்டி பேட்டி கொடுத்தால் ஒருநாள் போதையோடு போய் சந்திக்க வேண்டிவரும் என்று சொல்லியிருக்கிறார்.

★ பெரிய நடிகர்கள் மூவருக்கு அன்பாக இருக்க சம்மதிப்பதால்தான் சின்ன குஷ்புவுக்கு சான்ஸ் வருகிறதாம். அவர்களும் சிபாரிசு செய்வதால் நடிகை தனது சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார். ஒரு லகரம் கேட்கிறாராம்.

★ சித்தார நடிகை ரஜனீஸ் புத்தகங்களை விரும்பிப் படிக்க ஆரம்பித்துவிட்டார். மகள் போகும் போக்கு சரியில்லை என்று பெற்றவர்கள் புலம்புகிறார்களாம்.

★ ஒளிப்பதிவாளர் ஒருவருக்கும் 'வை' எழுத்தில் ஆரம்பிக்கும் நடிகைக்கும் இரகசிய திருமணம் நடந்துவிட்டதாக சினிமா வட்டாரத்தில் கசமுசா. போகப் போகத்தான் தெரியும் உண்மை.

★ பிரபலமான அந்த இசையரசர் இப்போது முன்புபோல இல்லையாம். முன்னர் எல்லாம் சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் தலைகாட்ட மறுத்தவர் இப்போது உடனடியாக சம்மதித்தும் கலந்து கலகலப்பாக இருக்கிறார். நல்ல மாற்றம்தானே.

★ கொங்கு தமிழ் பேசும் சிரிப்பு நடிகைக்கு இப்போது சான்ஸ் குறைந்து விட்டது. அதனால் மீண்டும் மணிவோடு சரளமாகப் பேசிப் பழக ஆரம்பித்துள்ளாராம்.



ஐஸ்வர்யாவின் கேள்வி-பதில் பக்கம் 18



அன்னியின்



## இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை

சிலக் கமிதாவை தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு கவர்ச்சிகாட்டி முன்னேற ஆரம்பித்தவர் நீரோசா. அவரோடு இணைந்துப் ராம்கியுடன் அதிக படங்களில் நடிக்காதபோதும் அவ்வளவே காணவில்லை. பேசப்பட்டவர். இப்போது மார்க்கட் சரிந்துபோய் ஆளையே காணவில்லை. சமீபத்தில் ஒரு பொது நிகழ்ச்சியில் தோன்றினார். தமிழ்ப்படங்களில் தான் விரும்பும் பாத்திரங்கள் கிடைக்கவில்லை. அதனால் தேடிவரும் வாய்ப்புக்களைத் தள்ளிவிடுவதாகச் சொன்னார். அபாண்டமான கதைதான்.

## தினமுரசுக்கு கவியரசு வைரமுத்து!

### இசையிலே வருமுன் இதோ கவி வரிகள்!

கவியரசு வைரமுத்து இங்கே தமிழர்களால் வாசித்தும் கேட்டும் ரசிக்கப்படுகிற ஒரு பெருங் கவிஞர். புதிய புதிய வார்த்தைக் கோலங்களால் தமிழ் சினிமாப் பாடல்களைச் செழுமைப்படுத்துவது அவரது கவியாற்றல்!

இது எங்களால் என்றென்றும் ஈடுபாட்டோடு முகைப் பார்த்து நேசிக்கப்படுவது!

அண்மையில்-சினிமாவுக்காக அவர் எழுதிய "திரைப்பாடல்கள்" இதே தலைப்பில் இரு தொகுதிகளாக வெளியிடப் பெற்றன. தலை நகரில் அவை விற்பனைக்கும் வந்து விட்டன.

இனி மூன்றாம் தொகுதிக்கான முன்னோட்டப் பாடல்களைக் கவிரசு புதும் புதுசாக எழுதும்போதெல்லாம் தமது தினமுரசு வாரமலருக்கு தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அந்த முன்னோட்டம் தான்-

பாரதிராஜாவின் கிழக்குச் சீமையிலே படத்துக்காக ஏ.ஆர் ரகுமானின் இசையில் பதிவான இந்தப் பாடல்!

இசையிலே வருமுன்-கவிவரிகள்! இதோ படியுங்கள்!



தென் கிழக்குச் சீமையில செங்காத்து பூமியில
ஏறப்பட்ட சாதிக்கொரு சரம் இருக்கு!
காயப்பட்ட சொந்தத்துக்கு கண்ணீர் விட்டா
சாரம்போல வாழ்க்கையிலும் சாரம் இருக்கு.
இவுக பொழப்புக்கு தீர்வாக்கத்தான்
சசானி மூலையில மேகம் இருக்கு....

பெண்: தாய் வீட்டுப் போகும் தாமரை சீரும்
தெக்குத்திப் பொண்ணுக்கொரு சொத்து கசமே!
ஆண்: சீர்கொண்டு வந்தும் பேர் கெட்டுப்போனா
சொல்லாமத் துக்கப்படும் சொந்த பந்தமே!
பெண்: குத்தந்தான் பாத்தா ஊரில் சுத்தம் இல்லியே
ஆண்: கோழிக்குக் குஞ்சு மேல கோபம் வல்லியே
பெண்: நம்போல அண்ணன் இந்த ஊரில் இல்லியே!
ஆண்: தாம் ஆண்ட மண்ணோ, நம்வீட்டுப் பெண்ணோ
கைவிட்டுப் போகக் கண்டா கண்ணீர் வருமே!
பெண்: தங்கச்சி கண்ணில் கண்ணீரைக் கண்டா
தன்-மானம் கூட அண்ணன் விட்டுத் தருமே!
ஆண்: பந்தத்தை மீறிப் போகச் சக்தி இல்லியே
பெண்: பாசத்தைப் பங்குபோட பட்டா இல்லியே!
ஆண்: வேருக்கு இளைப் போச்சு வெட்டுப்பாறையே!

★

ஆண்: உறவெல்லாம் பொய்யா? அது ரத்தம் பொய்யா?
ஓடைக்கு ஒடுத்தண்ணி சொந்தம் இல்லியா?
பெண்: சொந்தத்த யாரும் சொல்லாம போனா
குந்திக்கும் கர்ணனுக்கும் பந்தம் இல்லியா?
ஆண்: சொந்தத்தத் தாரவாத்துத் தாரேன் தங்கச்சி!
பெண்: உசுர் வத்திப் போனாலண்ணே இந்தவைமச்சி!
ஆண்: உசுர் மட்டும் வச்சிருக்கேன் தாரேன் தங்கச்சி.

படம்: கிழக்குச் சீமையில பாடல் கவிரசு வைரமுத்து
இசை: ஏ.ஆர்.ரகுமான்.



ராஜதுரை

விமர்சனம்-

பிரம்மாண்ட திரையில்.. பிரமிப்பூட்டும் காட்சிகள். ரத்தம் சத்தம். கொலை மற்றும் குற்றப்பிடித்தும் பல்வேறு கோணங்களை இவற்றின் மொத்தமே 'ராஜதுரை'.

இரட்டை வேடத்தில் புரட்சிக்கலைஞர் விஜயகாந்த்!

படத்திலேயே அவர் பேசும் ஒரு வசனத்தில் வெளிப்பட்ட மாதிரி மாவை இரட்டை வேஷம் போட்டுத் தெரியவில்லை!

இருந்தும் போட்டிருக்கிறார் டைரக்டர் எஸ்.ஏ.சந்திரசேகர்!

ஏதாவது புதிய சமாச்சாரம் இருக்கிறதா என்று தேடினால்...

தமது தோட்டாக்களில் குத்து பேர் வெவ்வேறு திசைகளிலிருந்து செத்து விழும் காட்சியையும் ஒரு தோட்டாவைப் போட்டுக்கொண்டு குத்து முறை வெறும் வெடி வெடிக்கிற காட்சியையும் உதாரணத்துக்குச் சொல்லலாம்!

1980-அந்த முன் விஜயகாந்தின் (பைல்) முன்றாவது காவியும் நடந்த சம்பவங்களைக் காட்டுகிறார்கள். இரண்டும் ஒரே மாதிரி இருக்கிறதே. இதுதான் டைரக்டரின் திறமையோ? கேட்கத் தோன்றுகிறது!

சிவரஞ்சனி பாடாத பாடு படுத்துகிறார்.

சந்தனமேனியை இனி மறைக்க ஏதுவும் இல்லை என்ற வெறுமையுடன் போஸ் கொடுத்திருக்கிறார். கவர்ச்சி காட்டும் காட்சிகளுக்குத்தான் இப்போது வயசு என்று இயக்குநர் சந்திரசேகரும் விளக்கிக் கொண்டிருக்கிறார்.

குடும்ப பசுக்கிறது. பாட்டைகளைத்தான் ஒன்றும் தெரியவில்லை. தேவாவுக்கு என்ன நடந்தது!

அனுராதவை, தேவசவை யாரும் வைக்க முடியவில்லை. விஜய காந்த் விளையாடுகிறப்பட்டுள்ளார். மீண்டும் சந்திரசேகர் திருந்துவாரா?



நீரோசா



## எதற்கு சார் இப்போ கல்யாணம்?

"என்ன ஸார் இது வம்பா இருக்கே!" என்று வருத்தப் பட்டார் குஷ்பு.

நமது தமிழக சினிமா நிருபர் குஷ்பு-பிரபு கல்யாண வதந்தி பற்றி குஷ்புவிடம் கேட்டார். தனது மார்க்கட்டை உடைக்கவே சிலர் இவ்வாறு செய்வதாகச் சொல்லிக் கோபப்பட்டார்.

"எதுக்கு ஸார் எனக்கு இப்போ கல்யாணம். நோ நெவர்!" என்கிறார் உறுதியோடு.



ஹார்ட் டார்கெட் படத் தயாரிப்பின்போது தயாரிப்பாளர் ஜோன்வூவுடன் நடிகர் வான்டம்மே.

## வன்முறையால் குவியும் வசூல்

வீர-தீர சாகசங்கள் நிறைந்த படங்களைத் தயாரிப்பதில் அமோக வெற்றி கண்டவர் ஜோன் வூ.

ஹொங்கொங்கில் சாதனை படைத்துவிட்டு இப்போது அமெரிக்க ஹொலிவூட்டில் புகுந்திருக்கிறார்.

அவருடைய தயாரிப்பான "ஹார்ட் டார்கெட்" (கடுமையான இலக்கு) இப்போது அமெரிக்காவில் திரையிடப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் வெற்றி நடை போடுகிறது.

அமெரிக்காவில் மட்டும் குவித்துள்ள வசூல் 3½கோடி டொலர்கள்.

வன்முறைக் காட்சிகளே படத்தில் நிறைந்துள்ளன.

வன்முறைக் காட்சிகளும் அவற்றைப் படமாக்கியுள்ள விதமும் இரசிகர்களைக் கொக்கிபோட்டு இழுக்கிறது.

சீனாவில் பிறந்தவரான ஜோன்வூ சீனா பற்றிய ஒரு படத்தைத் தயாரிக்கவும் திட்டமிட்டிருக்கிறார்.

ஹொங்கொங்கைப் பிரிந்து வந்து ஹொலிவூட்டில் இப்போது வாழ்ந்துவரும் ஜோன்வூ மேலும் சாதனை படைக்கத் தயாராகிறார்.

...துவரும்
...தைக்கு
...திகளால்
...விட்டால்
...ராதோ
...த்தம்?

★ மம்முட்டியின் படத்துக்கு விக்டரி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் பூஜை போட்ட போது, கோவைச் செழியன் வாழ்த்துக் கூற வந்திருந்தார். தங்கக் கொலுசு படம் முடிந்ததுமே மம்முட்டியை வைத்து மறுபடியும் ஒரு தமிழ்ப் படம் தயாரிக்க இருக்கிறார் செழியன். அதில் சிவாஜியும் ஸ்ரீதேவியும் இருப்பார்கள்!

★ ஸ்கேட்டிங் பானுப்பிரியாவின் விருப்பமான விளையாட்டு. வீட்டிலேயே ஓய்வு நேரங்களில் ஸ்கேட் செய்வது அவருக்குப் பொழுதுபோக்கு!

★ சுகன்யாவைப் பேட்டி காண வேண்டுமென்றால் பத்திரிகையாளர்களை முதலில் சுகன்யாவின் தாயார்தான் நேர்முகம் நடத்துகிறார்!

★ சிவரஞ்சனியை ராஜதுரையில் இயக்குநர் சந்திரசேகர் குஷ்பு மாதிரியே விளையாட விட்டிருக்கிறார். இதனால் ஏற்கனவே 'சின்னக் குஷ்பு' என்று சிவரஞ்சனி சொல்லிக் கொண்டிருந்தது உண்மையாகி இருக்கிறது!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பட்டம் முரசு

## விண்ணில் ஒரு மண்டபம்

முத்துபுரி என்ற ஒரு நாட்டை பொன்னிவளவன் என்ற ஓர் அரசர் ஆண்டார். ஏழைப் பங்காளர். தம் ஆட்சியை அவர் திறம்பட நடத்தி வந்ததால் மக்கள் இன்பமாகக் கவலையில்லாது மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

பொன்னிவளவன் தம் நாட்டு மக்கள் சுகமாயிருக்க நல்லாட்சி நடத்தக் காரணமாக இருந்தவர், அவருடைய அமைச்சர்களில் ஒருவரான அறவாணன். சிறந்த மதியூதி. நன்கு யோசித்துச் சிந்தித்தே எதையும் சொல்வார், செய்வார். அதன்படியே எல்லாம் நடக்கும். அவர் மக்களுக்கு நன்மை தரும் செயல்களை மட்டுமே சொல்வார், செய்வார். அதனால் பொன்னிவளவனுக்கு மந்திரி அறவாணனிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. அவருக்கு விசேஷ கௌரவம் கொடுப்பார்.

இவைகளை எல்லாம் பார்த்த பிற அமைச்சர்கள் அறிவாணன் மீது பொறாமை கொண்டனர். நாளுக்கு நாள் மந்திரி அறவாணனிடம் அரசர் பொன்னிவளவனுக்கு மதிப்பும், மரியாதையும் கூடுவதைக் கண்டு பொறாமை கொண்டார்கள். அவர் மேல் அரசன் கொண்ட அளவற்ற மதிப்பாலும், மரியாதையாலும் மன்னன் எங்கே தங்களை மதிக்காது போய்விடுவானோ என்று பயந்தனர். மந்திரி அறவாணனைப் போல தாங்களும் சிறந்த அமைச்சராக இருக்க வேண்டும் என்பதை மறந்து போன அவர்கள் அவரை எப்படி மன்னனின் மதிப்பிலிருந்தும், மரியாதையிலிருந்தும் இறக்கி விரட்டியடிக்கலாம், என்று யோசிக்க ஆரம்பித்தார்கள்.

அரசவை ஒற்றர்கள் காற்றுப் புகாத இடத்திலும் புகுந்து விடக் கூடியவர்கள் அல்லவா? மற்ற மந்திரிகள் எப்படி அறவாணனை விரட்டி அடிக்கலாம் என்பதை யோசிக்கின்றார்கள் என்பதை அறிந்து வந்து அரசன் பொன்னிவளவனிடம் தெரிவித்தார்கள்.

அவன் இதை அறிந்ததும் அதிர்ச்சியடைந்தான். ஒருவன் நல்லவனாக இருப்பதைக் காண மற்றவர்கள் பொறுக்க மாட்டார்கள் என்பதை அரசன் பொன்னிவளவன் அறியாததல்ல. மதிகெட்ட மந்திரிகளுக்கு அறவாணன் எவ்வளவு பெரிய அறிவாளி என்பதை உணர்த்தி வட விரும்பினான். அப்பொழுது அவர்கள் அவமானத்தால் தலை குனிவார்கள் அல்லவா? அதுதான் அவர்களுக்குப் பெரிய தண்டனையாக அமையும்.

மறுநாள் அரசவை கூடியது. மன்னன் பொன்னிவளவன் வந்து தன் அரியாசனத்தில் அமர்ந்தான். எல்லா அமைச்சர்களும் வந்திருக்கிறார்களா? என்று பார்த்தான். வந்திருந்தார்கள். மந்திரி அறவாணனும் வந்திருந்தார்.

அரசன், "மந்திரி யாரே!.... தங்களால் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறதே! அதை நீங்கள் தான் செய்து முடிக்க வேண்டும்!..." என்று அறவாணனிடம் கூறினான்.

"ஆணையிடுங்கள் அரசே!" என்றார் மந்திரி மதியூகி.

நம் நாட்டில் பல ஆலயங்களைக் கட்டியிருக்கிறோம். அபூர்வ சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கலைக் கூடங்களை நிர்மாணித்துள்ளோம். இவைகள் எல்லாம் மண்ணில் மலர்ந்த மலர்கள்...." என்றான் அரசன்.

உடனே மந்திரி அறவாணன், "அரசே! மண்ணில் மலர்களை மலரச் செய்த தாங்கள் விண்ணிலும் விநோதங்கள் செய்ய விரும்புகிறீர்கள்." என்றார்.

"மந்திரியாரே.... எவ்வளவு சரியாகச் சொல்லி விட்டீர்கள், விண்ணில் ஒரு மாளிகை கட்ட வேண்டும் என்பதே என் விருப்பம்." என்றான் பொன்னிவளவன். மந்திரிகளும் மற்ற அரசவைப் பிரதானிகளும் விண்ணில் எப்படி மாளிகை கட்டமுடியும் என்பதையும் மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்வையாலேயே கேட்டுக் கொண்டார்கள்.

"அரசே நீங்கள் விரும்பியவாறே விண்ணில் மாளிகை கட்டும் பணியை உடனே தொடங்கிவிடுகிறேன். ஆனால்..." என்று இழுத்தார்.

"சொல்லுங்கள் மந்திரியாரே," என்றான் பொன்னிவளவன்.

"விண்ணில் மாளிகை கட்டும் முதல் கட்டப் பணியை நான் தொடங்கிவிடுகிறேன். மற்ற வேலைகளை மற்ற அமைச்சர்கள் செய்யட்டும்," என்றார் அறவாணன்.

"அப்படியே ஆகட்டும்," என்றான் பொன்னிவளவன். விண்ணில் மாளிகை கட்டுவது என்பது நடவாத காரியம். அதன் ஆரம்பப் பணியை மந்திரி அறவாணன் எங்கே செய்யப் போகிறார் என்ற எண்ணத்தில் மற்ற மந்திரிகள் மற்றக் கட்டட வேலைகளைத் தாங்கள் செய்வதாக ஒப்புக் கொண்டார்கள்.



சபை கலைந்தது.

மந்திரி அறவாணன் யோசித்தபடி தம் மாளிகையை அடைந்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராய் செயலில் ஈடுபட்டார். காற்றினால் கிழியாத அழுத்தமான ஒரு பலமான துணியை எடுத்து அதைக் கொண்டு ஒரு பெரிய பட்டம் செய்தார். அதன் மூன்று முனைகளில் 'கணீர் கணீர்" என்று ஒலிக்கும் மூன்று மணிகளைக் கட்டினார். மிகவும் நீளமானதும் பலமானதுமான நூலினால் பட்டத்தைக் கட்டி வானில் பறக்க விட்டார். அது காற்று நன்றாக வீசும் காலம். பட்டம் மேலே பறந்து சென்று ஒரு பந்து போல தோன்றியது. கையில் பிடித்திருந்த நூலின் நுனியை ஒரு மரத்தின் உச்சியில் கட்டினார் மதியூகி.

மறுநாள் மக்கள் பார்த்த போது வானில் கறுப்பாக எதுவோ தெரிந்தது. காற்றின் அசைவினால் மூன்று மணிகளும், கணீர் என ஓசை உண்டாக்கின. மக்கள் எல்லாரும் அதைக் கேட்டார்கள். வியப்புக்குள்ளானார்கள். வீதியில் கூட்டம் கூட்டமாகக் கூடி அந்த அதிசயத்தைப் பார்த்தார்கள்.


பொன்னிவளவனுக்கும் செய்தி போனது. அவன் தன் அரண்மனை மாடத்திலிருந்து பார்த்தான். கறுப்பாக ஏதோ தெரிந்தது. தொடர்ந்து மணியோசை கேட்டது. உடனே, தன் அரசவையைக் கூட்டினான்.

"மந்திரி அறவாணரே வானில் ஏதோ கறுப்பாகத் தெரிகிறது. தொடர்ந்து மணியோசையும் கேட்கிறதே?" என்றான் அரசன்.

"அரசே தங்கள் கட்டளைப்படி வானில் அதிசய மண்டபம் கட்டும் பணியின் முதல்கட்டம் முடிந்து விட்டது. இன்னும் சுவர், மற்றும் கூரை அமைக்க கற்கள், சுண்ணாம்பு, மரம் தேவைப்படுகிறது. அதைத்தான் விண்ணிலிருந்து வேலையாட்கள் மணி அடித்து அறிவிக்கிறார்கள். பொருட்களையும், அடுத்த கட்ட வேலைகள் செய்ய ஒப்புக்கொண்ட அமைச்சர்களையும் விண்ணுக்குப் போகச் சொல்லுங்கள் அரசே," என்றார் மந்திரி அறவாணன்.

மன்னன் பொன்னிவளவனும், மற்ற அமைச்சர்களும் பொருட்களை எடுத்துக் கொண்டு உடனே விண்ணுக்குச் செல்ல உத்தரவிட்டான்.

அமைச்சர்களால் எப்படி முடியும்? தலைகுனிந்து செய்வதறியாது நின்றனர். தங்களால் முடியாதென்று ஒப்புக்கொண்ட அவர்கள் மன்னனைப் போலவே தாங்களும் மந்திரி அறவாணருக்கும் மதிப்புக் கொடுக்கவும், மரியாதை கொடுக்கவும் தொடங்கினார்கள். மன்னன் பொன்னிவளவனும் மனம் மகிழ்ந்தான்.



### எனது ஆடு

ஆடே ஆடே வெள்ளாடே
அருகில் வந்து நில்லாடே
வாடிப் பசியால் வருந்தாதே
வைப்பேனுனக்குப் புல்லாடே.
நாடே புகழும் நம்மண்ணில்
நல்ல காந்தித் தாத்தாவும்
நாடியுனது பாலைத் தான்
நாளும் குடித்து வந்தாராம்.



### காகமும் நரியும்

முறுக்கும் வாயுமாக
முருங்கை மரத்தின் மீது
இருக்கும் காக்கையாரே!
எனக்கும் பாதி போடும்
என்று நரி கேட்க,
முறுக்குப் பாதியென்ன
முழுதும் எடுத்துக் கொள்ளும்
கடிக்க முடியவில்லை
கல்லும் தோற்றுப் போகும்
என்று சொல்லிக் காகம்
எறிந்து விட்ட முறுக்கு
நரியின் மீது பட்டு
நரி இறந்து போச்சு....!

ஜெயந்தி
பம்பலப்பிட்டி.

### தன்முட்டையே தன்குஞ்சுக்குத் தீனி!

தன் முட்டையை உடைத்துத் தன் குஞ்சுக்கே உணவாகக் கொடுக்கும் அதிசயத்தைச் செய்கிறது நெருப்புக்கோழி. இவை முட்டையிடும் காலத்தில் பல முட்டைகளை ஒரே குழியில் போடுகின்றன.

இப்படி இரண்டு டசின் முட்டைகள் வரை ஒரு குழியில் வந்துவிடும். சில முட்டைகள் முந்திக் கொண்டு பொரித்து விடுகின்றன. இப்படி முந்திப் பொரிக்கும் குஞ்சுகளுக்காக மற்ற முட்டைகளை உடைத்து ஊட்டி விடுகிறது தாய்.



## விடுகதைகளும் விடைகளும்

1. முட்டையிடும், செட்டை கழட்டும் 6 மாதம் அடைபடுக்கும் நாக்கை நீட்டும். படமெடுக்கும். நான் அறியப் பூாம்பல்ல.
2. காய்க்கும் பூக்கும் காகம் நிற்கக் கொப்பில்லை.
3. பாதி சிவப்பு, பாதி கருப்பு. உடைந்தால் பருப்பு. தின்றால் கசப்பு.
4. ஒரு பறவையின் பெயரையும் ஒரு தாவரத்தின் பெயரையும் இணைத்து வரும் ஓர் ஊரின் பெயர்.
5. கத்தி போல் இலை இருக்கும் கவரிமான் பூப் பூக்கும். தின்னப் பழம் பழுக்கும். தின்னாத காய் காய்க்கும்.
6. பொட்டுப் போல் இலை இருக்கும் கவரிமான் பூப் பூக்கும் தின்னக் காய் காய்க்கும் தின்னாத பழம் பழுக்கும்.
7. ஆட்டலாம் அசைக்கலாம் பிடுங்க முடியாது.
8. வெட்ட வெட்ட ஒட்டும்.
9. வெட்ட வெட்ட தளிர்க்கும்.
10. தொப்பென்று விழுந்தான் தொப்பி கழண்டான்.

விடைகள்
1. பனை விதை
2. வேளாண்மை
3. குன்று மணி
4. கிளிநொச்சி
5. வேம்பு
6. முருங்கை
7. விரல்
8. நீர்
9. மயிர்
10. பனம்பழம்.

சே. சித்தி சாமிலா
கிண்ணியா-6.

1. சிவப்பு நிறச் சிங்காரி தண்ணீர் பட்டால் கறுப்பாயி.
2. மரத்துக்கு மேலே காய், காய்க்கு மேலே மரம்.
3. அத்துவானக் காட்டிலே குடை பிடித்து நிற்கிறாள் ஒரு ராணி.
4. அள்ளும் போது சலசலக்கும், கிள்ளும் போது கண் கலங்கும்.
5. மேடு கண்டால் ஒதுங்குவார். பள்ளம் கண்டால் பதுங்குவார்.
6. உள்ளூர் உத்தமிக்கு உள்ளங்கையில் ஓட்டை.
7. ஆழக்குழி வெட்டி அதிலே ஓர் முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை.
8. ஓங்கி வளர்ந்தாள், ஒரு பிள்ளை பெற்றாள் புழுத்துச் செத்தாள்.
9. அந்த வீட்டுக்கும் இந்த வீட்டுக்கும் டப்பா டப்பா.

விடைகள்
1. நெருப்பு
2. அன்னாசி
3. காளான்
4. வெங்காயம்
5. தண்ணீர்
6. உழுந்துவ்டை
7. தென்னை மரம்
8. வாழைமரம்
9. சுளகு.

ஐ. றினூஸா பேகம்
மூதூர்-4.

1. காற்றிலே பறக்கும் கண்ணாடித் துண்டு, கையால் தொட்டால் காணாமல் போகும். அது என்ன?
2. வெட்டின கட்டையிலே கோழி கூவுது. அது என்ன?
3. முகமூடி அணிந்த முக்கண்ணன் உச்சியிலே உறங்குகிறான். கண்களைத் திறந்துவிட்டால் கண்ணீரை சிந்துகிறான். அது என்ன?
4. பாறைக்குமேலே தண்ணீர் தண்ணீருக்கு மேலே பூ. அது என்ன?
5. சிவப்பு அறைக்குள், சில்லறைக் காசுகள். அது என்ன?
6. உயிர் இல்லை, ஊரைச்சுமப்பான், பேச்சு இல்லை, பெருமூச்சு விடுவான். அவன் யார்.
7. ஊசி நுழையாத கிண்ணம் உள்ளே இருக்குமாம் வெள்ளம். அது என்ன?
8. வெள்ளிக் கொலுசு- போடலாம்; கழற்ற முடியாது. அது என்ன?
9. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு. அது என்ன?
10. வாலைப் பிடித்து இழுத்தால் வளர்ந்து கொண்டே வரும். அது என்ன?

விடைகள்
1. நீர்க்குமிழி
2. புல்லாங்குழல்
3. பனங்காய்
4. விளக்கு
5. காய்ந்த மிளகாய்
6. இரயில்
7. தேங்காய்
8. கோலம்
9. கைவிரல்
10. நூல்பந்து (நூல்கட்டை)

செல்வி- கலைச்செல்வி கிருஷ்ணப்பிள்ளை
இந்துக்கல்லூரி-வாழைச்சேனை.

## வர்ணம் தீட்டும் போட்டி இல-8

**பரிசுக்குரியவர்:**
சி. சுதாகர்
இ/இரத்தினபுரி தமிழ் மகாவித்தியாலயம்
இரத்தினபுரி.

**பாராட்டுக்குரியவர்கள்**

செல்வன் ஷிஹாம் ஹலீப்
அல்ஹஸனியா மு.ம.வித்தியாலயம்,
மக்கொன.

கனகசிங்கம் நிஜந்திக்கா
வின்சன் மகளிர் பாடசாலை
மட்டக்களப்பு.

பீ.எம்.றஸ்மி
கோணேஸ்வரா இந்துக்
கல்லூரி
திருகோணமலை.

செல்வி யுகந்தி நடராஜா
இந்துக் கல்லூரி
மாத்தளை.

ஆர். ஜனனி
பாத்திமா மத்திய கல்லூரி
புத்தளம்.

பாத்திமா றிஸ்வானா
மாளிகாஹேன முஸ்லிம்
வித்தியாலயம்
பேருவளை.

ஏ. றிஸானா
கடற்கரை பள்ளிவீதி
கல்முனை-03.

எஸ். டெரிக்
கொழும்பு-13.

எம்.எம். பெரோஸ்
தெல்தோட்டை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணப்படம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/- காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.10.93.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 11
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## சிறுகதை

**உண்மைகள் கசப்பானவை தான். இயலுமாயின் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லையேல்....**

# கடலின் அக்கரை போவோரே....

-எம். சுரேஷ்-




மணியம் கண்கலங்கினார். "அப்புச்சியின் உடல் லண்டனில் இருந்து கொழும்புக்கு வந்துவிட்டது" காகிதத்தை வாசித்த கமலம் தன்னையறியாமல் வாய்விட்டுக் கதறினாள். சேலைத் தலைப்பில் தொங்கிக்கொண்டிருந்த இரு வாரிசுகளையும் சோகத்தின் விரக்தியால் உதறிவிட, அவைகளும் வீறிட்டு அழ ஆரம்பித்தன.

"நீ என்ன பிள்ள செய்யப் போறே?" மணியத்தின் கேள்வி அவள் சோகத்தை மேலும் கிளறியிருக்க வேண்டும். "நான் இப்பவே கொழும்புக்குப் போக வேணுமண்ணே." பதில் குரல் "ஓ" வென மேலெழுந்து ஒப்பாரியாய் பரிணமித்தது.

முன்பு மாடிவீட்டில் வாழ்ந்து, பின்பு சாதாரண வீடுகளுக்குக் குடிபெயர்ந்து....எல்லா வீடுகளையும் இலக்குத் தவறாமல் விழுந்த குண்டுகள் நிர்மூலமாக்கியதால் இப்போது ஒதுக்குப்புறமாய் நாலைந்து குச்சிகளைச் செருகி உருவாக்கியிருந்த ஓலைக் கொட்டிலுக்குள், அந்த இரண்டு பிஞ்சுகளும், அவளும் குடி வந்தபோதுதான் இந்த இடியும் வந்து விழுந்தது.

'ஒப்பாரிக்குரல்' இது ஊருக்குப் பழகிப்போன அன்றாட விடயம்தான். இருப்பினும் அக்கம் பக்கத்து ஜனங்களுக்கு கமலத்தின் ஒப்பாரிக் குரல் ஆச்சரியத்தையும், ஒரு இனம் புரியாத மேலதிக சோகத்தையும் வரவழைத்தது.

வழமையாக ஆண்களும், இளைஞர்களும் இருக்கும் வீடுகளில்தானே ஒப்பாரிச் சத்தம் கேட்கும்? சாதாரண வீடுகளில் கேட்பதென்றால் ஒன்றில் 'குறி தவறாமல்' தாக்கும் விமானம் வந்திருக்க வேண்டும், அல்லது 'குறியேயில்லாமல்' தாக்கும் 'ஷெல்' அடிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டுமே கடந்த சில தினங்களாக நடக்கவில்லையே! அப்படியானால்...

குடிசை முற்றத்தில் கூட்டம். ஆளுக்கொரு ஆறுதல் வார்த்தைகள். இதற்காகத்தானே 'செத்தாலும் ஊரோடு சாகவேணுமெண்டு எங்கட சனம் நினைக்குது....' ஒன்றென்றால் ஓடிவரும் சம்பிரதாயம் இப்போது இங்கே மட்டும்தான்!

புவனமக்காதான் ஆரம்பித்தாள். "பிள்ளை கொத்தான்...?"

"ஐயோ!...ஓமக்கா..." கதறினாள் கமலம். நெற்றிப் பொட்டில் ஓங்கி அடித்தாற் போல் ஒரு வலி. புவனம் கலங்கினாள். மீண்டும் அவள் கமலத்திடம் ஏதோ கேட்க முற்பட மணியம் இடைமறித்தார்.

"என்னக்கா கேக்கப் போறியள்?"

"உது எப்பிடித் தம்பி...?"

"இவன் அப்பண்ணா வேலை செஞ்ச தொழிற்சாலையில, திடீரென்று மூண்டு கேஸ் சிலிண்டர் வெடிச்சு...."

மணியம் மௌனமானார். அதற்கும் மேல் என்ன தகவல் வேண்டிக்கிடக்கிறது? வந்தவர்களும் மௌனமானார்கள். அப்படியானால் அப்புச்சி, ..... "அப்பண்ணா" என்ற பெயர்தான் ஊராரின் வாய்க்குள் அப்புச்சியாய் மாறிப்போயிருந்தது. அந்த அப்புச்சி தான் இப்போது பிணமாக...

"ம்.... பாத்தியளோ அக்கா, அவன் பெடியனுக்கு லண்டன் போய்ச் சாகவேணுமெண்டு விதி" சரசு பெருமூச்சுவிட்டாள்.

"நான் இண்டைக்கே கொழும்புக் குப் போக வேணுமண்ணே." விம்மினாள் கமலம். போவதற்குப் 'பாஸ்' வேண்டுமே! நினைத்தவுடன் போவதற்கும் வருவதற்கும் இது என்ன பழைய யாழ்ப்பாணமா?

"தம்பி காந்தன் நீ ஓடிப்போய் பாஸ்..."

"அண்ணே! அந்தப் பேச்சே எடுக்காதீங்கோ. சாகித்திய விழாவுக்கு ஒரு கிழமை பாஸ் ஒபீஸ் குளோஸ்!.... அவசரமா பாஸ் வேணுமெண்டால் இனிக் கோண்டாவிலுக்குப் போய்த்தான் பேசிப் பாக்கவேணும்."

அவன் வார்த்தையில் ஒரு அலட்சியம் இருந்தாலும் உண்மையைத்தானே சொல்கிறான்! அலட்சியம் என்பது தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்றாயிற்றே!

பிறந்தவனை விட்டாலும், இறந்தவனை விடாமல் இருப்பது தமிழரின் தனித்துவம். அது இப்போது அவர்களின் பலவீனமாக இருக்குமோவென ஒரு சந்தேகம்!

★★★★

கிளாலிக் கடலின் அக்கரை கிட்டத்தட்ட ஒரு போர்க்களம் போல்.... மூட்டை முடிச்சுகளுடன் பாவப்பட்ட மக்கள், இன்றைக்கும் 'போட்' ஓடுவது சந்தேகம்தான்.

"நேற்றிரவு நடுக்கடலில் "யாரோ" தங்கள் வீரத்தைக் காட்டி 16 பொதுமக்களை (பெண்களும், குழந்தைகளுமாய்) அமைதியான இடத்துக்கு அனுப்பிப் போட்டினமாம்." நகைச்சுவை கலந்த விரக்திப் பேச்சு!

அப்படி இருந்தும் கடலைக் கடப்பதற்கு இன்றும் மக்கள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறார்கள். வேறு என்ன தான் வழி? அப்புச்சியை பறிகொடுத்த கமலங்களும், அவளைப்போன்றவர்களும் எப்படியும் கொழும்புக்குப் போய்த்தானே ஆகவேண்டும்.

சில கனிகளைக் கொடுத்து ஒன்றை தேர்ந்தெடுக்கச் சொன்னால் தேர்ந்தெடுக்கலாம். ஒரே ஒரு கனியைக் கொடுத்து ஒன்றை தெரிவு செய்யச் சொன்னால் என்ன செய்வது? வானத்தில் காகங்களுக்குப் பதிலாய் கழுகுகள்!

திடீரென்று "இன்றிரவு போட் ஓடுமாம்" செய்தியைத் தொடர்ந்து அவசர நடவடிக்கைகள். கமலத்திற்கு 157ம் இலக்கச் சீட்டு வழங்கப் படுகிறது. அதாவது அவள் 157ம் இலக்கப் படகில்தான் பயணம் செய்ய வேண்டும்.

கும்மிருட்டில் அவளும் ஒரு படகில் ஏறுகிறாள். சொந்த நாட்டிலேயே திருட்டுத்தனமாய் பயணம் செய்யும் கேவலம்! கிட்டத்தட்ட (ஒன்றாக) 200 படகுகள் அக்கரையை நோக்கிப் புறப்பட்டன.

★★★★

மறுநாள் காலை கொழும்பில் வெளியாகும் பிரபல தமிழ்ப் பத்திரிகையின் தலைப்புச் செய்தி "கிளாலியில் மோதல் 20க்கும் மேற்பட்ட பொது மக்கள் பலி, பலரைக் காணவில்லை."

இறந்தவர்கள் பட்டியலில் "கமலம் அப்பண்ணா உடுப்பிட்டி".... அவளுக்கும் ஒரு இடம். அதற்கும் கீழ் பெரிய எழுத்துக்களில் ஒரு 'புத்திசாலி' அதிகாரி அறிக்கை விட்டிருக்கிறார்.

"கிளாலிப் பாதை போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்ட பிரதேசம் என பல தடவை அறிவித்தும் மக்கள் அதை பயன்படுத்துவது தவறானது."

அப்படியானால் வேறு எப்பாதையால் மக்கள் பயணங்களை மேற்கொள்வது?

"தடை செய்யப்பட்ட பிரதேசம்" எனத் தெரிந்திருந்தும் மக்கள் உயிரையும் மதிக்காமல் "ஷர்மிலாவின் இதயராகம்" பார்ப்பதற்காகவா இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்?

எங்கோ நின்று கமலம் சிரிக்கிறாள்!!


**(கொஞ்சம் கற்பனை-நிறைய நிஜம்)**

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-12**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

# இந்த வாரம் உங்கள் பலன்

**(17.10.93 முதல் 23.10.93 வரை)**

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், செவ்வாய், புதன், வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| கன்னி | - வெள்ளி |

சந்திரன் துலாம், விருட்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறையுண்டு, வீண் பிரயாசம். | காலை 8 மணி |
| திங்கள்- | செய் தொழில் விருத்தி, பணவரவு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, பூமியால் இலாபம். | காலை 9 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், கௌரவம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, தேகசுகம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | மனச் சஞ்சலம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, தேகாரோக்கியக் குறைவு. | காலை 9 மணி |

அதிஷ்ட இலக்கம் - 1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்வு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | தொல்லைகள் மறையும், சுகவாழ்வு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, பணவரவு. | காலை 9. மணி |
| புதன்- | வைத்தியச் செலவு, பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| வியாழன்- | பூமியால் இலாபம், மனக் கலக்கம். | காலை 3 மணி |
| வெள்ளி- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| சனி- | எதிர்பாரா செலவு, இடமாற்றம். | பி.ப 4 மணி |

அதிஷ்ட இலக்கம் - 5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குறைகேட்டல், வீண் தொல்லை. | காலை 9 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு, நிலைப்பிரிவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப 3 மணி |
| புதன்- | நடைக்கஷ்டம், எண்ணங்கள் நிறைவேறும். | பி.ப 2 மணி |
| வியாழன்- | தனலாபம், துயர் நீங்கும். | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, காரியகஷ்டம். | காலை 11 மணி |
| சனி- | கண்டத்திற்கு மேற்பட்ட நோய், செலவு. | காலை 9 மணி |

அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியசித்தி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | கடன்பயம், காரியத்தடை. | பி.ப 4 மணி |
| புதன்- | பூமியால் வருமானம், குடும்ப நன்மை. | காலை 8 மணி |
| வியாழன்- | தனவிருத்தி, புத்திர சுகம். | காலை 9 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், வீண் செலவு. | காலை 8 மணி |
| சனி- | அந்நியரால் தொல்லை, அலைச்சல். | காலை 11 மணி |

அதிஷ்ட இலக்கம் - 6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அதிகார விருத்தி, செலவு மிகுதி. | காலை 11 மணி |
| திங்கள்- | முன்னேற்றம், உயர்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பணவரவு, பதவி உயர்வு. | காலை 9 மணி |
| புதன்- | காணி பூமி பேறு, கடன் படல். | பி.ப 4 மணி |
| வியாழன்- | எதிர்பாரா வெற்றி, புகழ். | பி.ப 5 மணி |
| வெள்ளி- | பெரியோர் அனுகூலம், மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| சனி- | பணரவு, விருந்தினர் வருகை. | காலை 10 மணி |

அதிஷ்ட இலக்கம் - 2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயமிகுதி, குடும்பப் பிரச்சனை. | காலை 10 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், மனஆறுதல். | காலை 9 மணி |
| செவ்வாய்- | மனைவியால் கவலை, காரியானுகூலம். | காலை 11 மணி |
| புதன்- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினரால் தொல்லை, இடமாற்றம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | காரியத்தடை, கடன் பயம். | பி.ப 4 மணி |
| சனி- | பொருள் வரவு, பூமிப் பேறு. | பி.ப 1 மணி |

அதிஷ்ட இலக்கம் - 3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, குடும்ப நன்மை. | காலை 11 மணி |
| திங்கள்- | பயமிகுதி, பாராட்டு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | கௌரவம், கீர்த்தி, மேன்மை. | காலை 9 மணி |
| புதன்- | பெண்களால் தொல்லை, வீண் சிரமம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, அரச விரோதம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தனலாபம், தருமசிந்தை. | காலை 11 மணி |
| சனி- | திடீர்ச் செலவு, பணக்கஷ்டம். | காலை 9 மணி |

அதிஷ்ட இலக்கம் - 8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், வீண் அலைச்சல். | பி.ப 2 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | தாரசுகம், குடும்ப மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | பி.ப 4 மணி |
| வியாழன்- | வெளிவட்டார நன்மை, செலவு அதிகம். | காலை 9 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, சுகம். | காலை 10 மணி |
| சனி- | பணத்தட்டுப்பாடு, எதிர்பாரா செலவு. | காலை 11 மணி |

அதிஷ்ட இலக்கம் - 8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், காரிய மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | மறைமுக நோய், துயர் அதிகம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, வீண் கலக்கம். | காலை 11 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பணத்தட்டுப்பாடு. | பி.ப 4 மணி |
| வியாழன்- | கடன் பயம், காரியத்தடை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | கடவுள் பக்தி, காரியசித்தி. | பி.ப 4 மணி |
| சனி- | வீண் செலவு, நிலைப்பிரிவு. | காலை 9 மணி |

அதிஷ்ட இலக்கம் - 5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை தீரும், மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பயணம், பொருள் நட்டம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், அதிகார விருத்தி. | காலை 9 மணி |
| புதன்- | பிள்ளைகளால் செலவு, பணத்தட்டுப்பாடு. | காலை 11 மணி |
| வியாழன்- | பிரயாச மிகுதி, காரியானுகூலம். | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, பிடிவாதத் தன்மை. | பி.ப 2 மணி |
| சனி- | வீண் தொல்லை, மனக்கலக்கம். | பி.ப 5 மணி |

அதிஷ்ட இலக்கம் - 3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | சிநேகிதர் மேன்மை, பொருள் இழப்பு. | காலை 9 மணி |
| திங்கள்- | மனக்கிலேசம், வீண் பிரயாணம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | தனலாபம், காரிய மேன்மை. | காலை 10 மணி |
| புதன்- | பலவிதச் சிறப்பு, பூமி சேரவாய்ப்பு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | அந்நியரால் உதவி, அதிகார விருத்தி. | பி.ப 2 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, காரியானுகூலம். | |

அதிஷ்ட இலக்கம் - 4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, பிரயாசமிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, சுபகாரிய நன்மை | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | தனலாபம், வீண் மனஸ்தாபம். | காலை 11 மணி |
| புதன்- | கடன் பயம், காரியத் தடை. | காலை 10 மணி |
| வியாழன்- | வெளியாரால் தொல்லை, துயர் மிகுதி. | காலை 11 மணி |
| வெள்ளி- | எடுத்த காரியம் வெற்றி, சுகவாழ்வு. | காலை 9 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்ட இலக்கம் - 9

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ + விந்தைகள்

## கோமாவில் இருந்த பெண் கர்ப்பமானாள்! மருத்துவர்கள் மீது கண்டனக் குரல்கள்!!

தென் ஆபிரிக்கப் பத்திரிகைகளும் மாதர் சங்கங்களும் ஒருங்கிணைந்து கண்டனக் குரல்களை எழுப்புகின்றனர். சுயநினைவிழந்த (கோமா) நிலையிலுள்ள ஒரு பெண்ணைக் கர்ப்பவதியாக்கிய மைக்கு எதிராகவே இக்கண்டனம் எழுந்துள்ளது.

30 வயதான பெலிண்டா ஹாரிஸ் தென் ஆபிரிக்க நகரமான கேப்ரவுணில் மோட்டார் ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது போதையில் வண்டியைச் செலுத்திக் கொண்டு வந்த ஒருவன் பெலிண்டாவின் வண்டியுடன் மோதினான். கடுமையான தலைக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெலிண்டா நினைவிழந்தாள். 13 வாரங்களாக மருத்துவ உதவிகள் அத்தனையும் அளிக்கப்பட்டும் அவளுக்கு நினைவு திரும்பவில்லை.

இவளைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட கணவன் பேணார்ட் ஹாரிஸ் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்.

ஹாரிசுக்கு ஓர் ஆசை. நினைவிழந்த நிலையிலுள்ள மனைவி மூலம் தனக்கு ஒரு வாரிசினை உருவாக்க வேண்டும் என்பதே அந்த ஆசை.


அவருடைய கருத்தைக் கேட்ட மருத்துவ நிபுணர்கள் ஆரம்பத்தில் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

தங்களுக்கென ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்று தாங்கள் தீர்மானித்த அதே காலத்தில் இத்தகைய விபரீதம் நடந்து விட்டதே என்று ஹாரிஸ் புலம்பினார்.


பெலிண்டாவின் உயிர் பிரிவதற்கு முன்னர் தாங்கள் இருவரும் கொண்டிருந்த அன்னியோன்ய உறவின் வெளிப்படாக ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தால் அது பெலிண்டாவுக்கே ஒரு ஆத்ம திருப்தியாக இருக்கும் என்று ஹாரிஸ் வற்புறுத்தினார். அதனால் மருத்துவர்கள் இசைவு தந்தனர்.

ஓர் உயிர் உதயமாகுவதற்காக மற்றுமோர் உயிர் பிரிவதில் தவறு இருக்க நியாயமில்லை என்ற அடிப்படையில் ஹாரிசின் உயிரணுவினை பெலிண்டாவின் கருப்பையில் வைத்து விட்டனர்.





பெலிண்டா ஹாரிஸ்



பேணார்ட் ஹாரிஸ்

செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் பெலிண்டா 8 மாதக் கர்ப்பிணியாகி விட்டார். நினைவிழந்த பெலிண்டா இன்னும் சில வாரங்களில் குழந்தையைப் பெற்றெடுப்பாள் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். குழந்தை பாதிப்புகள் எதுவுமில்லாமல் சாதாரண குழந்தையாக வளர்ச்சியடைந்து வருவதாகக் கூறுகின்றனர்.


குழந்தையை சுகமாகப் பெற்றெடுக்கக் கூடிய தேக நலம் பெலிண்டாவிடமில்லை என்பதனால் குழந்தை பிறக்கும் நேரத்தில் பெலிண்டாவின் ஆவி பிரியவும் கூடும் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

அவருக்கு அடிக்கடி மாரடைப்பு வருவதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

"தனது குழந்தையைப் பெற்றெடுக்கும் போது பெலிண்டா இறந்தாலும், தனது ஆசை-தாயாகும் ஆசை- நிறைவேறுவதனால் பெலிண்டாவுக்கு ஆத்ம திருப்தி ஏற்படும் என்றே நம்புகிறேன்" என்று ஹாரிஸ் கூறுகிறார்.

அட்வைஸ்

## உணர்வுகளை ஒருநாளும் ஒளிக்கவேண்டாம்! மனம் திறந்து பேசாமல் மறைக்க வேண்டாம்!!



மகிழ்ச்சியென்றாலும் துக்கம் என்றாலும் அதனை உள்ளடக்கி வைத்திருப்பதால் அபாயம் ஏற்படலாம். எத்தகைய உணர்ச்சியானாலும் அதனை வெளிப்படுத்துவது உள்ளத்துக்கும் உடலுக்கும் மிகவும் நல்லது.

எதிர்பாராத ஒரு துக்ககரமான சம்பவம் நடைபெற்றால், கூடுமானவரை அத்துக்கத்தால் உண்டாகும் உணர்வுகளை வெளிப்படுத்துவதே சிறந்தது.

பலர் கண்ணீர்வடித்து அழுது தங்கள் துயரங்களை வெளிப்படுத்தி விடுகிறார்கள். வேறு பலரோ தங்கள் துயரங்களை வெளிப்படையாகக் காட்டி விடாமல் உள்ளடக்கி விடுகின்றனர்.

இதனால் அவர்களுடைய உள்ளத்துக்கு அதிக பழு ஏற்படுகிறது. இது உள்ளத்தையும் உடலையும் மட்டுமல்லாமல் மூளையையும் பெருமளவில் பாதித்து விடுகிறது.

மனத்தை அழுத்தும் துன்ப உணர்வு வெளிவராமல் அடக்கப்படும் போது தாக்கம் அதிகரிக்கிறது. அழுத்தத்தைக் குறைப்பதானால் உணர்வுகளை வெளியிட வேண்டும்.

உள்ளத்தைத் தாக்கித் துன்புறுத்தும் சம்பவங்களை உள்ளே மூடி வைக்காமல் வெளியேற்றும் போது மனப் பாரம் குறைகிறது. அழுத்தமும் விலகுகிறது. தனது துயரை உறவினர்களிடமோ நண்பர்களிடமோ எடுத்துக் கூறும்போது நம்மை அறியாமலே பாரம் குறைவதை உணரலாம்.

நமது உணர்ச்சிகளை வெளிக்காட்டினால் அது பண்புக்கு இழுக்கான செயல் என்று கருதப்படுவதுமுண்டு. ஆனால் உணர்வுகளை வலுக்கட்டாயமாகக் கட்டுப்படுத்துவதனால் துயரத்தின் அழுத்தமும் அதிகரித்து மன உளைச்சல் ஏற்பட்டு இறுதியாக மூளைக் கோளாறும் ஏற்படக்கூடிய நிலையும் உருவாகலாம்.

பெரும்பாலான மன நோய்களுக்கும் இதுவே காரணமாகி விடுகிறது. இதனால் தான் உளவள மருத்துவர்கள் மன நோயாளர்களை மனம் திறந்து பேசுவதற்கு வழி வகுக்கிறார்கள்.

நோயாளியின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவத்தை விபரிக்கச் சந்தர்ப்பம் அளிக்கிறார்கள். அவருடைய துயரத்துக்கான காரணம் வெளியே கூறப்பட்டதும் அவர் அநேகமாகக் குணமடையும் நிலைக்கு வந்து விடுகிறார்.

நம் நாடுகளில் ஒரு வீட்டில் ஒரு துயரமான சம்பவம் நடைபெற்றால் அவ்வீட்டிலுள்ளவர்கள் அழுது புலம்பி, கண்ணீர் விட்டு கவலையை ஓரளவு பரஸ்பரம் வெளிப்படுத்தி விடுகின்றனர். இன்னும் சிலர் தங்கள் மனதை அழுத்தும் துயரத்தை வெளியே காட்டுவது அநாகரிகமான செயல் என்று அடக்கி வைக்க முனைகின்றனர். ஆனால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எங்காவது ஒரு மூலையில் போயிருந்தாவது அழுது புலம்பினால் மன அழுத்தம் கொஞ்சம் நீங்கிட வாய்ப்பு ஏற்படும்.

மேலை நாடுகளில் தங்கள் துயரங்களை மூடி மறைத்து வேடம் போடுவதுதான் நாகரிகம் என்று கருதப்படுகிறது. இதனால் தான் நமது நாடுகளை விட மனோவியாதியால் பாதிக்கப்படுவோர் தொகை அங்கெல்லாம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—16

எதிரே பொழிந்து கொண்டிருந்த தோட்டாக்கள்.

பின்புறமாய் மிக நெருங்கிவந்த ஆளுயர நாய்கள்.

மூன்று நாய்கள். வஞ்சகமில்லாத கவனிப்பில் கொலுத்துப் போய் மிரட்டும் இராட்சத நாய்கள்.

குலாம்ஷா திரும்பிப் பார்த்தார். அவரை நோக்கி இராட்சத நாய்களில் ஒன்று தாவிப் பாய்ந்தது.

மறு நொடியே தாமதிக்காமல் குலாம்ஷாவின் பிஸ்டல் சீறியது.

இராட்சத நாய்கள் வயிற்றில் தோட்டா குறி தவறாமல் செருகியது.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் மற்றைய இரண்டு நாய்களும் வெறித்தனமான பாய்ச்சலில் வர,

ரம்யா இரு கரங்களிலும் கத்திகள் உயர்த்தினாள்.

மிகச் சரியான கோணத்தில் கத்திகள் வீசினாள்.

அலறல் குரல் எழுப்பி இராட்சத நாய்கள் இரண்டும் தரையில் உருண்டன.

தோட்டாக்கள் மட்டும் எதிரே இருந்து பொழிந்து கொண்டிருந்தன.

நெருங்கி வராமல் தூர இருந்தே தன்னியங்கித் துப்பாக்கிகளின் வயிற்றை எதிரிகள் காலி செய்து கொண்டிருந்தார்கள்.

ரம்யா தரையோடு தரையாக நகர்ந்தாள். தலை உயர்த்தாமல் முழங்கைகளால் தரையில் ஊன்றி செத்துக் கிடந்த இராட்சத நாய்களை நோக்கி நகர்ந்தாள்.

செருகி நின்ற கத்திகள் இரண்டையும் உருவி எடுத்து, ஒன்றை இடுப்பில் பத்திரப் படுத்தினாள். இன்னொரு கத்தி கையில் தயாராக இருந்தது.

குரோட்டன் செடி விலக்கி, தரையோடு நகர்ந்து தலைநீட்டிப் பார்த்தார் குலாம்ஷா.

தூரத்தில் நின்று துப்பாக்கிகளை பொழிய வைத்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தனை நேரமாகியும் அவர்கள் அருகில் வரவில்லை என்பதால் அச்சப்படுகிறார்கள். உதவி வரும்வரை சுட்டுக் கொண்டே இருக்க நினைக்கிறார்கள்.

இது தற்காப்புக்கான துப்பாக்கிப் பிரயோகம்.

தற்காப்பு என்பது எதிரியின் அழிவில் தான் நிறைவு பெறுகிறது.

எதிரியை அழிக்க முன்னேற முடியாத போது தற்காப்பு என்பது பின்வாங்குதலாகவும் மாறக்கூடும்.

இவர்கள் முன்னேற முயலவில்லை. எதிரி பலமானவன் என்று நினைக்கிறார்கள்.

அந்த நினைப்பே இவர்களை வெல்லுவதற்குப் பெரிய பலம்.

போரிலே எதிரியைக் குறைத்து மதிப்பிடுகிறவனும் தோற்கிறான். அதி கூடுதலாக மதிப்பிடுகிறவனும் துவண்டு போகிறான்.

இவர்கள் எதிரியைப் பற்றிக் கூடுதலாக மதிப்பிட்டுள்ள பலவீனமான எதிரிகள். இப்போது தேவையானது கொஞ்சம் சாகசம். கொஞ்சம் விவேகம். இரண்டில் ஒன்று பார்த்துவிடும் துணிச்சல் நிரம்பிய செயல். குலாம்ஷா சூழலைப் புரிந்து கணக்குப் போட்டு ரம்யாவைத் திரும்பிப் பார்த்தார்.

ரம்யா புத்திசாலிப் பெண். குலாம்ஷா சூழலைக் கணக்கெடுத்து தன் கொம்பியூட்டர் மூளையில் அலசிப் பார்த்து, செய்துவிட்ட முடிவு புரிந்து பேசினாள்.

"இங்கிருந்து பிஸ்டலால் சுடுவதோ, கத்தி எறிவதோ கஷ்டம் ஷா. இன்னும் முன்னே போக வேண்டும். முயல வேண்டும். முயலலாம். நான் ரெடி."

கட்டைவிரல் உயர்த்திக் காட்டினாள். முகத்தில் உறுதி அறுதிப் பெரும்பான்மைப் பலத்தில் இருந்தது.

மெல்லக் கை நீட்டி ரம்யாவின் விரல் பற்றி அழுத்தினார் குலாம்ஷா.

அந்த அழுத்தல் போதும். உறுதியை ஊக்குவிக்கும் உற்சாகம் தெரிந்தது. ஆபத்திலும் கலங்காமல் கூடவரும் துணை மீது ஆழமாய் நேசம் காட்டல் புரிந்தது.

நட்பு என்பதும், நேசித்தல் என்பதும் மிகப் பெரிய விசயங்கள். வெறும் சொற்களாக மட்டுமே உச்சரிக்கும் விசயங்கள் அல்ல. தனது நட்புக்காக, தன்னால் நேசிக்கப்படும் ஒருவருக்காக தன்னைக் கொடுத்தல், தன்னால் முடிந்ததைச் செய்தல் அகில உலக சந்தோசம்.

இரும்பு உலைக்கள நெருப்பில் உறுதியாகுவது போல, உண்மை அன்பு நெருக்கடியிலும், சூழ்ந்து வரும் ஆபத்திலும் உறுதிப்படுகிறது.

மனித வாழ்வில் சாவு என்பது சாதாரண காரியம். வாழும் போது நல்ல நட்பை பெறுவதும், நேசித்தலின் சுகத்தில் திளைப்பதும் மாபெரும் உன்னதமான காரியம்.

குலாம்ஷாவுக்கு நண்பர்கள் குறைவு. ஏனெனில் நண்பர்கள் என்பதற்கும், நட்பு என்பதற்கும் குலாம்ஷா வரையறுத்த வட்டத்திற்குள் வரக்கூடியவர்கள் மிகச் சிலராகவே இருந்தார்கள்.

புயல் வீசிய பின் காணாமல் போன கூரைகள் போல, நெருக்கடிகளில் சேர்ந்து நில்லாமல் போகிற நண்பர்கள் தேவையில்லை. குலாம்ஷாவின் சித்தாந்தம் அதுதான்.

ரம்யா இந்தக் கூட்டத்தில் ஏன் சேர்ந்தாள் என்று குலாம்ஷாவுக்குத் தெரியாது. விபத்தாய் நேர்ந்த விபரீதம் என்றே நினைத்தார். துணிச்சலும், விவேகமும் கொண்ட பெண்ணுக்கு அடங்காப் பிடாரி என்று சமூகம் ஒரு கெட்ட பெயர் வைத்திருக்கிறது. அதனால்தான் பல பெண்கள் ஆற்றலை மறைத்து உள்ளே புழுங்கி நசுங்கிப் போகிறார்கள்.

அதனால் சமூகம் தன் பலத்தில் பாதியைத் தொலைத்து விடுகிறது.

பூலான்தேவி என்ற கொள்கைக்காரியின் கதையை விழுந்து படிக்கும் ஆண்களில் சிலர் தன்வீட்டுப் பெண் துணிச்சலாய் பேசினால் எரித்து விடுவது போல் சீறுகிறார்கள்.

பூலான் தேவிகளின் கதைகளுக்குப் பின்னாலும் சமூகம் பெண்மீது காட்டிய கொடூரத்தின் வெளிப்பாடுகள் புதைந்து கிடக்கின்றன.

ரம்யாவின் பின்னாலும் ஒரு சோகம் இருக்கக்கூடும். துரோகத்தால் பட்ட காயம் இருக்கக்கூடும்.

ரம்யா நல்லவள். நேசிக்கத் தெரிந்தவள். நேசத்துக்காக உயர்ந்த பட்சமாய் தன்னை இழக்கவும் தயங்காதவள்.

குலாம்ஷா ரம்யா மீது இப்போது நேசம் கொண்டார். அவள் துணை பெரிய பலமாய் உணர்ந்தார்.

ரம்யாவின் விரல் பற்றி அழுத்தி விட்டு "ரம்யா நீ வரவேண்டாம். நான் அவர்களை கவனித்துக் கொள்கிறேன்."

"ஏன் ஷா, என் திறமையில் நம்பிக்கை இல்லையா?"

"இருக்கிறது ரம்யா. நிறைய இருக்கிறது."

"பின் எதற்கு தடுக்கிறீர்கள் ஷா."

"உண்மையைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள் ஷா."

"உன்னை இழக்க நான் விரும்பவில்லை. என்னைக் காக்க உன்னை இழப்பதில் எனக்கு உடன்பாடில்லை."

குலாம்ஷாவின் உறுதியான குரல் சோகத்தில் கம்மியது.

ரம்யா உள்ளே நெகிழ்ந்து போனாள்.

இதுவரை ரம்யா சந்தித்த எந்த ஆணும் அவளை அணைக்க நினைத்தார்களே தவிர, அன்பில் நனைக்க நினைக்கவில்லை. ரம்யா என்றால் அழகான, இளமையான, நிமிர்ந்த மார்புகள் மட்டுமே அவர்களுக்கு தெரிந்தன.

ரம்யாவும் சுகம் கண்டிருக்கிறாள். எனினும் அது வெறும் உடல் பகிர்வு மட்டுமே. இப்போதுதான் தன்னை ஒரு சக துணையாக நேசிக்கும் ஒரு ஆணைச் சந்திக்கிறாள்.

தன்னை நேசிக்கவும், தன்னில் அக்கறை காட்டவும் ஒரு துணை உள்ளபோது மனது முழுக்க ஒரு நிறைவு வரும். பனியில் நனைந்த பூப்போல மனசு சந்தோச ஈரத்தில் குளிரும்.

ரம்யாவுக்கு மனது இனித்தது. ரம்யாவுக்கு மனது குளிர்ந்தது. குலாம்ஷாவை இறுகத் தழுவி, இதழ்கள் கலந்து சந்தோசத்தைப் பகிர வேண்டும் என்று மனது துடித்தது.

துடித்த மனதுக்கு சூழல் இடம் கொடுக்க மறுத்தது.

இப்போது ரம்யா தரையோடு கிடந்த படியே தனது இடது கரம் நீட்டி குலாம்ஷாவின் விரல்களுக்குள் தனது ஐந்து விரல்களும் கலந்து கோர்த்து இறுக்கினாள்.

"உங்களை இழக்க நான் மட்டும் சம்மதிப்பேன் என்றா நினைக்கிறீர்கள்? இந்த விடயத்தில் மட்டும் உங்கள் மறுப்புக்கள், தடுப்புக்கள் என்னைக் கட்டுப்படுத்த நான் சம்மதிக்கமாட்டேன் ஷா."

கோர்த்திருந்த விரல்கள் மேலும் இறுகின. ரம்யாவை தடுக்க முடியாது என்று ஷாவுக்கும் தெளிவாய்ப் புரிந்தது.

"ஓ.கே. ஒரு நிபந்தனை."

"அது என்ன ஷா."

"நான் முதலில் சுட்டுக் கொண்டே முன்னேறுவேன். நான் அழைக்கும் போது நீ வெளியே வந்துகொள். என்ன ரம்யா ஒகேயா?"

ரம்யா ஒரு நொடி தாமதித்து,

"இந்தப் போரில் நீங்கள் தானே தளபதி. கட்டுப்படாவிட்டால் முதலில் சுட்டுப்போட வேண்டியது என்னையல்லவா, ஓகே."

முகத்தில் சோகம் கலந்த புன்னகை காட்டினாள்.

இப்போது ஷா குரோட்டன் செடி மறைவு விட்டு முன்னாள் பத்தடி தூரத்தில் இருக்கும் மற்றொரு குரோட்டன் செடி மறைவு நோக்கிப் பாயத் தயாரானார்.

குலாம்ஷா வெளியே பாய தோட்டாக்கள் அவரை தொட்டுவிடும் அருகில் பாய்ந்து சென்றன.

குலாம்ஷா தோட்டாக்கள் படாதவாறு வளைந்தும், நெளிந்தும் முன்னேறி ஓடினார்.

எதிரே ஆயுதங்களோடு நிற்பது நாலுபேர் மட்டுமே என்பதை குலாம்ஷா கணக்கிட்டுக் கொண்டார்.

குலாம்ஷா முன்னேறி ஓடிவர எதிரிகள் பதட்டமாகினர். ஒருவன் சுட்டபடியே பின்நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான்.

குலாம்ஷா பற்றி ஏற்கனவே அறிந்து வைத்திருந்ததால் அச்சப்பட்டார்கள்.

குலாம்ஷா முன்னால் நின்றவனை குறிவைத்து பிஸ்டலின் விசையை தட்டி விட்டார்.

குலாம்ஷாவின் குறி தவறுவது அரிது. முன்னால் நின்றவன் ஆ...வென்று அலறியபடி துப்பாக்கியை வீசிவிட்டு நெஞ்சின் மையத்தைக் கையால் பொத்தினான். தொப்பென்று தரையில் சாய்ந்தான்.

முன்னால் உள்ள குரோட்டன் செடி மறைவை அடைய இன்னும் நான்கு அடிகளே பாக்கியிருந்தன.

இரண்டாவது எதிரியைக் குறிவைத்து விசையைத் தட்டினார்.

குலாம்ஷாவின் பிஸ்டல் குறிவைப்பதை உணர்ந்து அவன் துள்ளி இடது புறமாய் விலகினான்.

தோட்டா விரயமானது. மீண்டும் குலாம்ஷாவின் பிஸ்டல் சோபமாய் குறி பார்த்து சீறியது.

இம்முறை குறி மிகச் சரியாக இருந்தது. அதுவும் எதிரியின் நெற்றியின் மையத்தில் வட்டப் பொட்டாக துளையிட்டு காரியம் முடித்தது.

இன்னும் இருவர்தான். அவர்கள் குறியில்லாமல் சுட்டுக்கொண்டிருந்தார்கள். தமது சகாக்கள் இருவர் மடிந்து போனதால் பயந்து போயிருந்தார்கள்.

குலாம்ஷா இப்போது குரோட்டன் செடி மறைவுக்குள் புகுந்து கொண்டார்.

பிஸ்டல் மீண்டும் உயர்ந்தது. இரை தேடி உயர்ந்தது. வாயில் கேற் அருகே நின்றபடி, துப்பாக்கியை இயக்கிக் கொண்டிருந்தவனை விருப்பத்தோடு பார்த்தது.

பிஸ்டலின் விருப்பம் போல குலாம்ஷா விசையை தட்டிக் கொடுக்க, தோட்டா விரைந்து அவன் வலது தோள்மூட்டில் முத்தம் கொடுத்தது. மறுபடியும் விசையைத் தட்ட இம்முறை நெஞ்சின் மையத்தில் சாவுக்கு சத்தியக் கடதாசி கொடுத்தது.

மீதி ஒருவன்தான். மூவரும் மடிந்துவிட இனிச் சாவுதான் தனக்கும் என்று அவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

தப்பிப் போய் பொஸ்ஸின் கையால் அடிபட்டுச் சாவதைவிட இங்கேயே சாவது மேல் என்ற முடிவில், அவன் சுட்டுக் கொண்டே குலாம்ஷா இருந்த மறைவு நோக்கி முன்னேறினான்.

குலாம்ஷா மறைவில் இருந்து திடீரென்று மின்னல் வேகத்தில் வெளிப்பட்டார். முன்னேறிவரும் எதிரியை நோக்கி பிஸ்டலை நீட்டி விசை தட்டினார்.

பிஸ்டல் சத்தம் போடவில்லை.

பிஸ்ட லின் வயிறு காலியாகிவிட்டது.

தோட்டாக்கள் தீர்ந்து போய்விட்டன.

குலாம்ஷா உள்ளே அதிர்ந்து திகைத்துப் போக,

எதிரி மிக நிதானமாக தன் துப்பாக்கியை ஷாவின் நெஞ்சுக்கு குறிவைத்து நீட்டினான்.

■

வைத்தியின் அந்தரங்க காரியதரிசி றீட்டா இப்போது இன்பராஜின் பிடியில் இருந்தாள்.

இன்பராஜ் கம்பீரமாய் இருந்தான். கவர்ச்சியான தோற்றத்தோடு இருந்தான். மீசையை அளவோடு கட்பண்ணி, தினசரி சவரம் செய்த சுத்தமான முகத்தோடு, தன் உதடுகளால் றீட்டாவின் உதடுகளை அளவெடுத்துக் கொண்டிருந்தான்.

றீட்டா இன்பராஜின் வெற்று மார்பில் கரம் போட்டு வித்தை காட்டிக்கொண்டிருந்தாள்.

றீட்டாவின் உதடுகளை நாவால் ஈரப்படுத்தி விட்டு, மெல்லக் கடித்தான். பின் உதடு விலக்கி,

"வைத்தி என்ன சொல்கிறான் றீட்டா?" என்று கேட்டான்.

"உங்கள் மீது முன்பு போல் வைத்திக்கு நம்பிக்கை இல்லை ராஜ்."

"கிழவன் முந்தப் பார்க்கிறான்.. தனக்கு அடுத்த தலைவன் நான்தான் என்று சொல்லிக்கொண்டிருந்தவன் இப்போது என்னை ஓரத்தில் தள்ளிவிடப் பார்க்கிறான்."

"இனிமேல்தான் கவனமாக இருக்க வேண்டும் ராஜ். வைத்தி பொல்லாதவன். தன்னைக் காக்க எந்த எல்லை வரையும் செல்லக் கூடியவன்."

"நீ வைத்தியின் அருகில் உள்ளவரை நான் யோசிக்கவே வேண்டியதில்லை றீட்டா."

சொல்லிக்கொண்டே றீட்டாவின் மார்பில் கரம் இறக்கினான். விம்மிய அழகுகள் கரம் இறங்கி வர வரவேற்புக் கொடுத்தன.

■

வைத்தி வந்து கொண்டிருப்பதாகச் சொன்னதும் மதுமிதா மெளனமானாள்.

தன் வாழ்க்கையை திசைதிருப்பிய அந்தப் போட்டோக்கள்,

அதனால் எற்பட்ட விபரீதங்கள், தொடரும் அபாயங்கள். இன்னும் இன்னும் புரியாத சில புதிர்கள் பற்றியெல்லாம் டி.ஐ.ஜி டென்சிலிடம் மனம் திறந்து கொட்ட நினைத்தவள் மெளனமானாள்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த இரு கொன்ஸ்டபிள் அருகே அதிர்ந்தவர் போல வைத்தி நின்றுகொண்டிருந்தார்.

டி.ஐ.ஜி டென்சில் வெளியே வந்து வைத்தி அருகே செல்ல,

"என்ன.. என்ன டி.ஐ.ஜி.... ஓ..... காட்.... என் வீட்டில்...... கொலை.... எப்படி?"

திணறியபடி பேசினார். நெற்றியில் கரம் வைத்து அழுத்தியபடி முகத்தில் குழப்பம் காட்டினார்.

வைத்தியின் தோளில் ஆதரவாய் தட்டி

"எல்லாம் சொல்கிறேன். அமைதியாக இருங்கள் மிஸ்டர் வைத்திலிங்கம்."

அம்புலன்ஸ் அவசரக் குரல் எழுப்பிக் கொண்டு வந்து உள்ளே புகுந்தது.

அம்புலன்சில் பின்னால் இரு ஜீப்புக்களில் ஒரு பொலிஸ் படையே வந்து இறங்கியது.

இன்ஸ்பெக்டர் அரவிந் டி.ஐ.ஜி டென்சிலின் முன்பாக வந்து நிமிர்ந்து சல்யூட் செய்தார்.

வைத்தி திடீரென்று நினைவு வந்தவராக,

"மதுமிதா எங்கே டி.ஐ.ஜி?" என்று பதட்டமாய் கேட்டார்.

"எந்தப் பிரச்சனையும் இல்லை. பத்திரமாக இருக்கிறாள்."

"டி.ஐ.ஜி."

"என்ன அரவிந்?"

"கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும்."

வைத்தியைப் பார்த்து,

"எக்ஸ்கியூஸ்மீ மிஸ்டர் வைத்தி." சொல்லி விட்டு அரவிந்தோடு ஜீப்பின் பின்புறமாகச் சென்றார் டி.ஐ.ஜி.

டி.ஐ.ஜியின் காதோடு காதாக அந்தச் செய்தியை அரவிந் சொல்லிக் கொண்டிருக்க, டி.ஐ.ஜியின் முகம் சிவந்தது.

வைத்தியை நோக்கி ஆவேசமான முகத்தோடு விரைந்தார் டி.ஐ.ஜி டென்சில்.


டி.ஐ.ஜி. டென்சில் வந்த வேகம் பார்த்து வைத்தி உள்ளே அதிர்ந்தார்.

இன்ஸ்பெக்டர் அரவிந் என்ன சொல்லியிருக்க முடியும் என்று யோசித்தார்.

தன்னையும் அறியாமல் வைத்தியின் கரம் இடுப்பில் இருந்த பிஸ்டலைத் தொட்டுப் பார்த்துக் கொண்டது.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே.ஆர். ஞானேந்திரன்
வயது: 24
முகவரி: 45, பிரதான வீதி, பண்டாரவளை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: எஸ். அமிர்தலிங்கம்
வயது: 33
முகவரி: 17, டீன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு–10.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: வை. சிவராஜ்
வயது: 19
முகவரி: பேச்சியம்மன் வீதி, ஆரையம்பதி-02, ஆரையம்பதி.
பொழுதுபோக்கு: நாவல்கள், சஞ்சிகைகள் படித்தல், திரைப்படம் பார்த்தல், வானொலி கேட்டல்.

பெயர்: மு.சி.மு. நதீர்கான்
வயது: 16
முகவரி: 180 பி, கன்னி வீதி, சாய்ந்தமருது-1, கல்முனை.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.



பெயர்: பர்சானா ஸ்ரீன்
முகவரி: 103/40, மீரிகம வீதி, நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.



பெயர்: கா.மு. இஸ்மத்
வயது: 22
முகவரி: ரிஹானா ஹாட்வெயார்ஸ் இல.20, 3ம் குறுக்குத்தெரு, கொழும்பு–11.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்.

பெயர்: மாரிமுத்து வசந்தராணி
வயது: 16
முகவரி: 55, பதுளை வீதி, ஹாலி–எல.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், கதைகள் படித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: டி.எம். நப்ஹான்
வயது: 19
முகவரி: மொஸ்க் ஜங்சன், ஹிங்குளோயா–2, மாவனல்லை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, நாவல்கள் படித்தல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# அவள் நெஞ்சுக்குத் தெரியும்

-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-



இயற்கையின் அருட்கொடையாய் நறுமணம் கமழும் அந்தப் பேராதெனியப் பூங்காவின், சுகந்தமான தென்றலின் சுகத்தில்- சுத்தமான பச்சைப் பசுந்தரையில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். சின்ன வயதுக் காதலர்கள்... இருபத்தி மூன்று வயது வசந்தனும்.... பதினெட்டு வயதுப் பருவமங்கை மாலதியும்...அவன் மடியில் அவள் இதமாய்ச் சாய்ந்திருந்தாள்.

ஆனால்-

அவளுதடுகள் மட்டும் அவனுதடுகளுக்குள் முத்தமாய்- மொத்தமாய் அடைக்கலமாகிப் போயிருக்க, இன்பமான சில நிமிடங்களில் உலகை மறந்திருந்தார்கள்.

"கிஸ் ஈஸ் கீ ஒப் தி லவ்!"

என்று சும்மாவா சொன்னார்கள்? உண்மையோ, பொய்யோ இவர்களைப் பொறுத்தவரையில் 'முத்தம் காதலின் திறவுகோள்!' என்றுதான் கொள்ள வேண்டும்.

அந்த உதடுகள் மென்மையாய்ப் பிரிய.....

வசந்தன் மென்மையாய்க் கேட்கிறான். மெல்லமாய்.....

"மாலதி... என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ச்சீப் போ....இதென்ன கேள்வி? எனக்கு உன்னையும் பிடிச்சிருக்கு. உன் உதடுகளின் ஐஸ்கிறீம் சுவையையும் பிடிச்சிருக்கு!"

"என் காதலை...?"

"பிடிச்சிருக்கு!"

அவளது பதிலில் அவன் மெய் சிலிர்த்துப் போகிறான்.

"நீயென்னை மறந்துடுவியோன்னு....சில நேரங்களில் ஏதோவொரு பட்சி என் மனசுக்குள்ள சொல்லுது. நீயென்னை மறந்துடுவியா மாலதி?"

அவன் ஏக்கமாய்க் கேட்கிறான்.

"ஏன் அப்படிக் கேக்குறே வசந்தன்?"

"இல்ல...உன் வசதிக்கும் அந்தஸ்த்துக்கும் மத்தியில யாருமே என்னை விரும்ப மாட்டாள் மாலதி. என் ஏழ்மையை விரும்புமாட்டாங்க. ஆனால்....சத்தியமாக நானுன் பணத்தை விரும்பல மாலதி. உன்னைத்தான் விரும்புறேன். ஆனால் நீ...."

வசந்தன் வார்த்தைகளைத் தொடர்வதற்குள், மாலதி அவன் வாயைப் பொத்தி விடுகிறாள். அவசரமாய்.....

"அப்படிச் சொல்லாதே வசந்தன். நீயில்லாம என்னால ஒரு வாழ்க்கையை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதுடா. உன் ஏழ்மையைக் காரணம் காட்டி நானுன்னை விட்டு விலகிப்போயிட மாட்டேன். ஏன்னா என் வாழ்க்கையே நீதாண்டா...." அவள் கண்களில் கோடு போகிறது.

"என் உயிரே நீதான் மாலதி!"

வசந்தன் குரலில் உடைந்து போகிறான்.

"வசந்தன் ஏன்டா சும்மா பயப்படுறே...?"

"பயமில்ல மாலதி... காதலிச்சுத் தோற்றுப் போகிற வேதனையை கதைகளில தான் படிச்சிருக்கேன். சினிமா விலதான் பார்த்திருக்கேன். ஆனால்... அதையே என்னோட அனுபவத்துல வைத்துப் பார்க்கும் போது தாங்க முடியல மாலதி.... நீ எனக்குக் கிடைக்காமல் போனால், நான் அப்படியே செத்துப் போயிடுவேன்."

ஆண்பிள்ளை அவன் கண்களிலும் கண்ணீர் திரையிடுகிறது.

"என்னடா சின்னப்பிள்ளை மாதிரி..." மாலதி பதறிப்போய் அவன் கண்ணீரை தன் கரங்களால் துடைத்து விடுகிறாள்.

நிமிடங்கள் மெல்லமாய்க் கரைய....

மீண்டும்...அவர்களது எச்சில் இதழ்கள் காதலாய் இணைகின்றன.

அந்த முத்தச்சூட்டின் பின்னணியில் மாலை மங்கிக் கொண்டிருந்தது.

• • • •

இரவு நேரம்!

அந்த டைனிங் டேபிளைச் சுற்றி அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அப்பா, லோயர், பத்மநாதனும்..... மகள் மாலதியும்.... பணக்காரத்தனமான 'டின்னரில்' மூழ்கியிருந்தார்கள்.

"மாலதி!"

மாலதி அண்ணாந்து பார்க்கிறாள்.

"என்ன டாடி?"

"உனக்கு வசந்தனைத் தெரியுமா?"

"எந்த வசந்தன் டாடி,"

"நம்ம பக்கத்துத் தெருவில குடியிருக்கிறானே, லாரி ட்ரைவர் முருகேசன்.... அவனோட மகன் வசந்தன்.... வசந்தகுமாரன் என்கிற பெயரில கதையெல்லாம் பத்திரிகையில எழுதுவானே..."

"ஓ...அவனா? அவங்க அம்மா கூட அப்பம் சுட்டு விற்பாங்களே.... அந்த வசந்தனைக் கொஞ்சம் கொஞ்சம் தெரியும் டாடி.... ஏன் டாடி?"

"இல்லை...அவனுக்கும் உனக்கும் இடையில ஏதோ காதல் கீதல்னு ஊரில பேச்சு அடிபடுது. அதான்... உண்மையாம்மா. அப்படி ஏதாவது உங்களுக்குள்ள நட்பு இருக்குதாம்மா?" என்ற பத்மநாதன் முகத்தில் எந்த வித உணர்ச்சியுமேயில்லாமல்.... சாப்பிட்டுக்கொண்டே போகிறார். கோழிக்கறி நாவுக்கு ருசிக்கத்தான் செய்கிறது.

மாலதியின் முகத்தில் எந்தவித சலனமுமில்லை.

"டாடி?"

"உண்மையாம்மா?"

"என்ன டாடி...உங்கள் மகள் பைத்தியக்காரி...சுத்தப்பட்டிக்காடு என்று நினைக்கிறீங்களா? உங்க அந்தஸ்த்து என்ன? தகுதி என்ன? பணமென்ன? கௌரவமென்ன? அப்படியிருக்க போயும், போயும் மண் குடிசையில ஒரு எச்சில் குடும்பத்துல.... பிச்சைக்கார வாழ்க்கை வாழ நான் ஆசைப்படுவேனாப்பா."

பத்மநாதன் மெலிதாக முறுவலிக்கிறார். சொல்கிறார்.

"அந்தப் பையன் உன் பின்னாடி சுத்தறதாகவும் கேள்விப்பட்டேனே!"

"நாய் மனிசன் பின்னால சுத்தித் திரியலாம்..... ஆனால் மனிசன் நாயின் பின்னால சுத்தித்திரியலாமா டாடி.... அவன் என் பின்னால சுத்தி வர்றான்.... ஆனால் எனக்கு வேற வேலையில்லையா? காதல் கத்தரிக்காயெல்லாம் சினிமாவிலதான் நன்றாயிருக்கும் டாடி..... வாழ்க்கைக்கு ஒத்துவருமா? நான் உங்க பொண்ணு டாடி.... எனக்கு பணக்கார டாடி மாதிரி, நல்ல வசதியுள்ள பணக்கார இடமாப் பார்த்து நீங்களாகவே கல்யாணம் பண்ணி வைக்கிறவரைக்கும் நான் அவசரப் படமாட்டேன் டாடி...."

"ப்ராமிஸ்!" பத்மநாதன் மாலதியின் விழிகளை நோக்கிக் கேட்கிறார்.

"செத்துப்போன என் அம்மாமேல சத்தியமா சொல்றேன் டாடி... காதல் கீதல்னு நான் நாறிப் போகமாட்டேன். என் கல்யாணத்துல உங்க விருப்பம்தான் என் விருப்பம் டாடி..."

"வெரி குட்! நீ என் பொண்ணும்மா."

அவள் பிரகாசமாய்ச் சிரிக்க.....

பத்மநாதன் மனதுக்குள் மலர்ந்து போகிறார்.

இருவரும் வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு, 'குட்நைட் ஸ்வீட் ட்ரீம்ஸ்' சொல்லிப் பிரிந்து, தத்தம் அறைகளை நோக்கிப் போகிறார்கள்.

நேரம் ஊர்ந்து கொண்டிருக்க....

பத்மநாதன் எந்தவிதக் கவலைகளுமே இல்லாமல் தூங்கிப்போகிறார்.

மாலதியோ....

அவளும் எந்தவித மனக்கஷ்டங்களுமே இல்லாமல்...பேப்பரும் பேனாவுமெடுத்து (அ)சாதாரணமாக எழுத ஆரம்பிக்கிறாள்.

வசந்தனுக்கு,

நான் உன்னை விரும்பவுமில்லை. உனக்காக ....ஏக்கமாக ஏங்கிக் கொண்டிருக்கவும் இல்லை. மாறாக நீதான் என்னை விரும்பிக் கொண்டிருக்கிறாய். நான் பொழுது போக்காகவே உன்னுடன் பழகினேன். எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதே. எல்லாவற்றையும்... என்னையும் மறந்துவிடு!

'என் தகுதிக்கு ஏற்றவரை அப்பா தேடிக்கொண்டிருக்கிறார். உன் தகுதிக்கு ஏற்றவளை நீ தேடிக்கொள்!'

எழுதி முடித்து... அவள் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை படர்கிறது.

அப்படியே அதை 'என்வலப்பில்' இட்டு, தன் நாவினால் எச்சில் தடவியொட்டி, சேரவேண்டியவர் முகவரியில்... வசந்தனது பெயரை எழுதுகிறாள்.

"காலையில் போஸ்ட் பண்ண வேண்டும்!" மனதுக்குள் அலட்சியமாய் நினைத்துக் கொள்கிறாள். அப்படியே... பணக்காரத்தனமான கனவுகளோடு உறங்கிப் போகிறாள் மாலதி என்ற அந்தப் பணக்காரக் கிராதகி. (மற்றைய பணக்காரப் பெண்கள் மன்னிக்கவும்)

காதல் என்பது அவ்ள் வாழ்வின் வேடிக்கையாயிருக்கலாம்......

ஆனால் வசந்தனைப் பொறுத்த வரையில்...அது அவன் உயிர்!

வசந்தன் இந்தப் பாரிய 'இடியைத்' தாங்கிக் கொள்வானா?

எவை எப்படியோ...... அவள் செய்யும் 'வஞ்சகம்' அவள் நெஞ்சுக்குத் தெரியாமலேயா போகும்? கட்டாயம்...அவள் நெஞ்சுக்குத் தெரியும்!

-முற்றும்-

(இந்தக் கதையின் முடிவை ஜீரணிக்க முடியாதவர்கள்.... தொடர்ந்து வாசித்துக் கொண்டே போகலாம்....ஏனெனில் அவர்களுக்காக இன்னொரு 'முற்றும்' காத்துக்கொண்டிருக்கிறது.)

வசந்தன் அந்த மடலைப்பார்த்து அதிர்ந்து, உள்ளுக்குள் ஆயிரமாயிரமாய் நொறுங்கிப் போகிறான். அவனால் நம்பவே முடியவில்லை. நேற்றுவரைக்கும் தன்னோடு கொஞ்சிக்குலாவி தன்மடியே தஞ்சமென்றிருந்த மாலதியா இப்படியொரு கடிதம் எழுதினாள்?"

"அவளுக்கு எப்படி மனசு வந்தது?"

தேள் கொட்டினாற்போல் உடம்பு முழுக்க உஷ்ணமாய் வேதனையை அனுபவித்து.... மனம் ஓவென அழுகிறது. தன் உயிரே தன்னைவிட்டுப் பிரியும் உணர்வில்...வாழ்க்கைமீது பாரிய வெறுப்பு உண்டாகிறது.

"காதலையும், முத்தங்களின் சுவையையும் கூட இவ்வளவு சீக்கிரம் அவளால் மறந்துவிட முடியுமா?" அந்த எண்ணங்களே மலைபோலிருந்த, மனதைக்குழப்பி நாட்கள் நான்கு உருண்டோடி விடுகின்றன. வசந்தன் வசந்தமிழந்துபோய்.... மீண்டும் பழைய நிலைக்கே வர முயல்கிறான்.

மனதில் புதுத் தெம்பு பிறக்கிறது.

"வானத்தில் இருக்கிற நட்சத்திரங்களின் எண்ணிக்கையைக் கூட இலேசாகக் கணக்கிட்டுச் செல்லலாம். ஆனால்....ஒரு பெண்ணின் மனதில் இருக்கும் எண்ணங்களை எந்த அறிஞனாலும் கூறமுடியாது. பெண் மனம் ஒரு புரியாத புதிர்!"

ஏதோவொரு புத்தகத்தில் வாசித்த ஞாபகம்.

வசந்தன் சிந்திக்க ஆரம்பிக்கிறான்.

எந்தக் காதலனுமே தன் காதலியை பழிவாங்க நினைக்கமாட்டான். ஆனாலும்..... வைரத்தை வைரத்தால் அறுப்பதுபோல்... வித்தியாசமாய் ஏதாவது செய்யவேண்டும்.

வசந்தன் அடுத்தவர்களைவிட வித்தியாசமானவன்.

'கிஸ் ஈஸ் கீ ஒப்தி லவ்!" என்று சொன்னவர்கள்...'லவ் லொக்கர் ஒப்தி லைப்' என்றுமல்லவா சொல்லியிருக்கிறார்கள். ஆக -காதல் வாழ்க்கையின் பூட்டே தவிர, மரணத்தின் பூட்டு அல்லவே. பெண்மையின் வஞ்சகத்தில் மரணித்துப் போவது மடத்தனம். ஆகவே, அவளது வஞ்சகத்துக்காக வித்தியாசமாய் ஏதாவது பண்ண வேண்டும். பண்ண வேண்டும். ஏதாவது பண்ண வேண்டும்....

மதிய நேரம் சாரதா டீச்சர் இவனைத்தேடி வந்தார்.

இதே சாரதா டீச்சரிடம் இரண்டு வருடங்களுக்கு முன்பு வசந்தன் 'இலக்கியம்' படித்திருக்கிறான். இப்போது இதே டீச்சரிடம் மாலதியும் 'இலக்கியம்' படிப்பது வசந்தனுக்குத் தெரியும். வசந்தனோடு நட்பாகப் பழகும் அன்பான டீச்சர்...சாரதா! ஐம்பது வயதுகளில் மரியாதைக்குரிய டீச்சர்.

"வசந்தன்.."

"என்ன டீச்சர்,"

"உனக்கும் மாலதிக்கும் இடையில காதல்னு கேள்விப்பட்டேன். உண்மையாப்பா...?"

"யார் சொன்னது டீச்சர்?"

"ஸ்கூலில ஸ்டூடன்ஸ் எல்லோரும் பேசிக்கிறாங்க..."

"அதெல்லாம் சுத்தப் பொய்...புரூடா டீச்சர்!"

"இல்லைப்பா...நீ கடிதம் தர்றதாகவும், அவள் பின்னாடி சுத்தறதாகவும் மாலதியே என்கிட்ட சொன்னாள் வசந்தன். சதா நீ அவளைத் தொந்தரவு பண்றியாம்..."

சாரதா டீச்சர் இவனது முகம் பார்த்துக் கேட்கிறார்.

வசந்தனோ பிரகாசமாய்ப் புன்னகைக்கிறான்.

"காகம் வேணும்னா குயில் தன்னோட சொந்தம் என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால்....குயிலுக்கு அப்படிச்சொல்லிப் பெருமைப்பட வேண்டிய அவசியமில்ல டீச்சர்."

"என்னப்பா சொல்றே?" சாரதா டீச்சர் புரியாமல் பார்க்கிறாள்.

"காதலிக்கிறதுக்கு ஏதாவது தகுதி வேணுமா டீச்சர்? பணம், அந்தஸ்த்து, வரட்டு கௌரவம் இப்படியேதாவது..." அந்தக் கேள்வி சாரதா டீச்சரை அசர வைக்கிறது.

"தேவையில்லையப்பா..."

"அப்போ...என்ன தகுதி வேணும் டீச்சர்?"

"மனசு என்கிற தகுதி மட்டும் இருந்தாப் போதும்ப்பா..."

"ஸோ..காதலுக்கு மனசு வேணுமின்னு சொல்றீங்க... மாலதியிடம் பணமிருக்கு. அந்தஸ்திருக்கு, வரட்டு கௌரவமிருக்கு, ஆனால்... மனசிருக்கா டீச்சர்?"

'வசந்தனா இப்படியெல்லாம் பேசுகிறான்? வசந்தன் சாதுவாச்சே..' சாரதா டீச்சர் தடுமாறி குழம்பிப்போகிறார். ஆனால்... அந்த சாது மிரண்டு போயிருப்பது அவருக்குத் தெரியாது.

வசந்தனே தொடர்கிறான்.

"பணக்காரி மனசுல பணத்திமிர்தான் இருக்கும் டீச்சர். தவிர, மனசுன்னு எதுவுமே இருக்காது. அப்படியிருக்க... போயும், போயும் நான் அவளைக் காதலிப்பேனா டீச்சர்..?"

"நீ கடிதம் எழுதுகிறதாகவும் அவளே சொன்னாளே...."

வசந்தன் உதடு சுழித்துச் சிரிக்கிறான்.

"நான் கதை கவிதைதான் எழுதுவேன். கடிதமெல்லாம் எழுதமாட்டேன் டீச்சர். ப்ளீஸ்...எதையுமே நம்பாதீங்க டீச்சர்!"

"சீச்சி...நான் இதையெல்லாம் நம்புவேனா வசந்தன். நீ என் ஸ்டூடன்ட் ஆச்சே!" சாரதா டீச்சர் பெருமைப்பட்டுப் போவது அவர் முகத்தில் தெரிகிறது.

"அப்போ நான் போய் வரட்டுமா வசந்தன்?"

"டீச்சர்..."

"என்னப்பா?"

"இல்ல...இன்னைக்கு 'தினமுரசில்' என்னோட கதையொன்னு பிரசுரமாகியிருக்கு, பார்த்தீங்களா?" அவன் ஆர்வமாய்க் கேட்கிறான்.

"இதுவரையில பார்க்கையில்ல. உன்னோட கதையாச்சே... வீட்டுக்குப் போய்த்தான் பார்க்கணும். அதுசரி... கதையின் தலைப்பு என்னப்பா?"

வசந்தன் உடம்பு முழுவதும் பிரகாசமாகி... தெளிவாகச் சொல்கிறான்.

"அவள் நெஞ்சுக்குத் தெரியும்!"

(முற்றும்)

## குட்டிக்கதை

# பெண்ணுக்குப் பெண்ணே?

-ஷர்மிளா இஸ்மாயில்-



"பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்பார்களே அதே தான். அந்த எதிரி என் அம்மா!" அந்தப் பெண் யார்? முகம் தெரியாத அவளுக்காய்ப் பரிதாபப்பட்டாள் ரேணுகா. காரணம்? இன்றைக்குப் பெண் பார்க்கப் புறப்படுவதாய் ஏற்பாடு. ஒன்றிரண்டு பேரா போகிறார்கள் என்றால், அது தானில்லை! அம்மா, அம்மாவின் செல்லப் பிள்ளை - அதான் ரேணுவின் அண்ணா -மாப்பிள்ளையாகப் போகும் ரகு, அம்மாவின் அம்மா, அம்மாவின் அக்கா, அவரின் கணவர், அப்பா, அம்மாவின் தங்கை, அவரின் கணவர்....பட்டியல் இன்னும் நீண்டது. பாவம் அந்தப் பெண். இவர்கள் அனைவருக்கும் பிடித்துப் போக வேண்டும் அவள். நினைக்கவே மனசுக்குள் வெறுப்பு மண்டியிட்டது. ரேணு போவதையிட்டும் தவிர்ந்து கொள்ள நினைத்தாள்.

கண்ணாடி முன்னால் நின்று தலையை வாரிக்கொண்டிருந்தாள் ரேணு. "ஏய் ரேணு, பெண் பார்க்கப்போறதுக்கு நீ வரலியாமே?" அண்ணன் ரகு தொம்மென்று அவளது கட்டிலில் வந்து விழுந்தான். இல்லை உட்கார்ந்தான். தீர்க்கமாய்த் திரும்பிப் பார்த்தாள். அவளுக்கும் அவனுக்கும் இடையே ஐந்து வருட வித்தியாசம். வயதில் மட்டுமல்ல, குணத்திலும் தான். மென்மையான, கவிதைபோன்ற மனம் கொண்டவள் இவள். பிடிவாதம், முரண்டு உருக்கொண்டவன் அவன். அவனைச் சொல்லிக் குற்றமில்லை. எல்லாம் அம்மா கொடுத்த செல்லம். ஓ லெவல் பரீட்சையில் கோட்டை விட்டவன் விட்டவன் தான். பள்ளியையும் விட்டு விட்டான். அப்பாவும், அம்மாவும் அலட்டிக் கொள்ளவில்லை. பிள்ளைச் செல்வத்தைப் பிடித்து பிளேனிலேற்றி அனுப்பினார்கள். படிப்புபோனால் என்ன? பணம் வந்தால் போதும்.

ஐந்து வருடம் கழித்து மீண்டும் தாய்நாடு+வீடு திரும்பினான். அராபிய சாப்பாடு ஆளையே உருமாற்றியிருந்தது. கிட்டத்தட்ட சதாம் ஹுசைனின் தம்பி போல தடித்துப் போய் செழுமையாய் திரும்பினான். அம்மாவும் அப்பாவும் பூரித்து வெடித்தனர். மகனுக்குத் திருமணம் செய்து வைக்க சித்தம் கொண்டனர். அதன் விளைவு......

இது அண்ணன் பார்க்கப்போகும் ஆறாவது பெண்! முன்னைய ஐந்திலுமே எங்கேயாவது ஒரு குறையைக் கண்டு பிடித்துக் கழித்து விட்டார்கள். ரகுவுக்கு எதுவும் குறையாய்ப் படாவிட்டாலும்- நிச்சயம் கூடப் போகும் அம்மாவுக்கும், அவளின் உடன் பிறப்புக்களுக்கும் எங்கேயாவது ஒரு ஓட்டை தெரியும். உடனே 'ரிஜெக்ட்' பண்ணி விடுவார்கள். பெண் வீட்டில் போய் வெட்கமில்லாமல் வயிறு முட்ட சாப்பிட்டது லாபம். ரேணு ஒவ்வொரு முறையும் எரிந்து போனாள். இவள் சொல்லிக் கேட்பது யார்?


"அண்ணா, நீங்க செய்யிறது சரிதானா? நாளைக்கு என்னப் பெண் பார்க்க வர்றவங்க இப்படிச் செய்தா எங்க மனசு எவ்வளவு கஷ்டப்படும். அதுபோலத்தானே இதுவும். ஏன் இத்தனை பேர் கோஷ்டியா போய் பெண் பார்க்கிறீங்க? உங்களுக்குப் பிடிச்சா, வேற யார் என்ன சொன்னாலும் மனசுல போட்டுக்காம அந்தப் பெண்ணையே முடிக்கிறது தானே. அதவிட்டுட்டு இப்படியே ஒவ்வொரு பெண்ணையும் கழிச்சுட்டு வந்தா அந்தப் பெண் மனசு எவ்வளவு வேதனைப் படும்?" எரிகின்ற மனசைக் கொட்டினாள். வார்த்தைகள் சுட்டன போலும். மௌனமாகக் கேட்டவன் சீறினான். "நீ என்னடி எனக்குச் சொல்ல வர்றது? இஷ்டம்னா வா. இல்லாட்டி இரு. நாங்க புறப்படுறோம். பெரிய இவள்னு நெனப்பு." கத்திக் கொண்டே எழுந்து போனான்.

"ஏன் ரகு, ஏன் சத்தம்போடுற?" கேட்டவள் அம்மாதான். "இவள பாருங்கம்மா, பெரிய இவளாட்டம் புத்தி சொல்ல வாறா"...என்று தொடர்ந்தவன் ரேணுவின் வார்த்தைகளை அம்மாவிடம் ஒப்புவித்தான். அம்மாவின் முகத்தில் கோபம் தெறித்தது. "ஏன்-என் பையன் ராஜகுமாரனாட்டம் இருக்கான். அவனுக்கேத்த பெண்ணாப் பார்க்கறதில என்ன தப்பு?" அம்மா மூன்றாம் பேரிடம் கேட்பது போல ரேணுவிடம் கேள்வி கேட்டாள். ஓ.லெவல் கூட ஒழுங்கா பாஸ் பண்ண முடியாத ராஜகுமாரன்!

ரேணு மௌனமானாள். 'உங்க ராஜகுமாரனுக்குப் பெண் தேடி இன்னும் எத்தனை பெண்களின் மனச புண்படுத்தப் போறீங்களோ தெரியல.' மனசுக்குள் அழுதாள். வீட்டுக் கதவை அறைந்து சாத்தியபடி அத்தனை பேரும் வெளியேறி முன் நின்ற வாகனத்தில் அடைந்து கொண்டனர். மொத்தம் 12 பேர்! ஒரு பெண் பார்க்க டசின் பேர்கள்!! 'ஆண்டவனே, இந்தப் பெண்ணையாவது எல்லார்க்கும் பிடித்துப் போக வேண்டும். மீண்டும் பெண் பார்க்கும் படலம் தொடரவே கூடாது.' முகம் தெரியாத அந்தப் பெண் வீட்டுக்காரர்களை விடவும், மிகவும் உருக்கமாய் இறைவனிடம் இறைஞ்சினாள் இவள். பெண்ணுக்குப் பெண் எதிரி என்பது ரேணுவைப் பொறுத்தவரையில் பொய்யாகிப் போகிறதோ?

(உண்மை தானே?)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




சிறுகதை

"இதுதான் அருணா பழைய பாராளுமன்றம். முன்னுக்கு வைச்சிருக்கிற சிலையள் எல்லாம் பெரிய பெரிய தலைவர் மாருடையது." பாராளுமன்றக் கட்டிடத்தை பஸ் கடந்து கொண்டிருந்த போது அவர் தனது மகளுக்கு அதனைக் காட்டினார். முதன் முதலாகக் கொழும்புக்கு வந்த அருணாவிற்குத் தனித்தனியாக ஒவ்வொருவரைப் பற்றியும், விளங்கப்படுத்த முடியவில்லையே என சிறிது கவலையடைந்தார்.

"எங்களின்ரை உரிமைகளுக்கெல்லாம், குழி பறித்தது இப்பிடி ஒரு அழகான கட்டிடத்திலைதானோ. சிலைகளாயிருக்கிற ஒவ்வொருத்தரைப் பற்றிய ஒரு பக்கச் சரித்திரம் எனக்குத் தெரியும். சமூகக் கல்வி புத்தகத்திலை எழுதியிருக்கு. அதோடை இவையின்ரை மறுபக்கங்களும் தெரியும்."

"உனக்கெப்படித் தெரியும்?"

"இப்ப நாங்கள் பகலிலை மட்டுந்தான் படிப்பம். இரவிலை முத்தத்திலை ஏதாவது விளையாடுவம். இருளில் வேறு என்னதான் செய்யமுடியும்? மின்சாரமுமில்லை, மண்எண்ணையுமில்லை. நாங்கள் விளையாடி, முசுப்பாத்தி பண்ணிறது பெரியண்ணாவுக்குப் பிடியாது. அவர் எல்லோரையும் கூப்பிட்டு வைச்சுக் கதை கதையாச் 'சொல்லுவார்."

"அப்பிடி என்ன கதை கொண்ணர் சொல்லிறவர்?"

"பெரியண்ணாவின்னர 'ஸ்ரைலிலை' சொல்லிறதெண்டால்... இண்டைக்கோ..... நாளைக்கோ...இல்லாட்டில் இப்பவோ நாங்கள் செத்துப் போகலாம். அப்பிடி இருக்கு எங்கடை வாழ்க்கை. வீண் கதைகள் பேசி ஏன் பொழுதைக் கழிக்க வேணும். நாங்கள் பொது அறிவை வளர்க்கக் கூடிய மாதிரி ஏதாவது பேசுவம். சிறிது மூச்சு விட்ட பின்னர் அருணா தொடர்ந்தாள். தகப்பன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"விஞ்ஞானம் தவறாகப் பிரயோகிக்கப் படுகிறதிலையிருந்து அரசியல், கலை, இலக்கியம், அரசியலாளரின் அயோக்கியத் தனம், சரித்திரம், மலிவாப் போன மனித உயிர்வரைக்கும் எல்லாம் கதைப்பம். நாங்கள் கதைக்கும் சில விஷயங்கள் அம்மாவுக்கும் தாத்தாவுக்கும் பிடியாது..... விட்ட இடத்திலையிருந்து வருவம்... பெரியண்ணா சொல்லுவார் அரசியல் வாதியளிலை அனேகமானவை இரண்டாவது உலகமகா யுத்த காலத்து, அமெரிக்க இராணுவத் தளபதி 'லெஸ்லி க்ரூவ்ஸ்' மாதிரியாம்."

"ஏன் அவர் எப்பிடியானவராம்?"

"லியோ சிலார்ட் எண்ட விஞ்ஞானி தலைமையிலை ஒரு விஞ்ஞானிகள் குழு, அணுகுண்டின்ரை ஆபத்தை விளக்கி, அதுக்குப்பிறகும் ஜப்பானியர் சரணடையாது விட்டால் அணுகுண்டைப் பாவிக்கலாம், எண்டு ஒரு விண்ணப்பத்தை எழுதி, இந்தத் தளபதி மூலமாக ஜனாதிபதி ட்ரூமனிடம் சேர்க்கச் சொல்லிக் கொடுத்து விட்டவையாம். ஆனால் 'க்ரூவ்ஸ்' அதைக் கடைசிவரையும் ஜனாதிபதிக்குக் கொடுக்கவேயில்லை."

தகப்பன் இடைமறித்தார்.

"அதுக்கும் எங்கடை அரசியல் வாதியளுக்கும் என்ன தொடர்பு?"

"இல்லை......உங்களுக்கு விளங்கவில்லை...." அவள் சொல்ல தகப்பன் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

"தனிப்பட்ட ஒவ்வொருத்தரின்ரை விருப்பு, வெறுப்பிலை எத்தினை தீமைகள் நடக்குது. அந்தத் தளபதியின்ரை பிம்பங்கள்தான் எங்கடை அரசியல்வாதியள்."

பஸ்ஸின் 'கட கட' சத்தத்தை மேவி, அருணாவின் குரல் இருந்தது. அது புரிந்த போது, தகப்பன் பார்வையைப் படரவிட்டார். அருணா சொன்னவற்றை விளங்கிக் கொண்டவை போல சில முகங்கள்...... எதுவுமே புரியாதவை போல சில முகங்கள்..... அருணா எதனையும் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தாள். அடுத்த பக்க யன்னலூடாகக் கண்களை ஓடவிட்டவள்,

"ஓ! எங்களை ஆண்டவையின்ரை கொடியும், உலகத்தை ஆள நினைக்கிறவையின்ரை கொடியும் பக்கத்திலை பக்கத்திலை பறக்குது."

"சும்மா இரு."

"ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவம் தந்த சூத்திரம் தொடங்கி 'நீல்ஸ் போரி'ன் அணுக்கொள்கை, 'ருதர் போர்ட்'டின் 'அல்பா' சிதறல் பரிசோதனையோடை நிண்டிருந்தால் பரவாயில்லை. 'சாட்விக்' கின்ரை நியூட்ரன் கண்டுபிடிப்புத் தான் உலகத்தை உலுக்கிக் கொண்டிருக்குது."

"அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?" அருணாவின் அதிகப் பிரசங்கித்தனம் தகப்பனுக்கு எரிச்சலூட்டியதோ, என்னவோ கொஞ்சம் கோபமாகவே கேட்டார்.

"அதைப்பற்றித்தானப்பா உலகம் யோசிச்சுக் கொண்டிருக்கு.... முதலையின்ரை வாயுக்குள்ளை போய், பல் ஈறுகளுக்கு இடையிலையிருக்கிற அழுக்குகளை எடுக்கிற சின்னஞ்சிறிய குருவிக்கும், முதலைக்குமிடையிலை உள்ள புரிந்துணர்வு கூட மனிசருக்கு இடையிலை இல்லை. அதோடை இந்த இடையிலை பிறக்கிறவன் கூட ஆயுதத்தோடைதான் பிறக்கிறான். பயந்து நடுங்கும் அல்லது அதிர்ச்சிகளைச் சந்திக்கிற தாய்க்கு அரோக்கியமான குழந்தை பிறவாது எண்டது விஞ்ஞானம் கண்ட உண்மை. ஆனால் எங்கடை பகுதியிலை பிறக்கிற குழந்தையள் வீரத்தோடைதான் பிறக்குதுகள். அதுக்கு தாயின்ரை மனசின்ரை எங்கையோ, ஒரு இடுக்கிலை இன்னும் நம்பிக்கை இருக்கு எண்டதுதான் காரணம் எண்டு பெரியண்ணா சொல்லுவார்."

இவளை இப்பிடியே பேசவிட்டால் 'காபியஸ் கோப்பஸ்' தான் எனக்கு உதவிக்கு வரவேணும். கொழும்புச் சூழ்நிலை அப்படி. கதையை மாற்றுவதைத் தவிர வேறு வலியில்லை என்று தகப்பன் நினைத்துக் கொண்டார். படிப்புத் தவிர வேறு எதுவும் இந்தப் பத்து வயதுச் சிறுமிக்குத் தேவையில்லை, என வீட்டுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டார்.

"யாரம்மா, உனக்குக் கணித பாடம் படிப்பிக்கிறது?"

கேள்வியில் எந்த நகைச்சுவையுமில்லை. ஆனால் அருணா வாய் விட்டுச் சிரித்தாள். தகப்பன் தன்னைத் திசை திருப்புவது அவளுக்குப் புரிந்தது.

"அரவிந்தன் சேர்."

கதை திசை திரும்பியதில் தகப்பன் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"தமிழ்"

"மஞ்சுளா மிஸ். இந்தப் பிரச்சனையளுக்குப் பிறகு எங்கடை இலக்கிய விசயங்களிலையும், சிறிது வித்தியாசம் ஏற்பட்டிருக்கு எண்டு 'மிஸ்' சொல்லுவா. காதல் கத்தரிக்காய் பற்றி இப்ப எழுதிற ஆட்கள் குறைவு. அது இலக்கியத்தின்ரை தரத்தைக் குறைச்சுப் போடும் எண்டு சொல்லேலாது. ஆனால் நடைமுறையிலை இருக்கிற பிரச்சனையளை எழுதிறது ஒரு வரலாற்றுப் பதிவாகவும் இருக்கும்."

இவளைத் திசை திருப்ப முடியாது என்பதைத் தகப்பன் புரிந்து கொண்டார்.

"கொஞ்சம் பேசாமல் இருக்கிறியே"

"ஏனப்பா உங்களுக்குக் கோபம் வருது?"

"இங்கை கண்டபடி எதுவும் பேசக் கூடாது. பிடிச்சுக் கொண்டு போயிடுவாங்கள்." மிக மெதுவாகக் காதருகில் சொன்னார் தகப்பன்.

"ஏன் பேசாமல் இருந்தாலும் பிடிக்கினம் தானே. நீங்கள் இருக்கிற வீட்டில் அண்ணாவைப் பிடிச்சுக்கொண்டு போய் இப்ப மூண்டு நாள். அவர் வாய் திறந்து கதைக்கிறதில்லை."

எதுவுமே கேட்காதது போல் தகப்பன் வேறு திசையைப் பார்த்தபடி இருந்தார்.

பஸ் பம்பலப்பிட்டி சந்தியில் சிக்னலுக்கு நின்றது. சத்தமாகக் கதைத்தபடி நான்கு வெள்ளைத் தோல்கள் பஸ்ஸினுள் ஏறின.

"எங்கடை நாட்டிலை எங்களுக்கு இல்லாத சுதந்திரம் எங்கையோ இருந்து வந்தவனுக்கு. ம்..... நாங்கள் சொந்த நாட்டிலையே அகதியாகிற புதுமையான பிறவிகள்."

"சும்மா இரு."

"ஏனப்பா?"

"உன்ரை வயசுக்கு உது கூடிப் போச்சு. இந்த வயதிலை நீ நல்லாப் படிக்க வேணும். அதுக்குப் பிறகு மிச்சம்."

அமைதியானாள் அருணா.

தனக்குத் தெரியாத பல தகவல்களை இந்த வயதில் இவள் தெரிந்து வைத்திருக்கிறாளே என்ற பொறாமை அவரைக் கோபப்பட வைக்கவில்லை. இவற்றால் அவள் அனாவசியத் தொல்லைகளை ஏற்கவேண்டி வரும் என்ற நினைவுதான் மனதை அரித்தது.

'பனைக்கு மூத்திரம் பெய்து மேலும் பனையைக் கறுப்பாக்குவது, களவாக 'மாட்னிஷோ' பார்ப்பது, தலைக்கு எண்ணை வைக்க அம்மா கூப்பிட்டால் வீட்டைச் சுற்றி ஓடுவது...' அவருடைய பத்து வயது நினைவுக்கு வந்தது. ஆனால் இவள் அரசியல்...... யுத்தம்.... இலக்கியம்..... கலாசாரம்....அப்பப்பா மிக வேகமான ஓட்டம். சிறு பிள்ளைத்தனம் என்ற முகத்தை இவள் இழந்துவிட்டாளா?

இரண்டு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் விழுந்தன. நல்ல காலம் அவள் காணவில்லை.

அவளின் தலையை இதமாக வருடிக் கொடுத்தார். ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தவள், தகப்பனின் நிலையை ஓரளவு புரிந்து கொண்டவளாக....

"நாங்கள் எங்கையப்பா போறம்?"

"ஒரு படம் பார்க்கப் போறம்"

"அதுக்கு இவ்வளவு தூரம் வர வேணுமே? அங்கையெண்டால் பெரியண்ணா ஏச ஏச சின்னண்ணா வீட்டு முத்தத்திலை படம் போடுவான்."

"கிட்டடியிலை என்ன படம் பாத்தனி?"

"ரோஜா, மிஸிங் இன் அக்சன், யாத்ரா"

பஸ் நின்ற போது இருவரும் இறங்கிக் கொண்டனர். தியேட்டரினுள் நுழைந்த பின்பும் நீண்ட நேரமாக எதுவும் பேசவில்லை.

மணி அடித்தது....இரண்டாவது தடவையுமடித்தது. தியேட்டரை இருள் சூழ்ந்தது.

திரையில்....

அகர முதல எழுத்தெல்லாம்.....

ஊதுபத்திப்புகை......

திருவள்ளுவர் 'சிலோமோஷனில்' திரும்பினார்.

தகப்பனின் கையை இறுகப்பற்றினாள் அருணா.

"என்னம்மா?"

"மழை பெய்தால் இந்தப் பெரிய ரீவியை எங்கையப்பா வைக்கிறது?"

(யாவும் கற்பனை)

---

### -ஓர் இரவில்-

மழுங்கியது
கூர்பார்த்து
போடப்பட்டது
உறைக்குள்,

மனித நேயம்
கைது செய்து
தள்ளப்பட்டது
சிறைக்குள்,

முழு நிலவு
வளர மறுத்து
ஒளிந்து கொண்டது
பிறைக்குள்,

பிரார்த்தனைகள்.....
வேண்டுதல்கள்.....
ஜெபங்கள்.....
எல்லாமே-நாற்சுவர்
அறைக்குள்

வந்த இரவு
வழிதவறி
புகுந்து கொண்டது
கறைக்குள்,

இப்போதெல்லாம்
மனித
உயிருப்பது
துப்பாக்கி
ரவைக்குள்.

ஸ்ரீவரணி
வாழைச்சேனை.

### ஓர் கண்ணோட்டம்

மனிதம்
மரித்துக்
கொண்டிருக்கிறது.

இன்னும் சில
ஆண்டுகளில்
மண்வாசனை
வீசவேண்டிய-இப்
பூமி எங்கும்
மனித பிணவாசனை
வீசக்கூடும்.

கரைந்தோடும்
செங்குருதி
சேர்க்கையினால்
கடல் கூட
நிறம்மாறக்கூடும்.
காலம் இப்படியே
கடக்குமானால்
நாளை-நாடே
காடாகக் கூடும்.

ஐயறிவு விலங்கினமே
நா(கா)ட்டை
ஆட்சி செய்யும்
நிலைவரக்கூடும்.

அதன் பின்னாவது
நாட்டில்
அராஜகம் ஒழிந்து
அமைதி
பிறக்கக்கூடும்.

செல்வி. சுப்பிரமணியம் வாணீஸ்வரி
கலஹா.

### எமது வேண்டுகோள்

நாங்கள்
அகதிக் கற்கள்,
சூரிய நெருப்பால் உலர்த்தப்பட்டு
தரையில் அடுக்கப்படுகின்றோம்.

மனக்கோட்டைகள்
சீமெந்துக் கலவையாய்
சிதைந்து போகின்றன.

நாங்கள்
கோபுரம் கேட்கவில்லை,
ஒழுங்கான
நான்கு சுவர்களைத்தான் கேட்கின்றோம்.

-மக்கொன லின்னாஸ் சௌக்கத்-



### அழிந்து கொண்டிருக்கும் பிரதேசம்.....

அழிந்து கொண்டிருக்கும்
அந்த-
பிரதேசத்தில்
தினமும்-
ரத்தாபிஷேகம்!

மலிந்து விட்ட
ஆயுதத்தால்,
உயிர்கள்...
மரணத்தின் விளிம்பிலே....

அகிம்சை அழிந்து
ஆயுத நீரூற்றலால்,
அராஜகம்
வேரூன்றியுள்ளது.....

இருபதாம் நூற்றாண்டில்
எங்குமிலா விலைவாசி
உயர்ந்திட்ட,
ஊரது!

தலை சிறந்த,
அப்பிரதேசம்
தணிக்கையானது
ஏன்?....

வேட்டுக்கள்,
தீட்டுவதால்
கிடைக்குமா?
வேண்டுவது...!

தொடர்ந்து வரும்
தோட்டாக்கள்
சாதிப்பது எதுவுமில்லை

மண் வாசனை
மறந்த,
நாசிகளில்
இரத்த நெடி எப்போதும்!....

மரண ஓலங்கள் தான்
மழலைகளின்,
தாலாட்டு இப்போது...

விடியாத இரவாய்...
முடியாத கதையாய்.....
யுத்தங்கள்,
தொடர்கின்றன....!

அழிந்து கொண்டிருக்கிறது
அப்பிரதேசம்!

யாழ்-அ. மர்சூன்
கல்கிசை.

## தேன் கிண்ணம்

### சாவை நினைத்து....

நீ உடைவதில்
எனக்கு
உடன்பாடில்லை!

ஏராளம் இதயங்கள்
நாளும் நாளும்
நொறுங்கிப்போகும்
நமது தேசத்தில்
உனது உடைவை நீ
நியாயப்படுத்துவதில்
நியாயமில்லை!

இது-
குற்றமே செய்யாத
சுற்றவாளிகளும்
தண்டனை வாங்கும்
தேசம் நண்பனே!



மதிய உணவிற்காய்
சந்தைக்குப் போனவன்
வீடு திரும்பாமல்
செத்துப் போனான்!

அவன் செய்த குற்றம்
சந்தைக்குப் போனதா?
சாப்பிட நினைத்ததா?

அப்பாவி மனிதனை
கொல்லும்
குண்டுகளைத்தானோ
உலக விஞ்ஞானிகள்
உற்பத்தி செய்கிறார்கள்!?

நீயும் நானும்
குண்டுகள் பாய்ந்து
ஒரு நாள் சாகலாம்!
அதற்காய்
சாவை நினைத்தே
சாவது சரியா?

இல்லை;
நீ உடைவதில்
எனக்கு
உடன்பாடில்லை!

எஸ். புஸ்பானந்தன்

### ஹைக்கு மாதிரி

செத்துப் போகிறேன்
மன்னிப்புக் கொடு!
எண்ணை முடிந்த விளக்கு.

ஆலம்குளத்தூர்
ரோஷான் ஏ. ஜிப்ரி.

### நானும் உன் ஞாபகங்களும்!

உன் ஞாபகங்களின்
சல சலப்புக்களினால்
சஞ்சரித்துப்
போயிருக்கிறேன்.

உன் ஞாபகங்களினால்
என்
இதய பிரபஞ்சத்தில்
சம வெளிகளை விட
சஹாராக்களே
அதிகம்.

நான்
உன் வரவை
எதிர்பார்த்து
வரவில்லை
ஆனாலும்
என்னுடைய
வரவுகள் யாவும்
உனக்காகத்தான்....

உன்னை
சந்திக்கும் போதெல்லாம்
சத்தியமாய்
இருதயம்
இடைவெளி
இல்லாமலே
துடிக்கிறது
சுவாசங்கள் கூட
ஒட்சிசனை
நிராகரித்து விட்டு
உன் பெயரைத்தான்
நிரப்பிக் கொள்கிறது.

கிழித்துப் போட்டாலும்
உன் நினைவுகள்
என் மனதோடு
சிரித்துப் பார்க்கிறது
மறக்க முயன்றாலும்
மறதிகளிலேயே
உன் ஞாபகங்கள்
மறு பிறவி எடுக்கிறது.

ஷகி....
எத்தனை இரவுகள்
அழுது கொண்டிருப்பேன்
எத்தனை இரவுகள்
எரிந்து கொண்டிருப்பேன்.

..............................

என்னைச் சற்றி
வேதனைகள் மட்டும்
வெளிச்சம் போட்டு
உட்கார்ந்து இருக்கிறது.
இருந்தும்
அந்த
சோகப்படுக்கையில்
இன்னமும் இன்னமும்...
நான் சோர்ந்து விடாமல்
இருப்பது
உன் சத்திய
ஞாபகங்களை
தெளிய வைக்கத்தான்.....

நிலவின் ரசிகன்- பொத்துவில்.



### அவளுக்காய் வாழுகிறேன்!

குளிரோடக் கூடுகின்ற கோதை!- அவள்
குறும்பு மொழி எனக்கூட்டும் போதை!
களிப்பூட்டும் அவள் பேசும் பேச்சு!- காமக்
கலவியிலே அனல் வீசும் மூச்சு!
விழி வீசி எனைக் கொல்லும் வஞ்சி!-அவள்,
விருப்புடனே நிதமென்னைக் கொஞ்சி;
ஒழியாத இன்பத்தைத் தந்தாள்!- பூவில்
உயர்கவியென் உள்ளத்தை வென்றாள்!
தனமென்று குன்றுகளைத் தாங்கும்!- அவள்
தருசுகத்துக் கென்னிதயம் ஏங்கும்!
மனம் கொண்ட மங்கை மனம் வெள்ளை!- எழில்
மனைவியவள் மடியினில்யான் பிள்ளை!
பளிச்சென்னும் பல்வரிசை முத்து!-என்றும்
பாவையிவள் தானெனக்குச் சொத்து!
குளிர்கால நோய்க்கு இவள் மருந்து!-நான்
குதூகலித்துக் கொண்டாடும் விருந்து!
கண்ணிரண்டும் கயல்மீனின் சாயல்! இதழ்
கற்கண்டு சர்க்கரையின் தோயல்!
பெண்குலத்தின் அழகிலிவள் ரதிதான்!-எனின்,
பிரியமுள்ள இவள் வதனம் மதிதான்!
குறங்கு நிகர் வடிவந்தான் வாழை!-நாளும்
குமரிக்காய் வாழுகிறேன் காளை!
உறவினிலே எனை மறந்து போவேன்!- இந்த
உத்தமியாள் இலையென்றால் சாவேன்!

அ. கௌரிதாசன்.

### தூது செல்லாயோ!

மாலை மலரும் வான்மதியே!
மங்கை இவளின் நிம்மதியே
மறைந்து தேய்ந்து செல்கிறதே!
மனம் தன்னை பறித்துவிட்ட
மன்னன் அவனை காணாது
மலையகக் கன்னி இங்கே
மதிமயங்கி ஏங்குகின்றாள்!

மண்ணில் ஊரார் துயிலும் நேரம்
மன்னன் அவனின் காதின் ஓரம்
மெதுவாய் நகர்ந்தே சென்றிடுவாய்
மெல்ல சேதி சொல்லிடுவாய்!

பெண்மை தனிமையில் தவிக்கிறதே
துணையை தேடி துடிக்கிறதே!
ஊணும் உறக்கமும் பிடிக்குதில்லை
உறவு சொல்லவும் யாருமில்லை
மதியே நீயும் வந்திடுவாய்
மங்கை எனக்கு உதவிடுவாய்!

மனதின் உதய சேதியைத்தான்
மகிழ்வாய் உடனே எத்தி வைப்பாய்!
நேசம் வைத்த நெஞ்சமதை
நெருப்பாய் தனிமை சுடுகிறது
இதமாய் துணையும் வந்திடவே
இதய தூதை சேர்த்திடுவாய்!

கலைமலர் ஜொஹரா ஹுஸைன்
தியத்தலாவ.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கவர்ச்சி இல்லாத படம் உப்பற்ற பண்டம்!

## ஐஸ்வர்யா சொல்கிறார்

**ஐஸ்வர்யாவிடம் முரசு வாசகர்கள் கேட்ட கேள்விகளும் அவர் சொன்ன பதில்களும். சென்ற வாரத்தின் தொடரான பகுதி இது.**



★ உங்கள் தாயார் லட்சுமியோடு மீண்டும் சேருவீர்களா?

மு.சங்கர்-நீர்கொழும்பு.

அதற்கு எந்த அவசியமும் இல்லை. நான் நான்தான். எனக்கு அவரது துணை தேவைப்படாது.

★ கவர்ச்சியாக நடிப்பது இமேஜ் குறைய வைக்குமா?

என். மர்வான்-புத்தளம்.

என் விடயத்தில் அப்படி நடக்கவில்லை. காட்சிகளுக்கு ஏற்றவாறு கவர்ச்சி இல்லையென்று வையுங்கள். உப்புச் சப்பற்ற சமையல் போலத்தான் எமது பாத்திரமும் இருக்கும்.

★ மதம் மாறியது ஏன்?

ஆர்.மீனலோயினி-கண்டி.

தன்வீரை திருப்தி செய்வதற்காக நான் மதம் மாறியதாக நினைக்காதீர்கள். என் மனதுக்கு பிடித்தது. அதனால் நானே சுயமாக முடிவு செய்து மாறினேன்.

★ திருமணமானால் மார்க்கட் குறையும் என்கிறார்களே?

அ. ரகுதேவன்-நுவரெலியா.

அப்படியா சொல்கிறார்கள்? திருமணத்தால் எனக்கு நல்ல விளம்பரமும் கிடைத்துவிட்டது. என் மார்க்கட் எப்போதும் போலத்தான் இருக்கிறது.

★ தங்கள் தாயார் அரசியலில் இணைந்து விட்டார். நீங்களும் அரசியலுக்குள் நுழைவீர்களா?

ஆர்.எம்.வாகீட்-கல்முனை.

அது அவரது சொந்த முடிவு. அரசியல் பற்றியெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது.

★ ரசிகர்கள் உங்கள் அழகை இரசிப்பதில் சந்தோசப் படுவீர்களா?

சி.சர்வானந்தன்-மட்டக்களப்பு.

இரசிக்கக்கூடிய அழகு இருப்பதால் பெருமைதானே! நிச்சயமாக சந்தோசப்படுகிறேன்.

★ 'உள்ளே வெளியே' படத்தில் கவர்ச்சி அதிகம் என்கிறார்கள்?

என். இலியாஸ்-திருமலை.

கதைக்கு எவ்வளவு கவர்ச்சி தேவை என்பதை தீர்மானித்தவர் பார்த்திபன் ஸார். அவர் சொன்னபடி நடித்தவள் நான். என்றாலும் என் அபிப்பிராயப்படி தேவைக்கு ஏற்ற அளவு கவர்ச்சி இருந்ததால்தான் படம் வெற்றி பெற்றது.

(வரும் வாரமும் வரும்)



# குத்தரித்த கடி ஜோக்ஸ்

**அவர்**- குழந்தைகளுக்கு டிக்கெட் வாங்க வேண்டுமா?
**மற்றவர்**- பன்னிரண்டுக்கு மேல் என்றால்தான் வாங்க வேண்டும்.
**அவர்**- நல்லது என்னுடன் ஏழு குழந்தை கள்தான் வருகின்றனர்.

•

**ஊழியர்**- இந்த மாதம் என் சம்பள பணத்தில் பத்து ரூபாய் குறைகிறதே.
**முதலாளி**- போன மாதம் பத்து ரூபாய் அதிகம் இருந்தது அல்லவா, அப்போது ஏன் சொல்லவில்லை.
**ஊழியர்**- ஒரு முறை தவறு செய்தால் மன்னிக்கலாம். மீண்டும் தவறு செய்தால் எப்படி?

•

**கடன் கொடுத்தவர்**- நீங்க கொடுக்க வேண்டிய கடனை வாங்க நடையாய் நடந்து என் செருப்பே தேய்ந்து விட்டது.
**கடன்வாங்கியவர்** - கவலைப்படவேண்டாம். உங்கள் வீட்டுக்கே குடிவந்துவிடுகிறேன்.

•

**அவர்**- உங்கள் வீட்டை வாங்கலாம் என்று நினைக்கிறேன். அதில் ரிப்பேர் ஒன்றுமில்லையே?
**இவர்**- அஸ்திவாரத்தை மட்டும் மாற்றிப் போட்டால் போதும். வேறு ஒன்றுமில்லை.

•

**ஒருவர்**- வீட்டு வேலைக்கு ஆள் வேண்டும் என்று சொன்னீர்களாம். என்ன கொடுப்பீர்கள்?
**நீதிபதி**- (ஏதோ நினைவில்) அதிக பட்சம் ஆறுமாதம் அல்லது பத்தாயிரம் அபராதம்.

•

**நீலா**- அம்மா அதைக் கீழே போட்டாள் அது உடையவில்லை. என்ன?
**மாலா**- கோலம்.

•

**ரகீம்**- புதிதாக ஒருவர் நீச்சல் குளத்தில் நீந்துவதற்கு முக்கியமாக இருக்க வேண்டியது என்ன?
**நஜீம்**- தண்ணீர்.

•

**நீலா**- அந்த வீட்டில் நுழைந்த திருடன் எதையும் திருடாமல் சென்றுவிட்டானாமே அது ஏன்?
**மாலா**- அது அவனது சொந்த வீடாக இருக்க வேண்டும்.

•

**ரகீம்**- அது எல்லோருக்குமே பிடிக்கும். எது?
**நஜீம்**- ஜலதோசம்.

•

சிறு விளம்பரம்



நவராத்திரி விழா
சிறப்புற நடத்த வேண்டுமா?
எம்மிடம் நாடுங்கள்
கொலு பொம்மைகள்
சுவாமி சிலைகள்
எம்மிடம்
விற்பனைக்குத்
தயாராகவுள்ளன.
அன்பர்கள், வாடிக்கையாளர்கள்,
வியாபாரிகள் எம்மிடம்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள உடன் நாடவும்.
சுவாமிப் படங்கள் உங்கள் விருப்பறிந்து குறித்த நேரத்தில்
உறுதியான பிரேம் இட்டுத் தரமாகத் தரப்படும்.
உங்கள் திருப்தியே எங்கள் இலக்கு
உடன் நாடவும்.

| NALINI PICTURE PALACE | NALINI STORES |
| --- | --- |
| NO.102, Sea Street | No.70, Sea Street |
| Colombo-11 | Colombo-11 |
| T.P: 329065 | T.P:435492 |

## அருகில் இருக்கும் தூரம்

## இலக்கிய நயம்

**தமிழகக் கவிஞர் அப்துல் ரகுமான். இலக்கியங்களுக்குள் மூழ்கி முத்தெடுத்து அதை நாமும் இரசிக்க நயமாகத் தருபவர். இரசியுங்கள். சுவையுங்கள். சுகம் காணுங்கள்.**

முதன் முதல் கவிதை எழுதப் பேனாவை எடுக்கும் இளைஞன் பெண்ணைத்தான் வருணிக்கிறான். கேட்டால் 'அவள் கவிஞன் ஆக்கினாள் என்னை' என்கிறான்.

பெண்ணை வருணிப்பது அப்படி ஒன்றும் கிள்ளுக்கீரை வேலை அல்ல. வருணனை வலைக்குள் சுலபமாக அகப்படும் மீன் அல்ல அவள்.

வார்த்தைகளால் அவளைப் பிடிக்க முயல்வது வெளிச்சத்தைக் கைப்பிடிக்குள் பிடிக்க முயல்வது போலத் தான். மடக்கிய கைக்குள் இருள்தான் இருக்கும். வெளிச்சம்- வெளியே நகைத்தபடி!

அவள் வார்த்தையைவிடப் பெரியவள்; அர்த்தத்தை விட ஆழமானவள். அவள் எடைகளை ஏமாற்றும் கனம்; விடைகளைத் திகைக்கவைக்கும் வினா; விளக்குகளின் முகத்தில் கரி பூசும் புதிர்!

பழைய புலவர்கள் அவளை வருணிப்பதற்கு ஒரு சுலபமான முறையை வைத்திருந்தார்கள், பாதாதி கேசம் அல்லது கேசாதி பாதம். கருநாகம், நிலா, கயல், பவளம், முத்து, சங்கு, மூங்கில், மலை, கொடி, நீர்ச்சுழி, வாழை, தேர்த்தட்டு, வரால் என்று வரிசையாக ஒவ்வோர் உறுப்புக்கும் ஒரு 'ரெடி மெட்' உவமை. அதுவும் அவளுடைய வெளி வடிவத்தை மட்டும் பிடிப்பதற்கு இந்தப்பாடு. மனத்திரையில் இவைகளை வரைந்து பார்த்தால் ஒரு 'ப்ராங்கென்ஸ்டீன்' எழுந்து வந்து பயமுறுத்தும்; அல்லது ஒரு 'கார்ட்டூன்' தோன்றி நகைக்கச் செய்யும்.

பிரெஞ்சுக் குறியீட்டு இயக்கத்தின் தலை சிறந்த கவிஞர் மலார்மே, வருணிப்பதற்கு அருமையானதொரு வழியைக் காட்டுகிறார்; "பொருளை வரையாதே; பொருள் ஏற்படுத்தும் விளைவை வரை." (Paint, not the thing, but the effect that it produces.)

ஒரு பொருள் ஏற்படுத்தும் விளைவுகளைச் சொல்லிவிட்டால் அந்த விளைவு உணர்வு களை அடைகிற வாசகன் அவற்றின் வெளிச்சத்தில் அந்தப் பொருளை அதன் சகல பரிமாணங்களோடு தரிசித்துவிடுவான். அற்புதமான உத்தி இது.

பழைய புலவர்களில் கூட இந்த உத்தியைத் தெரிந்த சிலர் இருந்திருக்கிறார்கள்.

**ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ?**
**பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்!**

என்று இரண்டே வரிகளால் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையின் வசிய வனப்பை அற்புதமாக எழுப்பிக்காட்டி விடுகிறார்.

**'உள்ளிய வினை முடித்தன்ன இனியோள்'**- நினைத்த செயலை முடித்தாற் போன்ற இனிமையை அழகாகச் சொல்ல இளங்கீரனாருக்குத் தெரிந்திருக்கிறது.



'களைத்த உடலுக்குத் துயிலைப் போன்று இனியவள்' என்று தாகூருக்கும் இப்படிச் சொல்லத் தெரிகிறது.

நவீன காலத்து எழுத்தாளர்கள் இன்னும் ஆழமாகச் செல்லுகிறார்கள்.

"வார்த்தைகளால் அவள் வனப்பை வருணிக்க முடியாது. வேண்டுமென்றால் அதை வயலினில் வாசித்துக் காட்டலாம். அதுவும் தன் ஆன்மாவை அறிந்திருப்பது போல் அந்தக் கருவியை அறிந்த ஒருவனால் மட்டுமே வாசித்துக் காட்ட முடியும்." என்று தம் கதாநாயகி ரட்டாவை வருணிக்கிறார் மாக்ஸிம் கோர்க்கி.

லா.ச.ராமாமிருதம் தம் கதாநாயகியை 'வாசித்தே' காட்டிவிடுகிறார். "வீணையின் ஸ்வரக் கட்டுகளை விருதாவாய் நெருடிக் கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு வேளையின் பொருத்தத்தால் ஸ்வர ஜாதிகள் புது விதமாய்க் கூடி ஓர் அபூர்வ ராகம் ஜனிப்பது போல, அவள் என் வாழ்க்கையில் முன்னும் பின்னுமில்லாது முளைத்தாள்" என்று அவரால் மட்டுமே முடிகிற விதத்தில் அவர் சொல்லுகிறபோது எதிரே ஒருத்தி அவளுடைய சகல அதிசயங்களோடும் முன் தோன்றி முறுவலிப்பதைப் பார்க்க முடிகிறது.

புதுக் கவிதையாளர்கள் மூழ்கும் ஆழமோ நம்மைத் திக்கு முக்காடச் செய்கிறது. ஆங்கிலப் புதுக் கவிஞர் ரோஜர் மக்ஃப்பூ (Roger Mcgough) தம் காதலியை வருணிக்கிற விதம் பிரமிப்பூட்டுகிறது.

நள்ளிரவுத் தங்க மீனின்
அமைதிக்கு இடையே
பூனையின் நகக்கால் நீ

சாலை விபத்துக்கு
அருகில் கிடக்கும்
பொம்மைக் கரடி நீ!

குழந்தைகளைக் கொல்பவளின்
வாழ்க்கையில்
இழந்த நாள் நீ!

மேகங்கள்

ரத்தத்தை அழுவதற்கு முன்
பூவிதழ் மீதிருக்கும்
பனித்துளி நீ!

முள் கம்பியில் சிக்கிப்
போருக்கு எதிராகக்
கூக்குரலிடும் காற்று நீ!

வங்கி விடுமுறைக் காலையில்
மணலில் படிந்த
முதல் பாதச் சுவடு நீ!

காதலியிடம்- பெண்ணிடம் வசீகரம் மட்டுமா? பயங்கரமும் இருக்கிறது. பேதமை மட்டுமா? சூழ்ச்சியும் இருக்கிறது. கருணை மட்டுமா? கொடூரமும் இருக்கிறது. நியாயம் மட்டுமா? அநியாயமும் இருக்கிறது. சாதாரணம் மட்டுமா? அதிசயமும் இருக்கிறது. வெளிப்படை மட்டுமா? மர்மமும் இருக்கிறது. அருள் வடியும் உமையும் அவள்தான்; கபால மாலை சூடி கோர நர்த்தனம் ஆடும் காளியும் அவள்தான்.

மக்கஃபின் படிமக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு பார்த்தால் அவளுடைய குணங்களின் மொத்த வடிவமும் முப்பரிமாணம் கொண்டு சமீபித்து பிரமிப்பூட்டுகிறது.

கவிஞர் இதோடு நிற்பதாக இல்லை. மூச்சுத் திணறும் ஆழத்தில் மேலும் மூழ்குகிறார்; காதலியை, 'நீ தூரம்' என்கிறார். இப்படிச் சொல்லுகிற புதுமையே நம்மைத் திகைப் பூட்டிச் சிலிர்க்கச் செய்கிறது. எப்படிப்பட்ட தூரம்? அவர் சொல்லுகிறார். இதயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

ஹிரோஷிமாவுக்கும் கல்வாரிக்கும்
இடையிலுள்ள தூரம் நீ!
தாயின் முத்தங்களால் அளக்கப்படும் தூரம்.

(கல்வாரி-இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம்)

விபத்துக்கும் தொலைபேசிக் கூண்டுக்கும்
இடையிலுள்ள தூரம் நீ!
இதயத் துடிப்புகளால் அளக்கப்படும் தூரம்

அதிகாரத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும்
இடையிலுள்ள தூரம் நீ!
அரைக் கம்பக் கொடிகளால் அளக்கப்படும்
தூரம்.

உனக்கும் எனக்கும்
இடையிலுள்ள தூரம் நீ!
கண்ணீரால் அளக்கப்படும் தூரம்!

எளிமையாகத் தெரிகிற பெண் உண்மையில் எவ்வளவு புதிராக இருக்கிறாள்! அருகில் இருப்பது போல் தெரிகிறவள் உண்மையில் எவ்வளவு தூரத்தில் இருக்கிறாள்!

உணர்வு ஆழம் காண முடியாத பெருங் கடல். சிலர் அதன் கரையிலேயே நின்று கொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள். சிலர் படகுகளில் சென்று இதன் மேற்பரப்பில் ஒரு பகுதியை மட்டும் பார்த்துவிட்டு வருகிறார்கள். சிலருக்கு மட்டுமே மூச்சடக்கி அதன் ஆழத்தில் மூழ்கி அற்புதங்களைக் கண்டு சிலிர்க்க முடிகிறது.

புதுக்கவிதை, பழைய மரபுக் கவிதை யிலிருந்து எப்படி வேறுபடுகிறது? பழைய கவிதையை விடப் புதுக்கவிதை அப்படி என்ன சாதித்து விட்டது? என்று விஷயம் தெரியாமல் கேட்பவர்களுக்கும் வாய்ப்பாக மக்ஃபின் இந்தக் கவிதையைக் காட்டலாம்.

•••

## சிந்தியா பதில்கள்

எம்.ஏ.நிஸானா-குருநாகல்.

மாற்றம் தேவை என்பதை ஆட்சியாளர்களே ஒப்புக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

•

ஹலோ சிந்தியா-மறு உலகம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

கைரூன் நிஸா அஸீஸ்-கம்பொல.

அப்படி ஒரு உலகம் இருக்கிறதா என்ன? இருந்தால் நாம் இருக்கும் உலகத்தை விட ஒன்றும் மோசமானதாக இருக்காது என்றுதான் நினைக்கிறேன்.

### கவலை இல்லாத மனிதன் இருப்பது எங்கே?

டியர் சிந்தியா.
வெளிநாடுகளில் நம்மவர்களின் அகதி வாழ்க்கை பற்றி...?

செல்வன். அ.சுரேந்திரன்-புத்தளம்.


சொந்த பந்தங்களைப் பிரிந்து மனதில் வேதனைத் தீ எரிவது ஒரு புறம் இருக்க. இப்போது அங்குள்ள இனவாதிகள் அவர்களது உடல்களையுமல்லவா எரிக்கிறார்கள். தெருவில் கிடக்கிறது அவர்கள் வாழ்க்கை.

•

தற்போது கொழும்பில் எம்.ஜி.ஆரின் திரைப் படங்களுக்கு மவுசு அதிகரிப்பதன் காரணம்?

ரமிகம ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

புதிய படங்களில் இல்லாத ஒன்று அது.... ஏதோ.... அவர் படங்களில் இருக்கிறது. அதை அறியாமல் அல்ல. அறிந்து கொண்டதால் இரசிகர்கள் மொய்க் கிறார்கள்.



டியர் சிந்தியா. குஷ்பூ என்னைப் பார்த்து ஐ.லவ்.யூ என்கிறார். அதைப் பற்றி?

எம்.ராசிக்-கொழும்பு-12.

அது உம்மைப் பார்த்து அல்ல, கமராவைப் பார்த்து. கனவுகள் ஜாக்கிரதை.

•

எங்கள் நாட்டின் கல்வி நிலைமை பற்றி உங்கள் கருத்தென்ன?

•

ஒரு பிரதிநிதிக்கு மூளையில் கோளாறாமே உண்மையா?

வி.நவநீதன்-கொழும்பு-11.

உண்மைதான். கோளாறு அவர் மூளையில் மட்டுமல்ல நவநீதன். நமது அரசியலிலும்தான். தமிழர்கள் எல்லோருக்கும் பைத்தியம் பிடித்துவிடாமல் இருக்க பிரார்த்திப்போம்.

•

கவலையே இல்லாத மனிதனை எங்கே காணலாம்?

ஏ.எம்.இப்திகார்-புத்தளம்.

கருவறையில்.

•

முகம் பளபளப்பாக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

வி.நிரஞ்சலா தேவி-பதுளை.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும். மனம் உற்சாகமாக இருக்க வேண்டும். மேலும் தகவல் பெற லேடீஸ் ஸ்பெசலை தொடர்ந்து படிக்க வேண்டும்.

•

வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் என்கிறார்களே இது உண்மையா?

வி.சுரேஸ்கன்னா-மட்டக்களப்பு.

போராட்டம்தான். வாழத் தெரிந்தவர்கள், வரும் பிரச்சனைகளைச் சந்தித்து எதிர் நீச்சல் போடத் தெரிந்தவர்கள் ஜெயிக்கிறார்கள்.

•

பிரச்சனை இல்லாத நாடு இருக்கிறதா?

முகமட் ஹனீபா-மூதூர்.

இல்லை. இலங்கையில்தான் பிரச்சனை இல்லை என்று எவராவது சொல்லிவிடுவார்களோ தெரியவில்லை.

•

குஷ்பூ-ரோஜா-கஸ்தூரி-நந்தினி ஆகிய நடிகை களில் அதிகம் கவர்ச்சியுடன் நடிப்பவர் யார்?

கே.முரசொலி மாறன்-அக்கரைப்பற்று-9

போட்டி சூடாக நடக்கிறது. பொறுத்திருந்து பார்க்கலாம்.

•

புரட்சிக் கலைஞர் நடித்த 'கப்டன் பிரபாகரன்' இன்னும் ஏன் எமது திரையரங்குகளில் திரையிடப் படவில்லை.

எஸ்.மனோ-அக்கரப்பத்தன.

திரையரங்கம் சென்று திரும்பும் போது, சிறை யரங்கம் செல்லும் நிலை உங்களுக்கு ஏற்படுவதைத் தடுக்கவாக்கும்! இன்னொரு விசயமும் கேளும், யாழ்ப்பாணத்திலும் அப்படத்திற்கு தடையாம்.

# அரசனால் இழந்ததை அம்பாள் தந்தாள்



நீலகண்ட தீட்ஷிதர் திருமலை நாயக்க மன்னரிடம் மந்திரியாக இருந்தவர். மிகப்பெரிய ஞானி, மீனாட்சி தேவியின் பரம பக்தர். மன்னனே வந்து வணங்கும் கௌரவத்தோடு வாழ்ந்தவர்.

ஒரு சமயம் சிற்பி ஒருவர் மதுரை மஹாலில் பட்டத்தரசியின் சிலை வடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, சிலையின் தொடைப்பகுதியில் சில் பெயர்ந்து பின்னம் ஏற்பட்ட வண்ணமே இருந்தது. அங்கு வந்த தீட்ஷிதர் தன் ஞானத்தின் மகிமையால் பட்டத்தரசிக்கு இப்படித்தான் இருக்கும் இப்படியே விட்டு விடுங்கள் என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

ஆனால் இது தெரிந்த மன்னன் மனதில் சந்தேகப் பேய் புகுந்தது. "தீட்ஷிதரைக் கூட்டிக் கொண்டு வா" என்று ஒரு காவலனுக்குக் கட்டளையிட்டார்.

காவலன் தீட்ஷிதரின் மாளிகைக்குப் போனான். தீட்ஷிதர் பூஜையில் இருந்த நேரமது. இப்படி ஒரு அழைப்புப் புதியது. தானே நாடி வருவது என்பது தான் இதுவரை மன்னன் நடந்து வந்த முறை. கண்மூடி யோசித்தார் தீட்ஷிதர். புறக்கண் மூடிய நிலையில் அகக்கண் திறந்தது. அதில் மன்னன் தன் கண்ணைக் குருடாக்கத் திட்டமிட்டிருக்கும் வஞ்சக எண்ணம் புரிந்தது.

நிதானமாக கற்பூர ஆராத்தி செய்து பூஜையை முடித்தார். அந்தக் கற்பூரத்தையே எடுத்துத் தன் இரண்டு கண்களிலும் வைத்துக் கொண்டார்.

"காவலனே, மன்னன் எனக்கு என்ன தண்டனையை விதிக்க எண்ணியிருந்தாரோ, அந்தத் தண்டனையை நானே எனக்கு விதித்துக் கொண்டு விட்டேன் என்று சொல், இப்போது நீ செல்."

தீட்ஷிதர் குரல் ஒரு அசரீரியைப் போன்று அமானுஷ்யமாக, மிக மிக அமைதியாக ஒலித்தது. அதில் வலி தெரியவில்லை. எரிச்சல் தெரியவில்லை.

புறக்கண்கள் பொசுங்கிய நிலையில் அகக்கண்கள் பேரொளி பெற்றன. அம்பிகை அற்புத அழகோடு அங்கே தரிசனம் கொடுத்தாள்.

அந்த அழகினைத் தேவியின் பாதம் தொடங்கி திருமுடி முடிய தீட்ஷிதர் வர்ணிக்கத் தொடங்கினார். இதுவே 'ஆனந்த சாகரஸ்தவம்' என்று வடமொழி இலக்கியத்தில் தனிப்பெருமையோடு இன்று பக்தியை வளர்த்தபடி விளங்குகிறது.

தேவியின் திருக்கண்களை இவர் வர்ணிக்கும் போது இவரது அவிந்த கண்கள் மீண்டும் ஒளியைப் பெற்றன.

ஆம், அரசனால் இழந்ததை அம்பாள் தந்தாள்.

நடந்ததை அறிந்து தன் அறியாமையை நொந்து, மன்னன் விரைந்தோடி வந்து, தீட்ஷிதர் பாதங்களில் விழுந்ததும், சினமே இல்லாது தீட்ஷிதர் மன்னனைச் சமாதானம் செய்தார். மன்னன் இனி ராஜசேவை தேவையில்லை என்று துறவு பூண்டு சித்தியடைந்ததும் தனிக்கதை.

எனவே, அதிகாரிகளோடு பழகும் போது, நமக்கு நாமே ஒரு வரைமுறை வகுத்துக் கொண்டு அழவோடு பழக வேண்டும். நம்மை விடப் பணம் படைத்தவர்களிடம் பணியாற்றும் போது அதிகம் நெருங்கி விடாமல், நம் நிலையிலிருந்து பழகினால் தன் மானத்தைக் காத்துக் கொள்ளலாம்.

தர்மபுத்ரர் ஒரு சமயம் தன்னை மறைத்துக்கொண்டு, விராட மன்னனிடம் சாதாரண நிலையில் பழக வேண்டி இருந்தது. அப்போது அவரது குருவான தௌம்யா இவ்வாறு அறிவுரை கூறினார்.

"மன்னன் நம்மிடம் மிக்க அன்போடு இருக்கிறார் என்று சலுகைகளை அதிகமாக ஏற்றுக்கொண்டு விடாதே. நெருப்பிடம் பழகுவது போன்று, அதிகம் நெருங்கி விடாமலும், அதே சமயத்தில் அதிகம் விலகி விடாமலும் பழகு."

மன்னரிடம் பழக இந்தக் கட்டுப்பாடு. தெய்வத்திடம் பழகும் முறை நேர்மாறானது. பாதத்தில் வீழ்ந்து ஐக்கியமாகி விட வேண்டும்.

# ஆன்மீகம்

## அதிகார மமதை ஆபத்தை விளைவிக்கும்

தனக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்கின்ற ஒரே தைரியத்தில் கடவுளின் சமூகத்திற்கு விரோதமாக, தவறான செய்கைகளில் ஈடுபட்டால், ஈடுபட்டவனின் முடிவு பரிதாபமாக அமையும் என எச்சரிக்கை செய்கிறது கிறிஸ்தவம்.

பெல்ஷாத்சார் என்றொரு ராஜா. இவன் தனது பிரபுக்களுக்கு பெரிய விருந்தொன்று அளிக்கிறான். இதில் திராட்சை ரசம் குடிப்பதற்காய், தேவாலயத்திலிருந்து பொன், வெள்ளி பாத்திரங்களைக் கொண்டு வர ஆணையிட்டான். தேவாலய பாத்திரங்களில் குடித்து, விக்கிரகங்களைப் போற்றிப் புகழ்கிறான் ராஜா.

அந்த நேரத்தில் கடவுள் அனுப்பிய ஒரு கை தோன்றி, சுவரிலே ஒரு வசனம் எழுதி விட்டு மறைகிறது. இதனைக் கண்ட ராஜா திகைத்து, கலக்கமடைந்து, மிரண்டு போகிறான். அந்த வசனத்தில் அர்த்தம் புரியாததால், அதனை உணர்த்துபவர் தனது ராஜ்ஜியத்தின் மூன்றாவது அதிபதியாக ஆக்கப்படுவான் என அறிவிக்கிறான்.

பாபிலோனியா ஞானிகளால் புரிந்து, உணர்த்த முடியாத அந்த வசனத்தைத் தானியேல் எனும் மனிதன் உணர்த்துகிறான்.

"பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர். அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களில் நீரும், உம்மைச் சார்ந்தோரும் குடித்தீர்கள். தேவனை மகிமைப்படுத்தாமல், அந்நிய தேவர்களை மகிமைப்படுத்தினீர். அப்போது அந்தக் கை தேவனால் அனுப்பப்பட்டு இந்த வசனம் எழுதப்பட்டது.

'மெனே மெனே தெக்கேல், உப்பார்சின்' என்கிற இந்த வசனத்தின் அர்த்தம் என்னவென்றால் 'தேவன் உன் ராஜ்ஜியத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார். நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டாய். உன் ராஜ்ஜியம் பிரிக்கப் பட்டு, மேதியருக்கும், பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது," என்கிறான்.

(தானியேல் 5-28)

அந்த நாளின் இரவிலேயே பெல்ஷாத்சார் அதிகார மமதையில் செயற்பட்டதால் கொலை செய்யப்படுகிறான்.

மனிதன் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கடவுளுக்கே பொறுக்காத வகையில் துஷ்பிரயோகம் செய்யும் போது அதன் விளைவு இப்படித்தான் இருக்கும். மனிதன் கடவுளுக்குப் பயந்து நடக்க வேண்டும்.

## அண்ணல் நபியின் பொன் மொழிகள்

*தன் எதிரியைக் குப்புற வீழ்த்துபவன் வீரன் அல்லன். தனக்கு கோபம் வரும்போது தன்னை அடக்கியாளும் திறன் பெற்றவனே உண்மை வீரன்.*

•

*செல்வம் என்பது பொருள் பெருக்கத்தினால் ஏற்படுவதில்லை. உண்மையான செல்வம் மனத்திருப்தியினாலேயே உண்டாகிறது.*

•

*உங்களில் சிறுவர்கள் மீது அன்பு காட்டாதோரும், முதியோரை கண்ணியம் செய்யாதோரும் என்னைச் சார்ந்தோரல்லர்.*

•

*இறைவனின் தியானமும், அதனைச் சார்ந்தவைகளும் தவிர ஏனைய இவ்வுலகப் பொருட்கள் அனைத்தும் சபிக்கப்பட்டவைகளாகும்.*

•

*பணக்காரர்களை விட ஏழைகள் ஐநூறு ஆண்டுகள் முன்னதாகவே சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள்.*


•

*மக்கள் மீது ஒரு காலம் வரும். அக்காலத்தில் பொய்யர்களும், புழுகர்களும் தலைவர்களாவார்கள். அவர்கள் சொல்வதை மக்கள் உண்மையென நம்புவார்கள்.*

•

*எவர் என் மீது ஸலவாத் மொழிவதை விட்டுவிடுகிறாரோ, அவர் சுவர்க்கத்தின் பாதையைத் தவறவிட்டவராவார்.*


தொகுப்பு: எம்.எச்.எம். ஹாரித்



# விவியன் ரிச்சர்ட்ஸ் விட்டுச்சென்ற இடம் ரிச்சர்ட்ஸனால் நிரப்பப்படுமா?

மேற்கு இந்தியத் தீவின் கிரிக்கெட் வீரர்கள் என்றவுடன் முதலில் நினைவுக்கு வருவது அந்த மெரூன் கலர் தொப்பிதான்.

மேற்கு இந்தியத் தீவின் முன்னாள் கிரிக்கெட் கப்டன் விவியன் ரிச்சட்ஸ். அவருக்கு மெரூன் கலரில் பிரியமோ பிரியம்.



அவரது காரும் மெரூன் கலரில்தான் இருந்தது.

மேற்கு இந்தியத் தீவின் அணிக்கு பலசாலியாக இருந்த அந்த விவியன் ரிச்சட்ஸ் ஓய்வு பெற்றுவிட்டார்.

அவரது இடத்தில் இப்போது கப்டனாக இருப்பவர் ரிச்சட்ஸன்.

முன்னாள் கப்டனதும் இந்நாள் கப்டனதும் பெயரில் சிறு வித்தியாசம்தான். அதனால் பெயர்க் குழப்பங்களும் ஏற்படுவதுண்டு.

தற்போது கப்டனாக உள்ள ரிச்சர்ட்ஸன் ஆரம்பத்தில் கால்பந்து வீரராக இருந்தவர்.

தனது 18 வயதில் சர்வதேச கால்பந்துப் போட்டிகளில் களம் கண்டும் இருக்கிறார்.

18 வயதுவரை கிரிக்கெட்டையே நினைத்துப் பார்க்காத ரிச்சட்ஸனை அவரது நண்பரும் ஆலோசகருமான விக்டர் மைக்கேல் கிரிக்கெட்டின் பக்கம் திரும்ப வைத்தார்.

இரண்டு வருடங்கள் தீவிரப் பயிற்சி பெற்று தன் திறமையை வெளிப்படுத்தினார்.

மேற்கு இந்தியத்தீவின் அணியில் இடம் கிடைத்தது.

தனக்கு முன்பே அணியில் இருந்த கீரின்ட்ஜ், ஹெயின்ஸ், மால்கப் மார்ஷல் போன்ற ஜாம்பவான்களையே பின்தள்ளி விட்டுக் கப்டனாக உயர்ந்துவிட்டார்.

கப்டன் பதவிக்கு பலத்த போட்டி இருந்தது.

ரிச்சர்ட்ஸனுக்கு உயிரபாயம் ஏற்படுமோ என்றுகூட அஞ்சப்பட்டது.

எனினும் கிரிக்கெட் அணியினர் அவரைக் கப்டனாக ஏற்று விளையாட விருப்பம் தெரிவித்தனர்.

விவியன் ரிச்சர்ட்ஸ் விட்டுச் சென்ற இடத்தை ரிச்சர்ட்ஸன் நிரப்புவாரா என்பதே பலரதும் எதிர்பார்ப்பாகும்.

தற்போது மோசம் இல்லாத வகையில் மேற்கு இந்தியத்தீவு அணி விளையாடி வருகிறது. ரிச்சர்ட்ஸன் பழைய பெருமையைக் காப்பார் என்று இரசிகர்கள் நம்பத் தொடங்கிவிட்டனர்.

மேற்கு இந்தியத் தீவின் மிகச் சிறந்த கப்டன்கள் வரிசையில் ரிச்சட்ஸனும் முத்திரை பதிப்பார் என்று நம்பலாம்.

# ஸ்போர்ட்ஸ்

## அட்டகாசமான வைரவிழா! அரங்கேறுகின்றன அதிரடிப் போட்டிகள்!!

இந்தியாவில் பெங்கால் கிரிக்கட் சங்கம் தனது வைர விழாவைக் கொண்டாடுகிறது.

வைரவிழாவை அட்டகாசப்படுத்த நவம்பர் 7ம் திகதி முதல் 6 நாடுகள் கலந்து கொள்ளும் ஒரு நாள் போட்டிகளை நடத்தப் போகிறது. இந்தியாவின் முக்கிய நகரங்களில் போட்டிகள் நடைறப் போகின்றன.

போட்டி அட்டவனை கீழே தரப் படுகிறது.

| திகதி | மோதும் அணிகள் | இடம் |
|---|---|---|
| 7.11.93 | இந்தியா-இலங்கை | கான்பூர் |
| 8.11.93 | பாகிஸ்தான்-சிம்பாபே | சென்னை |
| 9.11.93 | இலங்கை-மே.இ.தீவு | பம்பாய் |
| 10.11.93 | தென்னாபிரிக்கா-சிம்பாபே | பெங்களூர் |
| 11.11.93 | பாகிஸ்தான்-இலங்கை | கோவா |
| 12.11.93 | இந்தியா-தென்னாபிரிக்கா | டெல்லி (பகல்-இரவு) |
| 14.11.93 | தென்னாபிரிக்கா-மே.இ.தீவு | பம்பாய் |
| 15.11.93 | இலங்கை-சிம்பாபே | பாட்னா |
| 16.11.93 | இந்தியா-மே.இ.தீவு | அகமதாபாத் |
| 17.11.93 | பாகிஸ்தான்-தென்னாபிரிக்கா | கட்டாக் |
| 18.11.93 | இந்தியா-சிம்பாப்வே | இந்தூர் |
| 19.11.93 | பாகிஸ்தான்-மே.இ.தீவு | விஜயவாடா |
| 20.11.93 | இலங்கை-தென்னாபிரிக்கா | கௌசாத்தி |
| 21.11.93 | மே.இ.தீவு-சிம்பாப்வே | ஐதராபாத் |
| 22.11.93 | இந்தியா-பாகிஸ்தான் | சண்டிகார் |
| 24.11.93 | முதல் அரைபிறுதி (2-3) | கல்கத்தா (பகல்-இரவு) |
| 25.11.93 | 2வது அரைபிறுதி (1-4) | கல்கத்தா (பகல்-இரவு) |
| 27.11.93 | இறுதிப் போட்டி | கல்கத்தா (பகல்-இரவு) |



## மீண்டும் எழுவாரா ஸ்ரீகாந்த்?

இந்திய கிரிக்கெட் அணியில் ஒரு காலத்தில் விளாசல் மன்னராக இருந்தவர் ஸ்ரீகாந்.

தமிழர் தமிழ்நாட்டுக்காரர்தான்.

அரங்கில் தோன்றினால் அதிரடிதான். பின்னர் இந்திய அணிக்கு கப்டனாகவும் இருந்தார்.

இப்போது ஸ்ரீகாந் இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

முன்னர் போல அவரால் பிரகாசிக்க முடியாமல் போனது தான் காரணம்.

இந்திய அணியில் இல்லாத போதும், தமிழ்நாடு மாநில அணிக்கு இப்போதும் ஸ்ரீகாந் தான் கப்டன்.

அண்மையில் தமிழ்நாட்டில் புச்சிபாபு கோப்பைக்கான போட்டிகள் நடைபெற்றன.

இந்தியாவின் சகல மாநில அணிகளும் பங்கு கொண்டன.

இடையிலே புச்சிபாபு பற்றி ஒரு சிறு குறிப்பு.

100 ஆண்டுகளுக்கு முன் தமிழகத் தலைநகர் சென்னையில் கிரிக்கட் குழு அமைத்து ஆங்கிலேயருக்கு எதிராக விளையாடியவர் புச்சிபாபு.

புச்சிபாபு கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகளில் தமிழக அணியே வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் பழைய ஸ்ரீகாந் முகம் காட்டினார்.

அவர் அடித்த 36 ரன்களில் 4 பவுண்டரி, ஒரு சிக்சர் என்று விளாசி அந்த நாள் விளாசலை நினைவூட்டினார்.

தனது திறமையைத் தொடர்ந்து வெளிப்படுத்தினால் ஸ்ரீகாந் மீண்டும் இந்திய அணியில் இணைக்கப்பட வாய்ப்புண்டு.

தரம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள் ஜுவலர்ஸ்

இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11,
தொ.பேசி: 436331


## காலம் மாறினாலும் கோலம் மாறவில்லை!

1965ம் ஆண்டில் உலக ராணி அவார்தான பெண் அப்சரா ஜெரங்குவா, தாய்லாந்து மங்கை.

இன்று 48 வயது. இப்போதும் அப்சரா சாகவே அழகு பொங்க வாழ்கிறார்.

அப்சராவின் அழகில் மயங்கிய தாய்லாந்து இளவரசர் அவளை மணந்தார். எட்டு வருடங்கள் வாழ்ந்து பிரிந்தனர்.

அந்தக்கால அழகு ராணியை இன்னும் தாய்லாந்து மக்கள் நேசிக்கின்றனர்.

இப்போது இவரைக் கண்டால் கூட்டம் திரண்டு கையெழுத்துக் கேட்கிறது.

காலம் மாறினாலும் கோலம் மாறவில்லை புகழ் மங்கவில்லை.

அப்சரா பெருமைப்படலாம்.






அந்தக்கால நினைவுகளுடன் 1965ஆம் ஆண்டு உலக அழகுராணி

வாரமலர் தினமுரசு

## சாதனைக்குள் ஒரு சாதனை!



மனிதன் விண்வெளிக்கு சென்றதே சாதனைதான் அதிலும் பல சாதனைகள் இருக்கின்றன அதில் ஒரு சாதனை. சாலஞ்சர் என்ற விண்வெளி ஓடம் முதன் முதலாக அதிகளவான வீரர்களோடு பயணம் செய்தது. 8 பேர் வீரர்கள். அதில் ஒருவர் பெண். 7 நாட்கள் 44 நிமிடம் 51 நொடிகள் அந்தப் பயணம் நடந்தது. 1985 ஒக்டோபர் 30 இல் நிகழ்ந்த சாதனை அது. கின்னஸ் புத்தகத்தில் அது குறித்து வைக்கப்பட்டிருக்கிறது.

## சாதனையில் சறுக்கல் இல்லை!




தார்ஜா முலாரி என்ற பின்லாந்தைச் சேர்ந்த பெண், பனிச்சறுக்குப் போட்டியில் வியத்தகு சாதனையை நிலை நாட்டியுள்ளார். 1988 ஏப்ரல் 16ம் திகதி பிரான்சிலுள்ள லெஸ் ஆர்க்ஸ் என்ற இடத்தில் இப்போட்டி இடம் பெற்றது. இவருடைய வேகம் மணிக்கு 214.413 கிலோமீட்டர் (133.234 மைல்)

இதற்கு முந்தைய ஆண்டு-1987 ஏப்ரல் 18ல் இதே இடத்தில் நடைபெற்ற பனிச்சறுக்குப் போட்டியில் பிரிட்டனைச் சேர்ந்த டிவினா கலிசா, எடுத்துக் கொண்ட வேகம் மணிக்கு 191.90 கிலோ மீட்டர் (119.30 மைல்)

## அவியல்

அவியல், துவையல், கடையல் என்று நமது உணவில் சில முறைகளை வகுத்துள்ளனர். இன்று அவியலைத் தயாரிக்கும் முறையினை எடுத்துக் கொள்வோம்.

சாதாரணமாக (தேங்காய்) பால் கறியைப்போலல்லவா? இதே போன்றதுதான் அவியலும், நமது நாட்டில் மட்டுமல்லாமல் தமிழ்நாடு, கேரள மாநிலம் ஆகிய இடங்களில் அவியலுக்கு ஒரு தனி மவுசு உண்டு. சாதத்துடனும் இடியப்பத்துடனும் சேர்த்து உண்பதற்கு தரமான முறையில் அவியலைத் தயாரித்துக் கொண்டாலே போதுமானது. இதற்கு தரமான-சுத்தமான காய்கறிகள்தான் அவசியமானது.



தேவையானவை:
உருளைக்கிழங்கு-2
காரட்- 2
கத்தரிக்காய்-2
முருங்கிக்காய், பரங்கிக்காய்- 1/4 இறாத்தல்
காலி பிளவர்-1/2
பெ.வெங்காயம்- 2
பச்சை மிளகாய்-3
கராம்பு- 6
ஏலக்காய்- 3
கறுவாப்பட்டை- 1 அங்குலம்
இஞ்சி- 1 அங்குலம்
பூண்டு- 1
சீரகம்- 1 தேக்கரண்டி.
பெருஞ்சீரகம்- 1 தேக்கரண்டி.
தேங்காய்ப்பால்- 2 கோப்பை
கொத்தமல்லித்தூள்- 1 1/2 மே.கரண்டி.
கரம் மசாலா- 1 மே.கரண்டி.
மஞ்சள் பொடி- 1/2 தேக்கரண்டி.
எலுமிச்சம்பழம்- 1
தயிர்- 1 1/2 கோப்பை
கொத்தமல்லி கீரை- 2 நெட்டு
கறிவேப்பிலை- 1 நெட்டு
எண்ணெய்- 3 மே.கரண்டி.
உப்பு- தேவைக்கேற்ப.

செய்முறை:

காய்கறிகளை நன்றாகக் கழுவி அளவான துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். உருளைக் கிழங்கையும் தோலைச்சீவி கோணத்துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். வெங்காயத்தையும் வட்ட வடிவமாக வெட்டுதல் நலம். ஏலக்காய், கராம்பு, பட்டை ஆகியவற்றை அரைப்பருவமாக இடித்துக் கொள்ள வேண்டும். இஞ்சியையும் பூண்டையும் அரைத்தெடுக்கவும்.

காய்கறி வகைகள் தேங்காய்ப் பால் சகலவற்றையும் கொள்ளக்கூடிய ஒரு பாத்திரத்தை அளவான சூட்டில் அடுப்பில் வைத்து எண்ணெயைக் கொதிக்கவிட்டு கராம்பு, ஏலக்காய், கறுவாப்பட்டை, இஞ்சி, பூண்டு ஆகியவற்றுடன் வெங்காயத்தையும் போட்டு வதக்கவும். பொன்னிறமாகும் வரை கிளறவும். இதனுள் காய்கறிகளையிட்டு சீரகம் வகைகளையும் போட்டு மூடி 10 நிமிடங்கள் வரை அல்லது காய், கிழங்குகள் வேகும்வரை அடுப்பிலிருக்க விடுங்கள். அடிக்கடி ஓர் அகப்பையால் கிளறி விடுங்கள்.

மூடியைத் திறந்து தேங்காய்ப்பால், தயிர் கரம்மசாலா, மல்லித்தூள் ஆகியவற்றுடன் எலுமிச்சைச்சாறு மற்றும் உப்பையும் விட்டு நன்றாகக் கிளறிவிட்டு மேலும் 10 நிமிடங்கள் கொதி நிலையிலிருக்க விடுங்கள். இறக்குவதற்குச் சற்று முன் கறிவேப்பிலையையும் போட்டு இறக்கி சோற்றுடனோ இடியப்பத்துடனோ பரிமாறலாம்.

★ கரம் மசாலா செய்முறை உள்ளே. வேறோர் பக்கத்தில் பார்க்கவும்.

"ராஜாவின் தென் இந்திய, சிங்கப்பூர் உணவு தயாரிக்கும் வித்தை" என்ற ஆங்கில சமையலை நூலிலிருந்து திரட்டித் தருபவர் திருமதி லொரக்கியம் தியாகராஜா.



## தலைதூக்கும் வன்முறையும் தடுக்கும் இராணுவமும்!

[illegible]




இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 66/1ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்லவா, தலவலில் உள்ள சாமலை அச்சகத்தில் செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது